
# வரலாறு

## தரம் 10

S. M. கண்ணகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01

## வரலாறு என்றால் என்ன?

1.1 வரலாற்றின் அறிமுகம்
1.2 வரலாற்றைக் கற்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள்
1.3 வரலாற்று மூலாதாரங்கள்

1. வரலாறு என்ற பதம் உருவான விதத்தை விளக்குக.
கிரேக்க மொழியான ஸ்ரோறியா (istoria) என்ற சொல்லின் அடிப்படையில் வரலாறு என்று ஆங்கில மொழியில் கூறப்படும் History என்ற பதம் உருவானது.



2. வரலாற்றின் தந்தையாக கருதப்படுபவர் யார்?
கிரேக்கத்தில் வாழ்ந்த ஹெரடோரஸ்
கி.மு. 484 - 430

3. வரலாறு என்ற பதத்திற்கு வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்களைத் தருக. அவர்கள் முன்வைத்த வரைவிலக்கணங்களையும் தருக.
   1. ஹெரடோரஸ்
   2. ஸ்வெர்ட் பிகொட்
   3. பேர்க்ஹாட்

**ஹெரடோரஸ் :**

வரலாறு என்பது ஆராய்ச்சியின் விளைவாக பெறப்பட்டிருக்கும் தகவல்களை உள்ளடக்கியதே. அது காரண காரியத் தொடர்பை கொண்டிருக்கும். கால ஒழுங்கில் முன்னெடுத்துச்செல்லப்படும் உண்மையான சம்பவங்களின் தொகுதியாகும்.

**ஸ்வெர்ட் பிகொட் :**

"புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தை கற்பது" வரலாறு என்றார்.

**பேர்க் ஹாட் :**

ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்கும் அளவிற்கு பெறுமதி மிக்க விடயங்கள் அதற்கு முன்னைய யுகம் ஒன்றிலிருந்து தேடிக் கண்டுபிடித்துக் கொள்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வரலாற்றை கற்பதன்மூலம் நீர் பெறும் முக்கியமான அபிலாசையை விளக்குக.

வரலாற்று நிகழ்வுகளுக்கூடாக உண்மையை தேடிச் செல்வது அதற்கூடாக நிகழ்காலத்தை செம்மைப்படுத்தி எதிர்காலத்தை வெற்றிகரமானதாக ஆக்கிக்கொள்வதுமே அதன் ஒரே அபிலாசை யாக உள்ளது.

6. வரலாற்றை கற்பதன்மூலம் கிடைக்கும் பயன்களைத் தருக?

1. இறந்தகாலம் பற்றி புரிந்துணர்வும் நிகழ்காலம் பற்றிய சரியான அறிவினையும் பெற உதவுகிறது.
2. சர்வதேச ரீதியில் தோன்றும் பிரச்சினைகளைச் சமநிலையில் நோக்குவதற்கு ஏற்ப மனப்பாங்கை வளர்க்கிறது.
3. எந்தவொரு நிகழ்வினதும் செய்தியினதும் கூற்றினதும் தகவலினதும் சரியான இயல்பினை அறிந்துகொள்ளமுடியும்.
4. காரண காரியங்களை கண்டறியக்கூடிய ஆற்றலை வளர்த்துக் கொள்கிறது.
5. பல்வேறு மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை கற்பதன்மூலம் அவர்களின் ஆளுமையிலிருந்தும் நற்பண்புகளில் இருந்தும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.
6. தேசிய அடையாளத்தை கட்டியெழுப்ப பெரிதும் பங்களிப்பு செய்கிறது.
7. பண்டைய கால மக்களின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை கண்டுகொள்ளமுடியும்.
8. பண்டைய கால மக்களின் கலை, கலாசாரப் பழக்கவழக்கம், ஆடை, ஆபரணம் அணியும் முறைகள் என்பவற்றை அறியலாம்.
9. மூலாதாரங்களின் பங்களிப்பை விளக்கிக்கொள்ளமுடியும்.

**வரலாற்று மூலாதாரங்கள்**

7. வரலாற்று மூலாதாரத்தை வகைப்படுத்துக.

மூலாதாரம்

- இலக்கியங்கள்
  - உள்நாட்டு இலக்கியம்
  - வெளிநாட்டு இலக்கியம்
- தொல்பொருள் ஆதாரங்கள்
  1. கல்வெட்டுக்கள்
  2. நாணயங்கள்
  3. சிதைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நினைவுச்சின்னம்
5. சிலைகள்

8. உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களைத் தருக.
   1. தீபவம்சம்
   2. சூலவம்சம்
   3. மகாவம்சம்
   4. நிகாயசங்கிரஹ
   5. இராஜவலி
   6. பூஜாவலி, சமந்தபாசாதிகா

9. தீப வம்சத்தைப் பற்றி விளக்குக? (4ம் நூற்றாண்டு)
கி.பி 4ம் நூற்றாண்டளவில் தீபவம்சம் எழுதப்பட்டது. இந்நூலே இலங்கையின் முதன்முதல் எழுதப்பட்ட பாளி நூலாகும். இந்நூல் நல்ல செய்யுள் அமைப்பையோ, வடிவத்தையோ, அழகையோ கொண்டிராதபோதும் வரலாற்றுக்கு பெரும் உதவியாக இருந்தது.

10. மகாவம்சத்தை பற்றி விளக்குக. (6ம் நூற்றாண்டு)
தீபவம்சம் எழுதப்பட்டு 2 நூற்றாண்டுகளின்பின் மகாவம்சம் பாளி நூலாக வெளிவந்தது. இதில் 37 அத்தியாயங்கள் உண்டு. இதனை மகாநாமதேரர் எழுதினார்.

11. பௌத்த சாசன (சமய) வரலாற்றை கூறும் நூல்களை தருக.
நிகாய சங்கிரஹ, பூஜாவலி, இராஜ வலி, சமந்தபாசாதிகா

12. நிகாயசங்கிரஹ என்ற நூலைப்பற்றி விளக்குக? (14ம் நூற்றாண்டு)
இலங்கையில் பௌத்தமதம் பரவிய, வளர்ந்த வரலாற்றை கம்பளையை ஆட்சிசெய்த 5ம் புவனேகபாகு (1372 - 1391) காலம்வரை இந்நூல் கூறுகின்றது. இந்நூலை ஜெயபாகு தேவரக்கிதர் என்பவர் எழுதினார்.

13. பூஜாவலி என்ற நூலைப்பற்றி விளக்குக? (13ம் நூற்றாண்டு)
புத்தருக்கு செய்யப்பட்ட காணிக்கை தொடர்பான விடயங்களை விபரிக்கின்றது. இது 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூபாத மகாதேவரால் எழுதப்பட்டது.

14. இராஜவலி என்ற நூலைப்பற்றி விளக்குக. (15ம் நூற்றாண்டு)
கோட்டை ராச்சியத்தின் முந்திய பிந்திய தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலிலிருந்து கோட்டை இராச்சியத்தின் ஆரம்ப வரலாற்றை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சமந்த பாசாதிகா என்ற நூலைப் பற்றி தருக?
இலங்கையின் வரலாற்றை அறிய உதவுகின்ற உள்நாட்டு இலக்கிய ஆதாரமாகும். இந்நூலை புத்தகோசர் என்பவர் எழுதினார்.

16. முக்கியமான உள்நாட்டு இலக்கிய ஆதாரங்களையும் நூற்றாண்டு களையும் அட்டவணைப்படுத்துக.

| இலக்கிய ஆதாரங்கள் | நூற்றாண்டு |
|---|---|
| தீப வம்சம் | 4ம் நூற்றாண்டு |
| மகா வம்சம் | 6ம் நூற்றாண்டு |
| நிகாயசங்கிரஹ | 14ம் நூற்றாண்டு |
| பூஜா வலி | 13ம் நூற்றாண்டு |
| இராஜாவலி | 15ம் நூற்றாண்டு |

17. இலங்கை வரலாற்றை கூறும் வெளிநாட்டு இலக்கிய ஆதாரங்களை தருக.
1) ஒனிஸிகிறிட்டஸ்
2) பெமக்ஸ் தனிஸ்
3) பிலினி
4) தொலமி
5) பாகியன் ஆகியோரின் அறிக்கைகள்
6) கொஸ்மஸ்
7) ஹியுங்சாங்
8) மார்க்கோபோலோ
9) இபன்பதூதா
10) எதித்திரியக் கடலின் பெரிப்பிஸஸ் என்ற நூல்

18. ஒனிஸிகிறிட்டஸ் என்பவரை விளக்குக.
அலெக்ஸ்சாண்டரின் படையில் பணியாற்றிய ஒரு மாலுமியான இவர் இலங்கை சென்று மீண்டும் இலங்கை தீவு பற்றி பல செய்திகளை தன் நூலில் கூறுகின்றார்.

19. பெமகஸ்தனிஸ் என்பவரை விளக்குக.
கிரேக்க தூதுவரான இவர் இலங்கை பற்றி பல செய்திகளை கூறியதுடன் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு யானைகள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் வர்த்தக உறவு இருந்ததாகவும் கூறினார்.

20. பிலினி என்பவரை விளக்குக. (1ம் நூற்றாண்டு)
உரோமருடைய மரக்கலமொன்று பலத்த காற்றில் சிக்கி இலங்கைக்கு சென்றதாகவும் அங்கு வந்த அன்னியரை இலங்கைவேந்தன் உபசரித்து தங்க அனுமதித்ததாகவும் பின்னர் இலங்கை மன்னன் "பாதுகாபயன்" உரோமுக்கு தூதுக்குழுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பியதாகவும் அப்போது உரோமை குளோடியஸ் மன்னன் ஆட்சி செய்ததாகவும் பிலினியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையை மகாவம்சம் எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டும் உறுதிசெய்கின்றது.

21. தொலமி என்பவரை விளக்குக. (கி.பி. 2ம் நூற்றாண்டு)

கிரேக்க நாட்டைச் சேர்ந்த இவர் புவியியல் என்ற நூலில் இலங்கையில் வணிகத் தொடர்பை விளக்கியதுடன் உலகப்படத்தை முதன்முதல் வரைந்து இலங்கையை சுட்டிக்காட்டி தப்ரபேன் என அழைத்தார். அதிலிருந்து மேல்நாட்டவர் இலங்கை பற்றி எவ்வளவு அறிந்திருந்தனர் என்பதை உணரலாம்.

22. பாகியன் என்பவரை விளக்குக. (கி.பி 5ம் நூற்றாண்டு)

கி.பி 411 இலங்கைக்கு வந்த பாகியன் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான வணிகத்தொடர்பு, சமயத்தொடர்பு என்பன ஏற்பட வழிவகுத்தான். பாகியன் விட்டுச்சென்ற பிரயாண நினைவேடுகளில் இருந்து இலங்கை பற்றிய பல தகவல்களை பெற்றதுடன் இலங்கையை ஓர் அழகான தீவு எனவும் வர்ணித்தார்.

23. கொஸ்மஸ் என்பவரை விளக்குக. (கி.பி. 6ம் நூற்றாண்டு)

இவர் உரோமானியர் ஆவர். இவர் எழுதிய 'கிறிஸ்தவ இடங்களின் விபரணை' என்ற நூலில் இலங்கையின் நிலைமைகளை கூறியதுடன் மாந்தை என்ற இலங்கைத் துறைமுகம் இந்தியா, சீனா போன்ற நாடுகள் வணிகப் பரிவர்த்தனை நிலையமாக விளங்கியதை எடுத்துக்காட்டுகிறது.

24. மார்க்கோபோலோ என்பவரை விளக்குக. (கி.பி. 13ம் நூற்றாண்டு)

கி.பி 1293 இலங்கைக்கு வந்த சீன அரசு சபைக்கு சென்ற மார்க்கோபோலோ இலங்கை பற்றி பல தகவல்களை கூறியதுடன் இலங்கையை அழகான தீவெனவும் வர்ணித்துள்ளார்.

25. இபன்பதூதா என்பவரைப்பற்றி விளக்குக. (கி.பி 14ம் நூற்றாண்டு)

கி.பி. 1344ல் இலங்கைக்கு வந்ததாகவும், சிவனொளிபாத மலையை தரிசித்தான் எனவும் அவனை செகராசசேகரன் வரவேற்றதாகவும் உபசரித்ததாகவும் கூறப்படுகின்றது.

26. கல்வெட்டு சார்ந்த மூலாதாரங்களை தருக.

| | |
|---|---|
| 1. கல்வெட்டுக்கள் | 2. பொன் தகடுகள் |
| 3. செப்பேடுகள் | 4. களிமண் தட்டுக்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வெட்டுக்கள்

27. கல்வெட்டுக்கள் பற்றி விளக்குக.

தொல்பொருள் அகழ்வின் விளைவாக கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்றன. அக்கல்வெட்டுக்கள் வரலாற்றுக்கு தெளிவையும், உண்மைத்தன்மையையும், உறுதியையும், பலத்தையும் வழங்குகின்றன. இது இலக்கிய ஆதாரத்தின் உரைகல்லாகவும் விளங்குகிறது.

28. கல்வெட்டுக்களை வகைப்படுத்துக.

1. குகைக்கல்வெட்டு
2. தூண் கல்வெட்டு
3. கற்பலகை கல்வெட்டு
4. குன்றுக் கல்வெட்டு

29. குகைக் கல்வெட்டுப் பற்றி விளக்குக.

கற்குகைகளில் கற்பீலிக்குச் சற்றுக்கீழ் பிராமிய எழுத்துக்களில் மதகுருமாருக்கு தானம் செய்யப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்காலத்திலும் எதிர்காலத்திலும் நான்கு திசைகளிலிருந்தும் வருகைதரும் மதகுருமாருக்கு காணிக்கையாக்கப்பட்டுள்ளது என உள்ளது.

காணிக்கையாக்கப்பட்டு இருக்கும் நபரின் அந்தஸ்து தொழில் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

30. தூண் கல்வெட்டுப் பற்றி விளக்குக.

1. புனிதத் தலத்திற்கு எதிரில் கற்றூண் வடிவில் எழுதிய ஆவணமாகும்.
2. நாலந்த தூபி, நாலந்த கொடிகே ஆகியவற்றின் எதிரில் தூண் கல்வெட்டு காணப்படுகிறது.
3. மதகுருவுக்குரிய நிலத்தை தவறாக உபயோகித்தால் அடுத்த பிறவியில் நாய், காகம் போன்ற பிராணிகளாக பிறப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
4. பசினமதி தூண் கல்வெட்டில் சில சட்டதிட்டங்களின் தொகுதி பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கற்பலகை கல்வெட்டை பற்றி விளக்குக.
   1. கல்லினால் உருவாக்கப்பட்ட தட்டையான ஒரு பலகையில் பொறிப்பது கற்பலகை கல்வெட்டாகும்.
   2. மதகுருவுக்கு விகாரைகள் தானம் செய்யப்பட்டபோது பொறித்த கல்வெட்டாகும்.
   3. 4ம் மகிந்தனின் மிகுந்தலை பலகை கல்வெட்டில் விகாரைத் தொகுதி அதன் நிர்வாகம் அது தொடர்பான சட்டதிட்டங்கள் கொடுப்பனவு போன்றன கூறப்படுகின்றது.

32. குன்றுக் கல்வெட்டு என்பதை விளக்குக.
   1. பொலனறுவை யுகத்தின் நிஸ்ஸங்கமல்லன் மகா பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் கல்வெட்டுக்களில் விகாரை, குளம் ஆகிய வற்றை நிர்மானித்து அதனருகில் இருக்கும் குன்றில் கல்வெட்டைப் பொறித்ததாக கூறப்படுகிறது. அதனையே குன்றுக் கல்வெட்டு என அழைத்தனர்.
   2. குன்றுக் கல்வெட்டுக்களை கல்விகாரை, கடலாதெனிய விகாரை, தம்புள்ள குகை விகாரை, ரஸ்வெறெகர என்பவற்றுக்கு அருகே காணமுடியும்.

33. தங்கத் தகடுகள் தொடர்பான மூலாதாரத்தை விளக்குக.
   1. அபயகிரிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராட்சியின் போது அகழ்ந்தெடுக்கப்பட்ட தங்கப்பாத்திரங்கள் அக்கால மொழி, எழுத்து முறை பற்றிய தகவல்களை வழங்கியுள்ளது.
   2. வசப மன்னன் காலத்தில் தங்கத்தில் பொறிக்கப்பட்ட 'வல்லிபுரம் சாசனம்' அவனது ஆட்சி யாழ்ப்பாணத் தீபகற்பம் வரை வியாபித்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

34. செப்புத் தகடுகள் தொடர்பான மூலாதாரத்தை விளக்குக.
1ம் விஜயபாகு மன்னன் காலத்தில் 'பனாகடுவ செப்புச் சாசனம்' அக்காலத்தில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பான முக்கிய ஆவணமாகும்.

35. களிமண் தட்டுக்கள் மூலாதாரமாக விளங்கியதை விளக்குக.
   1. களிமண் தட்டுக்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் ஆவணமாகும்.
   2. யூப்ரடீஸ், தைக்ரீஸ் நதிகளின் பள்ளத்தாக்கில் உருவாகிய மெஸபத்தோமிய நாகரிகத்தில் ஒரு தபால் அட்டை அளவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஆயிரக்கணக்கான களிமண் தட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

3. அம்மக்களின் சட்டம், மருத்துவ முறைகள் குறித்த தகவல் பொறிக்கப்பட்டுள்ளன.

36. இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த கல்வெட்டு எது?
கி.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'பிராமிய கல்வெட்டு'

37. கல்வெட்டுக்களில் இருந்து எவ்வாறான விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டது?
1. சமயத்திற்கு பங்களிப்பு செய்தோர் விபரம்
2. அரசனது மரபையும் அவன் புகழ் இயம்பும் வாக்கியமும்
3. மன்னர்களின் மரவு வழிகள் பட்டப் பெயர்கள்
4. ஆட்சிக் காலங்கள்
5. ஆட்சியின் பரப்பு அல்லது எல்லை
6. நாட்டின் நிர்வாக ஒழுங்குகள்
7. வரி முறைகள்

38. இலங்கையில் எந்தெந்த நாணயங்கள் காணப்பட்டன.
உரோம், இந்தியா, சீனா, அரபு நாட்டு நாணயங்கள்

39. நாணயத்தின் மூலம் எவ்வாறு உண்மையை தெளிவுபடுத்தலாம் என்பதை விளக்குக.
நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள், உலோகத்தின் தன்மை, நிறை, பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் என்பவற்றை கொண்டு பல உண்மைகளை தெளிவுபடுத்த முடியும்.

40. கண்டெடுக்கப்பட்ட நாணயங்களிலிருந்து எவ்வாறான தகவல்களை பெறமுடியும்?
1. நாட்டின் பொருளாதார நிலையையும் நடைபெற்ற இடங்களையும் தெரிந்துகொள்ளமுடியும்.
2. வெளிநாட்டு வணிகம் பற்றி அறியலாம்.
3. அதில் ஈடுபட்ட நாடுகளை கண்டுகொள்ளலாம்.
4. ஏற்றுமதி இறக்குமதி இடம்பெற்ற துறைமுகங்களை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 02

## ஆரியரின் இந்திய வருகை

1. சிந்து சமவெளி நாகரிகம்
2. இந்தியாவில் ஆரியக் குடியேற்றங்கள் நிறுவப்படுதல்
3. பதினாறு குடியேற்றங்கள்
4. மௌரிய அரச வம்சம்

1. இந்தியாவின் மறுபெயர்களைத் தருக.
   பாரததேசம், காந்திதேசம், இமயநாடு

2. இந்தியாவின் எல்லையை வயைறுக்கவும்.
   வடக்கே - இமய மலைத்தொடர்
   கிழக்கே - வங்காள விரிகுடா
   தெற்கே - பாக்குநீரிணை
   மேற்கே - அரபிக் கடல்
   வடமேற்கே - இந்துகுஸ் மலைத்தொடர்

3. இந்திய உபகண்டம் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?
   வடஇந்தியா, தென்னிந்தியா, தக்கினபீட பூமி

4. இந்தியா பல்வேறு நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்த ஏதுவான துறைமுகங்களையும், கணவாய்களையும் தருக.

| துறைமுகம் | கணவாய் |
|---|---|
| 1. பாறுகச்சா | 1. கைபர் |
| 2. கப்பறாக | 2. போலின் |
| 3. தாம்றலிப்தி | |
| 4. காவேரிப்பட்டினம் | |

5. சிந்துவெளி நாகரிகம் தொடர்பான தகவல்களை தருக.
   1. கி.மு 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆண்டுகளை இந்நாகரிகம் கொண்டுள்ளது.
   2. இந்திய நாகரிகமானது இந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்து ஆரம்பமானது.
   3. சிந்துவெளியில் வாழ்ந்தோர் திராவிடர்கள் என உறுதிசெய்யப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அனைத்து வசதிகளுடனும் ஆடம்பரத்துடனும் தன்னிறைவுடனும் வாழ்ந்த மக்கள் நாகரிகத்தின் உச்சியில் இருந்தனர்.
5. இந் நாகரிகத்தின் மறைவிற்கு ஆரியர்களின் குடியேற்றங்களே காரணம் எனலாம்.

6. ஆரியர் இந்தியாவிற்கு வருகைதந்த விதத்தினை விளக்குக.

மத்திய ஆசியாவிலுள்ள ஸ்ரெப்ஸ் புல்வெளியில் இருந்து புறப்பட்ட இவர்கள் ஈரான், ஆப்கானிஸ்தான் ஊடாக காபூன் பள்ளத்தாக்கு கைபற் கணவாய் ஊடாக கூட்டம் கூட்டமாக இந்தியாவிற்கு வந்து கி.மு. 1500ம் ஆண்டளவில் குடியேறியதாகவும் பின் கி.மு. 1000 ஆண்டளவில் வடஇந்தியா முழுவதையும் ஆட்சிக்கு உட்படுத்தி 'ஆரிய வர்த்தம்' என பெயரிடப்பட்டதாகவும் இவர்களே இந்திய நாகரிகத்தை கட்டியெழுப்பியவர்கள் எனவும் நம்பப்படுகிறது.

7. ஆரியரின் சமூக அமைப்பில் காணப்பட்ட முக்கியமான அம்சங்களை தருக.
1. சமூக அமைப்பின் அலகாக குடும்பம் விளங்கியது.
2. ஆரியர் சமூகம் ஒரு தந்தைவழிச் சமூகமாக இருந்துவந்தது.
3. குடும்பங்கள் இணைந்து உருவான பெரிய அலகுகள் சமூகம் அல்லது சாதிகள் ஆகும்.

8. ஆரியரின் பரம்பலினை கூறும் மூலாதாரங்களை தருக.
1. நான்கு வேதங்கள்
2. பிராமணங்கள்
3. உபநிடதங்கள்
4. புராணங்கள்
5. மகாபாரதம்
6. இராமாயணம்

9. ஆரியர் சமூகத்தில் காணப்பட்ட நான்கு சாதிப் பிரிவுகளையும் தருக.

| | சாதியினர் | பொறுப்புக்கள் |
|---|---|---|
| 1. | பிராமணர் (பார்ப்பனர்) | வேதங்களை ஓதிய குடும்பங்களின் பிரிவினர் |
| 2. | சத்திரியர் (பொருணர்) | போர்த்தொழிலில் ஈடுபட்ட பிரிவினர் |
| 3. | வைஷிகர் (உழவர்) | தொழிலாளரையும் வணிகரையும் கொண்ட பிரிவினர் |
| 4. | சூத்திரர் (ஊழியர்) | ஏனைய கோத்திரங்களிலிருந்து அடிமைப்பட்ட பிரிவினர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆரியர் இந்தியாவில் முதன்முதலில் குடியேறிய ஆற்றுப்பள்ளத் தாக்கு எது?
இந்துநதியை அண்டியுள்ள சப்த சிந்து பிரதேசத்தில் (பஞ்சாப்)

11. ஆரியரின் சமய வழிபாட்டு முறைகள் பற்றிய தகவல்களை தருக.
1. ஆரியர் இயற்கை சக்திகளை தெய்வங்களாக வணங்கினர்.
2. ஆரியர் சூரியன், இந்திரன், மித்திரன், அக்கினி, வர்ணன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய தெய்வங்களை வணங்கினர்.
3. ஆரியரின் தெய்வங்களில் இந்திரன் முக்கியம் பெற்றிருந்தான்.
4. இக்காலங்களிலேயே சமண பௌத்த மதங்களும் தோன்றின.

12. ஆரியரின் அரசியல் ரீதியான வளர்ச்சியை விளக்குக.
ஆரியர் ஒருங்கே வாழ்ந்தனர். அவர்களின் முக்கியமான பணி சமூகப்பணி ஆகும். அவர்களின் குழுத் தலைவனை ஆரம்பத்தில் கிராமணி (காமினி) எனவும் பின்னர் சிறு இராட்சியங்களின் தலைவனாகவும் இராஜனாகவும் செயற்பட்டான்.
அரசனுக்கு ஆலோசனை வழங்க சமிதி, சபா என்ற இரு சபைகள் இருந்தன. இச் சபையின் கீழிருந்த மன்னன் நீதி வழங்குவதில் நேரடித் தொடர்பு கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

13. வடமொழி தோன்றிய விதத்தினை விளக்குக.
இருக்கு வேதத்தினதும் ஏனைய வேதங்களின் மொழியையும் அடிப்படையாகக் கொண்டு வடமொழி உருவானது.

14. ஆரியரின் தொழில் ரீதியான வளர்ச்சிப் போக்கை விளக்குக.
இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் ஆரியர் நாடோடி இடையர்களாக வாழ்ந்தனர். சிறிது காலத்தின்பின்னர் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை மேற்கொண்டு விவசாய வாழ்க்கை முறையை கைக்கொண்டனர்.

## பதினாறு குடியேற்றங்கள்


15. ஆரியரின் பதினாறு குடியேற்றங்களும் பரவிய விதத்தை விளக்குக.
வடஇந்தியாவிலும் தக்கிணபீட பூமியிலும் ஆரியர் ஆயிரக் கணக்கான சிறுசிறு இராட்சியங்களை நிறுவியிருந்தனர். அவை பின்னர் 16 பாரிய குடியேற்றங்களாக மாற்றமடைந்துள்ளது. அதனையே மஹாஜன பதங்கள் என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பதினாறு குடியேற்றங்களையும் அதன் தலைநகரங்களையும் அட்டவணைப்படுத்துக.

| | இராட்சியங்கள் | தலைநகர் |
|---|---|---|
| 1. | அங்கம் | சம்பா |
| 2. | மகதம் | பவுளுப்/ கிரிவ்ராஜ |
| 3. | காசி | வரநாசி |
| 4. | கோசலை | குசவதி |
| 5. | வஜ்ஜி | குசிநாற |
| 6. | மல்ல | வைசாலி |
| 7. | வத்சய | கௌசம்பி |
| 8. | சேதி | சோத்திமதி |
| 9. | அவந்தி | உஜ்ஜேனி |
| 10. | மத்ஸயம் | விரட் |
| 11. | சூரசேனன் | மதுரா |
| 12. | குரு | டில்லி |
| 13. | பாஞ்சாளம் | அபிச்சத்ர |
| 14. | காந்தாரம் | தக்ஷிலா |
| 15. | காம்போஜா | காபோ |
| 16. | அஸ்காமம் | பிரதிஸ்தன |




17. பதினாறு இராட்சியங்களும் பெரிய இராட்சியங்கள் நான்கை குறிப்பிட்டு அதில் முக்கியமான இராட்சியத்தை குறிப்பிடுக.
மகதம், மத்ஸயம், அவந்தி, கோசலை
முக்கியமானது - மகதம்

## மகதப் பேரரசு

18. மகதப் பேரரசு வளர்ச்சிபெற்ற விதத்தை விளக்குக.

மகதம் சில இராட்சியங்களை இணைத்தும் சிற்சில இராட்சியங்களுடன் நல்லுறவை ஏற்படுத்தியும் ஏனைய இராட்சியங்களை கட்டுப்படுத்தி பலம்வாய்ந்த இராட்சியமாகவும் முதன்மை இராட்சியமாகவும் வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மகதப் பேரரசின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த மன்னர்களை விளக்குக.

1. பிம்பிசாரன் (கி.மு. 545 - 493) றஜ்ஹக என்ற இடத்தை தலைநகராக்கி அண்டை நாடான அங்கத்தை அடிமைப்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்தினான்.
2. பிம்பிசாரனின் மகனான அஜாதசத்து (கி.மு. 493 - 461) தலைநகரத்தை றஸ்ஹகவிலிருந்து பாடலிபுரத்திற்கு மாற்றி ஆக்கிரமிப்பு கொள்கையை பின்பற்றினான்.

20. மகதம் எந்த வம்சத்தவரின் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. அந்த வம்சத்தின் முதலும் இறுதியுமாக ஆட்சிசெய்தவர்கள் யாவர்?
நந்த வம்சம்
முதல் - மகாபத்மநந்த இறுதி - தனநந்த

21. மகதம் பலம் வாய்ந்த பேரரசாக காணப்பட்டதற்கான சான்றினை தருக.
கிரேக்க இனத்தைச் சேர்ந்த மகா அலெக்ஸ்சாண்டரினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பின்போது கங்கா யமுனா சமவெளிகள் ஆக்கிரமிக்க முடியாமல் போனதிலிருந்து மகதத்தின் பலம் நிரூபிக்கப்பட்டது.

22. மகதம் நந்த வம்சத்திடமிருந்து எந்த வம்சத்திடம் கைமாறியது.
மௌரிய வம்சத்திடம்

## மௌரிய வம்சம்

23. மௌரிய அரசவம்சம் தோற்றம்பெற்ற விதத்தை விளக்குக.
கௌடில்யன் என்ற பிராமண என்ற அரசியல் அறிஞனின் ஆலோசனையின்படி சந்திரகுப்தன் என்ற இளவரசன் தனநந்தனை கொன்றுவிட்டு மௌரிய அரச வம்சத்தை தோற்றுவித்தான்.

24. மௌரிய வம்சத்தின் முதல் மூன்று மன்னர்களையும் தருக.
சந்திரகுப்தன் —மகன்→ பிந்துசாரன் —மகன்→ அசோகன்

25. அசோகன் கலிங்கத்தை கைப்பற்றியபோது அதனை ஏன் வெற்றியாக கருதவில்லை?
அப்போரானது நாட்டு மக்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியமையால் அப்போரில் அவனுக்கு கிடைத்த வெற்றியை வெற்றியாக கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. புத்த தர்ம போதனையால் அவனது கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்குக.

புத்த தர்ம போதனையின்பின் போர்தொடுத்து நாடுகளை கைப்பற்றும் திக்விஜய கொள்கையை கைவிட்டு தர்மத்தினால் மனித உளத்தை வெல்லும் தர்மவிஜய கொள்கையை கைக்கொண்டு போர் பாசறையின் விளக்கத்திற்கு பதிலாக தர்மத்தை எங்கும் முழங்கச்செய்தான்.

நாட்டு மக்கள் அனைவரும் எனது குழந்தைகள். அவர்களது சுக நலன் பேணுவது எனது தலையாய கடமை என கூறினான்.

27. அசோகன் மேற்கொண்ட சமூக சேவையை குறிப்பிடுக.

1. பெரும் வீதிகளை அமைத்து பிரயாண வசதிகளை செய்தான்.
2. பிரயாணிகளின் நலன்கருதி வீதியோரங்களில் தங்குமிடம், கிணறுகள், கேணிகள் என்பவற்றை அமைத்தான்.
3. நிழலுக்காக வீதியின் இரு மருங்கிலும் மரங்களை நட்டு வித்தான்.
4. மக்களின் வைத்தியசாலைகளைப்போல மிருக வைத்தியசாலை களையும் அமைத்தான்.
5. சமூக சேவையை மேற்கொள்ளும் பொருட்டு தர்ம மகாத்திரன் எனும் அலுவல்களை நியமித்தான்.

28. அசோகன் தனது தூதுக்குழுவை எத்தனை நாடுகளுக்கு அனுப்பினான்? அவை எவை?

ஒன்பது நாடுகளுக்கு

யப்பான், சீனா, தீபெத், சிரியா, எகிப்து, சைரீனா, மசிடோனியா, எபிரஸ், இலங்கை

29. அசோகன் அமைத்த தூபிகளில் உலகப் புகழ்பெற்ற தூபி எது?

சாஞ்சி தூபி

30. சாராணாத்தில் உள்ள அசோகமன்னனின் கற்றூண் பற்றி விளக்குக.



1. அசோகத்தூண்கள் மிக முக்கியமான கலைப் பாரம்பரியமாகும்.
2. சரளைக் கற்களைக் கொண்டு செப்ப னிடப்பட்டுள்ளது.
3. ஸ்தம்பத்தின் உச்சியில் நான்கு திசை களையும் நோக்கி அமர்ந்திருக்கும் நான்கு சிங்க உருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அதன்கீழ் தர்மசக்கரம் வைக்கப்பட்டிருக்கும்.
5. அதற்குக்கீழ் அலங்காரவடிவம் வரையப்பட்டுள்ளது.
6. இந்தியாவின் அரச இலட்சினையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

31. அசோக மன்னனை வரலாற்று ஆசிரியர் எச். ஜி செல்ஸ் எவ்வாறு வர்ணிக்கிறார்?

"உலக வரலாற்றிலே ஒளிருகின்ற ஆயிரக்கணக்கான தாரகைகளின் நடுவே தங்கத்தாரகை போன்றவன் அசோகன்"

32. அசோக மன்னனின் சமயக்கொள்கையைத் தருக.
1. பிற மதங்களுக்கு ஆதரவு வழங்கியமை.
2. பௌத்த சாசனத்தை மீளாய்வு செய்தமை.
3. ஆஜீவர்களுக்கு பூஜை செய்தமை.

33. மௌரீகப் பேரரசு வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்களைத் தருக.
1. அசோகனுக்கு பின்வந்த மன்னர்கள் பரந்த பேரரசை ஆட்சி செய்ய வல்லமையற்றவர்களாக இருந்தமை.
2. வடமேற்கில் ஏற்பட்ட அன்னியப் படையெடுப்புகள்.
3. பிராந்திய மன்னர்கள் சுதந்திரமான மன்னர்களாவதற்கு மேற்கொண்ட போர்.

34. மகதத்தில் குப்த பேரரசு எக்காலப்பகுதியில் வளர்ச்சி அடைந்தது?

மௌரிகப் பேரரசு வீழ்ச்சியடைந்து ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின் குப்த பேரரசு வளர்ச்சியடைந்தது.

35. குப்த பேரரசின் முதல் மன்னன் யார்?

சந்திரகுப்தன் (மகாராசாதிராசன் கி.பி. 320)

36. குப்த பரம்பரையின் மன்னர்களை ஒழுங்காகத் தருக.

| மன்னர்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|
| சந்திரகுப்தன் | கி.பி. 320 - 335 |
| சமுத்திரகுப்தன் | கி.பி. 335 - 380 |
| 2ம் சந்திரகுப்தன் | கி.பி. 380 - 414 |
| குமாரகுப்தன் | கி.பி. 414 - 455 |
| ஸ்கந்த குப்தன் | கி.பி. 455 - 467 |

Note : தந்தையின்பின் மகன்களின் ஆட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. குப்தப் பேரரசு காலத்தில் மகதம் எவ்வாறு வியாபித்திருந்தது?

கிழக்கில் வங்காளம், மேற்கில் பஞ்சாப், வடக்கில் இமயம், தெற்கில் விந்திய மலை வரையிலும் வியாபித்திருந்தது.

38. சந்திரகுப்தனின் ஆட்சி பற்றி விளக்குக.

1. குப்தப் பேரரசின் முதல் மன்னனாவான். இவன் கி.பி. 320ல் பதவியேற்றான்.
2. மகாராசாதிராஜன் என்ற பட்டப்பெயரினால் அழைக்கப்பட்டான்.
3. ஆட்சியை ஸ்திரப்படுத்த விச்சபி வம்சத்தில் மணம் செய்தான்.
4. இம்மன்னன் தங்க நாணயங்களில் மனைவியின் உருவமும் அவனருகே பொறிக்கப்பட்டுள்ளது.

39. சமுத்திர குப்தனின் ஆட்சியின் சிறப்புக்களைத் தருக.

1. வரலாற்று ஆசிரியர்கள் இம்மன்னனை "இந்தியாவின் நெப்போலியன்" என அழைக்கின்றனர்.
2. இம்மன்னனால் வெல்லப்பட்ட நாடுகளின் பெயர்கள் கவிஞன் ஹரிசேனனால் வரையப்பட்ட அலகபாத் கல்வெட்டில் காணப்படுகின்றது.
3. இம்மன்னன் திக் விஜயங்களை மேற்கொண்டு உலகு அனைத்தையும் வென்றான் என கற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
4. சிறந்த இசை கலைஞனாக விளங்கினான் என்பதை வீணை வாசிக்கும் படங்கள் பல நாணயங்களில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து தெரியவந்தது.
5. இந்துமத தலைவனாக இருந்த போதும் ஏனைய மதங்களுக்கு சலுகைகளையும், ஆதரவினையும் வழங்கினான்.
6. இலங்கை மன்னன் கீர்த்திசிறி மேகவண்ணன் இந்தியாவில் தங்குமிடம் அமைக்க அனுமதி வழங்கினான்.




40. 2ம் சந்திரகுப்தனின் ஆட்சியின் சிறப்புக்களை தருக.

1. இம்மன்னன் விக்கிரமாதித்தன் என்ற பெயரிலும் அழைக்கப் படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இம்மன்னனின் ஆட்சிக்காலம் குப்தர்களின் பொற்காலம்.
3. இம்மன்னன் மேற்கே அரபிக்கடல் வரை இராச்சியத்தை விரிவு படுத்தி பலம்பொருந்திய மன்னனாக விளங்கினான்.
4. இவன் நாகஅரசை வென்று நாகவம்ச அரசி குவேர நாகாவைத் திருமணம் செய்தான்.
5. இவனது ஆட்சிக்காலம் செல்வச்செழிப்புடைய சிறந்த பொலிவுடைய தங்க நாணயங்கள் வெளியிடப்பட்ட காலமாகும்.

41. குமாரகுப்தனின் ஆட்சியின் சிறப்புக்களைத் தருக.
1. இம்மன்னன் மகேந்திரதாதித்தியன் என்ற பட்டத்தை பயன் படுத்தினான்.
2. இம்மன்னன் காலத்தில் நாலந்தாவில் பெரும் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
3. இம்மன்னன் காலத்திலேயே குப்தப் பேரரசின் பலம் படிப்படி யாக வீழ்ச்சியடைந்தது.

## குப்தர் யுகத்தின் கலை வளர்ச்சி

42. குப்தர் காலத்தில் மதப்பிரிவை விளக்கி வரையறுக்கவும்.
குப்தர் காலத்தில் இந்துமதமும், வைணவ மதமும் வளர்ச்சி பெற்று விளங்கின. ஆனால் முன்னர் நன்னிலையில் இருந்த சமண மதமும் பௌத்த மதமும் பாதிக்கப்பட்டன.

| மதங்கள் | மதங்களின் வகைகள் |
|---|---|
| 1. இந்துமதம் | 1. பிரமாவை வழிபடுதல் |
| | 2. விஷ்ணு வழிபாடு |
| | 3. சிவ வழிபாடு |
| 2. சமண மதம் | 1. ஸ்வேதாம்பர (வெள்ளை ஆடை அணிதல்) |
| | 2. திகம்பர (ஆடை அணியாதிருத்தல்) |
| 3. பௌத்த மதம் | 1. தேரவாதம் |
| | 2. மகாயானம் |

43. குப்தர் கால சிற்பக்கலையின் சிறப்புக்களை விளக்குக.
இக்கால கட்டத்தில் பாரிய அளவில் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் சாரணாத் புத்தர் சிலை உலகப்புகழ் பெற்றதாகும். இக்கலைப்படைப்பானது சிற்பக் கலைப்படைப்பின் உன்னத நிலையை எடுத்துக்காட்டுகின்றது.
உ - ம் : சாரணாத், மதுரா, காந்தார, புத்தர்சிலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. குப்தர் கால சிற்பக் கலைப் படைப்புக்கள் இலங்கையிலும் காணப்படுகிறது. அக்கலைப் படைப்புக்களைத் தருக.

1. இசுருமுனியவிலுள்ள காதலர் ஜோடி
2. சந்திரவட்டக்கல்
3. புத்தரின் , சமாதிச்சிலை (மகாமேகவனம்)
4. புத்தரின் அமர்ந்தசிலை (தொழுவில)

45. குப்தர் கால ஓவியக்கலையின் சிறப்புக்களைத் தருக.

1. குப்தர்காலம் ஓவியக்கலையின் தலைசிறந்த காலமாக கருதப் படுகின்றது.
2. அஜந்தாக் குகைகளில் வரையப்பட்ட ஓவியம் இங்கு சிறப்புப் பெறுகிறது.
3. குகையின் கடினமான சுவர்களில் களிமண் படையின் மூலம் செப்பனிடப்பட்டு ஓவியம் வரையப்பட்டதிலிருந்து
4. ஓவியங்களின் வர்ணங்கள் இன்றும்கூட உயிர்த்துடிப்புடன் விளங்குவதனால்
5. அஜந்தா ஓவியமும் சிகிரியா ஓவியமும் ஒரே இயல்பைக் கொண்டிருப்பதிலிருந்து.

46. குப்தர் காலத்து இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு ஏதுவான காரணிகளைத் தருக.

1. சமஸ்கிருத மொழியும், பாளி மொழியும் பயன்படுத்தப்பட்டன.
2. காளிதாசன் இக்காலத்தில் வாழ்ந்த சிறந்த கலைஞன் ஆவான்.
3. காளிதாசனின் மேகதூதம் என்ற காவியம் புகழ்பெற்ற காவிய மாகும்.
4. இருதுசங்காரம், குமார சம்பவம், இரகு வம்சம், சாகுந்தலம் போன்ற நாடகங்கள் மிகச்சிறந்த படைப்பாகும்.
5. சாகுந்தலம் என்ற நாடகம் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு தலைசிறந்த படைப்பாக அங்கீகரிக்கப்பட் டுள்ளது.
6. சமய நூல்களில் விஷ்ணு வழிபாடு தொடர்பான விஷ்ணு மூர்த்தியும், சிவபெருமான் குறித்து எழுதப்பட்ட சிவபுராணம் என்ற நூலும்

47. குப்தர் காலத்தில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களைத் தருக.
நாலந்தா, தட்சசீலம், விக்ரமசிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. நாலந்தாவில் கல்விகற்ற சீனச் சஞ்சாரி யார்?
சீனாவின் தேச சஞ்சாரியான பிக்கு ஹியுங்சாங் நாலந்தாவில மூன்று வருடம் கல்விகற்றதாக கூறப்படுகிறது.

49. குப்தர் கால விஞ்ஞானிகளைத் தருக.
ஆரியபடர், வராகமி ஹிரர்

50. குப்தர் காலத்தில் பாகியன் பிக்குவிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களைத் தருக.
1. மூன்று வருடம் பாடலிபுரத்தில் வசித்துள்ளான்.
2. மக்கள் பெருமளவுக்கு சுகபோக வாழ்க்கையை நடத்தினார்
3. தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூக நிலை இருந்தமை.
4. தாழ்ந்த குலத்தவர் நகரத்திற்கு உள்ளேயும், சண்டாளர் (உயர்குலத்தவர்) நகரத்திற்கு வெளியேயும் வாழ்ந்தனர்.
5. குப்தர் இந்துக்களாக இருந்தபோதிலும் அனைத்து மதத்திற்கும் ஆதரவு வழங்கினான்.

51. குப்தப் பேரரசு வீழ்ச்சியடைய தோற்றம்பெற்ற வம்சம் எது?
குஹாணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 03

# வரலாற்றுக்கு முந்திய யுகம் முதல் பொலநறுவை யுகத்தின் இறுதிவரையிலான இலங்கை வரலாறு

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
2. ஆரியக் குடியேற்றங்கள்
3. பொலநறுவை இராச்சியத்தின் இறுதிவரை அரசியல் வரலாறு

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

1. வரலாற்றுக் காலத்தை வரையறுக்கவும்?
   இலங்கைக்கு கி.மு. 6ம் நூற்றாண்டில் ஆரியர் வருகை தந்தனர்.

2. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை வரையறுக்கவும்?
   ஆரியரின் வருகைக்கு முன் காணப்பட்ட வரலாற்றுக் காலத்தையே வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்கின்றோம். (கி.மு. 6ம் நூற்றாண்டு)

3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த சுதேச மக்களைத் தருக.
   இயக்கர், நாகர், அரக்கர், இராக்கதர்

4. ஆரியர் வருகைக்கு முன்பு மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களை தருக.
   i. பலாங்கொடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராட்சியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள்.
   ii. கர்ண பரம்பரைக் கதைகள்
   iii. ஆரியர் வரும்போது குவேனி என்ற பெண் நூல் நூற்றுக் கொண்டிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.
   iv. இதிகாசங்களில் இருந்து

5. பலாங்கொடையில் கண்டெடுக்கப்பட்ட மனித இனம் எது?
   ஹோமோ ஷோப்பியன்ஸ் (மூளை நன்கு விருத்தியடைந்த மனிதன்

6. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்த முக்கிய இடங்களைத் தருக.
   பொம்பரிப்பு
   பலாங்கொட குகை
   குருகே குகை
   பெல்லன்பதி பெலஸ்ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இன்பன் கட்டுவ | குருவிற்ற |
| பாகியன் கலை | பட்டதொம்ப |
| இராவண எல்ல | மாதோட்டம் |
| புந்தல | இரணமடு |
| அலுவென | |

7. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் பொதுவான இயல்பைத் தருக.
   - i. சுற்றாடலில் கிடைத்தவற்றை பயன்படுத்தியுள்ளனர்.
   - ii. ஒரு நாடோடி வாழ்க்கைக்கு பழக்கப்பட்டிருந்தனர்.
   - iii. காட்டுப்பலா, தானிய வகை, நத்தைகள் என்பவற்றை உணவாக உட்கொண்டனர்.
   - iv. மரணமடைந்தவர்கள் தொடர்பாக பல்வேறு விதமான சடங்கு களை நடாத்தி சடலங்களை புதைத்தனர்.

8. மரணச்சடங்கு நிகழ்வுகள் நடாத்தியமைக்கான சான்று யாது?
   வர்ணம் தீட்டப்பட்ட நிலையில் காணப்படும் எலும்புக்கூட்டிலிருந்து

9. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கல்லாயுதங்களையும் இலகு கருவிகளையும் பயன்படுத்தியதற்கான சான்று எங்கு கிடைக்கப் பெற்றது?
   - i. பதிய கம்பளை
   - ii. பெல்லன் பதி பெலஸ்ஸ

10. தானியங்கள் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று எங்கிருந்து கிடைக்கப்பெற்றது?
    கினிகத்தேனைக்கு அண்மையிலுள்ள வெலிலேனகியில் இருந்து

11. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பாக நாம் கற்று பெற்றுக் கொண்ட விடயங்களைத் தருக.
    - i. ஆரியர் வருகைக்குமுன் இந்நாட்டில் சுதேச மக்கள் வாழ்ந்தார்கள்
    - ii. கல்லாயுதங்களையும், இலகுகருவிகளையும், தானியங்களையும் பயன்படுத்தியதற்கான சான்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
    - iii. மரணித்தவர்களை வழிபடும் சடங்கு முறையை அறிந்துள் ளோம்.
    - iv. உலக நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது இந்நாட்டில் ஒரு நாகரிகம் நிலவிவந்தமை புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. எமது புராதன மூதாதையர்கள் குறித்த தகவல் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் கிடைத்ததிலிருந்து அவர்கள் நாடெங்கிலும் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

## ஆரியக் குடியேற்றங்கள்

12. விஜயனின் வருகைக்கு முன் ஆரியர் வருகைதந்தனர். இதற்கான சான்றுகளை தருக.

- புத்தபெருமான் பரி நிர்வாண நிலையை அடைவதற்கு முன்னர் வியாபாரிகளான தபசு, பல்லுக என்ற சகோதரர்கள் வழங்கிய காணிக்கைகளான புனித பொருட்களை வைத்து திருகோண மலைக்கு அருகில் இருக்கும் திரிபாய என்ற இடத்தில் கிரிகடுகாய அமைக்கப்பட்டதிலிருந்து
- இராமர், சீதை கதையில் சீதை கடத்தி இலங்கையிலே சிறை வைக்கப்பட்டதிலிருந்து
- புத்தபெருமான் பரிநிர்வாண நிலையை அடையமுன் இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்துபோனதிலிருந்து

## விஜயனின் வருகை

13. விஜயன் எங்கிருந்து வருகைதந்து இலங்கையில் எங்கு வந்திறங்கினான்?
இன்றைய குஜராத்தான "லாட" என்ற தேசத்திலிருந்து புறப்பட்டு இலங்கையிலுள்ள தம்பபன்னாவ என்ற இடத்தில் வந்திறங்கினான்.

14. விஜயனின் வருகையை விளக்குக.
சிங்கபாகுவுக்கும், சிங்கவல்லிக்கும் இரு புதல்வர்கள் இருந்தனர். அதில் முரட்டுத்தன்மை கொண்டவராக விஜயனும் இளையவன் சுமித்தனும் இருந்தனர். அதில் 700 தோழர்களையும், மனைவிமார் களையும் விஜயனுடன் அனுப்ப புத்தபெருமான் பரிநிர்வாணநிலையை அடைந்த ஆண்டான கி.மு. 453ல் அவர்கள் வந்திறங்கினார்கள். அதன்பின் குவேனியை இளவரசியாக்கி அவளின் உதவியுடன் அவளுடைய குழுவினரை அழித்துவிட்டு தனது அமைச்சர்களின் உதவியுடன் குடியேற்றங்கள் நிறுவி கிராமங்கள் நிறுவப்பட்டன.

15. வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த 3 மார்க்கங் களையும் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இந்தியாவின் மேற்குப் பிரதேசத்திலிருந்து புறப்பட்ட ஆரியர்கள் மாதோட்டத்தை சுற்றியுள்ள பிரதேசத்தில் வந்திறங்கிய விஜயன் குழுவினர்

eg : 1 விஜயன் - தம்பபன்னாவ
2. மதுரை இளவரசி - உருவெலகாம
3. பண்டுவாசுதேவன் - மாதோட்டம்

ii. இந்தியாவின் கிழக்கிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த பத்தகச்சானாவும் மற்றும் சகோதர்கள் வருகை

eg : பத்தகச்சானா - கோகர்ண

iii. வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சங்கமித்தை பிக்குனியின் வருகை

eg : சங்கமித்தை - ஜம்புகோளப்பட்டினம்

16. இலங்கைக்கு வருகைதந்த ஆரியர்கள் வந்திறங்கிய புறப்பட்ட இடங்களை அட்டவணைப்படுத்துக.

| | ஆரியக்கூட்டத்தினர் | வந்திறங்கிய இடம் | புறப்பட்ட இடம் |
|---|---|---|---|
| 1. | விஜயன் | தம்பபன்னாவ | மேற்கு இந்தியா |
| 2. | மதுரை இளவரசி | உருவெலகாம | மேற்கு இந்தியா |
| 3. | பண்டுவாசுதேவன் | மாதோட்டம் | தென்னிந்தியா |
| 4. | பத்தகச்சானா | கோகர்ண | கிழக்கு இந்தியா |
| 5. | சங்கமித்தை | ஜம்புகோளப்பட்டினம் | வட இந்தியா |

17. பத்தகச்சானாவின் சகோதரர்களைத் தருக.
தீகாயு, விஜித, ரோகண

18. பத்தகச்சானா அமைத்த குடியேற்றங்களைத் தருக.
ரோகண, கோகர்ண, தீகவாவி (திகாமடுல்ல)

19. விஜயன் குழுவினர் அமைத்த குடியேற்றங்களை அட்டவணைப் படுத்துக.

| | விஜயன் குழுவினர் | அமைத்த குடியேற்றம் |
|---|---|---|
| 1. | விஜயன் | தம்பன்னாவ |
| 2. | அமைச்சர் உபதிஸ்ஸ | உபதிஸ்ஸகாம |
| 3. | அமைச்சர் அனுராத | அனுராதகாம |
| 4. | அமைச்சர் விஜித | விஜிதகாம |
| 5. | அமைச்சர் உருவெல | உருவெல காம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. எந்தெந்த ஆற்றுப்பள்ளத்தாக்குகளை கொண்டு குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன என்பதனை அட்டவணைப்படுத்துக.

| | ஆற்றுப்பள்ளத்தாக்கு | குடியேற்றம் |
|---|---|---|
| 1. | மல்வத்ஓயா (கதம்ப) | அனுராதகாம |
| 2. | கலாஓயா (கோணநதி) | விஜிதகாம |
| 3. | மகாவலிகங்கை | விஜிதபுர |
| 4. | கிரிந்தி ஓயா | மகாகம கிராமம் |
| 5. | கல்லோயா | தீகவாவி |
| 6. | மாணிக்ககங்கை | கதிர்காமம் |

21. வேடர் என்போர் எந்தப் பரம்பரை என நம்பப்படுகிறது?

விஜயன் மன்னனாக முடிசூடிக் கொள்வதற்காக தன் இனத்து இளவரசியை திருமணம் செய்வதற்கு மதுரை இளவரசியை வரவழைத்ததற்காக குவேனி தனது இரு புதல்வர்களான ஜீவஹத்த, திஸாலா ஆகியோருடன் மலைநாட்டுக்குச் சென்றார்கள். அவர்களே வேடர்கள் என நம்பப்படுகிறது.

22. வரலாற்றுக்கு முற்பட்ட கால வேடரின் பிரதானமான தொழிலைத் தருக.

i. வேட்டையாடுதல்
ii. கால்நடை வளர்ப்பு
iii. ஆடைநெய்யும் கைத்தொழில்

23. வேட்டை ஆடுதல் கால்நடை வளர்த்தல் என்பவற்றை மேற்கொண்ட தற்கான சான்றினைத் தருக.

பண்டுகாபய மன்னனின் புராண கதையில் விஜாததேவ என்ற ஒரு தேவதை ஒரு வேட்டைக்காரனின் பாதுகாப்பிலிருந்து வந்ததாக கூறப்படுவதிலிருந்து.

24. ஆடை நெய்யும் தொழில் வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்ததற் கான சான்றினைத் தருக.

விஜயன் இலங்கைக்கு வருகைதரும்போது குவேனி எனும் பெண் நூல் நூற்றுக் கொண்டிருந்ததிலிருந்து புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. மாதுறு ஓயாவில் குடியேறிய ஆரியர்கள் காலப்போக்கில் ஏனைய ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலும் குடியேற ஏதுவான காரணங்களைத் தருக.
   i. காலப்போக்கில் சனத்தொகை துரிதமாக அதிகரித்தமை.
   ii. குறித்த ஆற்றுநீர் போதுமானதாக காணப்படாமை.

26. ஆரியர் சார்பாக வந்த கூட்டத்தினரைத் தருக.
   i. விஜயன் உட்பட 700 தோழர்களது வருகை.
   ii. பாண்டிய நாட்டிலிருந்து வருகைதந்த சத்திரிய குலத்தைச் சேர்ந்த மதுரை இளவரசி வருகை.
   iii. பண்டுவாசுதேவனின் வருகை
   iv. பத்தகச்சானாவும் அவளது சகோதரர்களின் வருகையும்

27. ஆரியர்களின் அரசியல் முறைகளை விளக்குக.
   i. அரசன் இராட்சியத்தின் தலைவனாக செயற்பட்டான்.
   ii. அனைத்து நடவடிக்கைகளும் அரசனின் தலைமையில் இடம் பெற்றது.
   iii. சாதி முறையை அடிப்படையாகக்கொண்டு மக்கள் தொழில் களில் ஈடுபட்டனர்.
   iv. கமிக அல்லது காமினி என்ற பிரதானி கிராமத்தை நிர்வகித்து வந்தமை.

28. பொருளாதார நடவடிக்கையின் பொதுவான இயல்புகளைத் தருக.
   i. விவசாயம் பிரதான சீவனோபாயமாக இருந்துவந்தது.
   ii. கால்நடை வளர்ப்பு, வேட்டையாடுதல் மற்றும் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன.
   iii. வர்த்தகப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகித்தது.
   iv. கடற் பிரயாணங்களுக்கு ஊடாக வெளிநாட்டு வியாபாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
   v. ஜம்புகோளப்பட்டினம், மகாதித்த துறைமுகங்கள் முக்கியமான வர்த்தக துறைமுகமாக விளங்கியது.

29. ஆரியரின் சமூகம் மற்றும் கலாசார சிறப்பம்சங்களை தருக.
   i. சாதிமுறையை அடிப்படையாகக் கொண்டு சமூக அமைப்பு நிலவிவந்தது.
   ii. அரசன் மற்றும் பிராமணர்கள் உயர்குலத்தவர்களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. வைஷியர் போர் நடவடிக்கைக்கும், விவசாயத்திற்கும் தமது உழைப்பை வழங்கினர்.

iv. சூத்திரர் சமூகத்தின் அடிமட்டத்தைச் சேர்ந்த சாதியினராக கருதப்பட்டனர்.

உ-ம் : குப்பைகளை அகற்றுவோர், பிரேதங்களை அடக்கம் செய்வோர்

v. கிராமத் தலைவனான காமினி மக்களின் தேவையை நிறைவேற்றினான்.

vi. கிராமத்தில் ஒரு சுயதேவைப் பொருளாதாரம் நிலவிவந்தது.

## பண்டுகாபயன் (கி.மு. 377 - 307)

30. பண்டுகாபய மன்னனின் வழி மரபுப் பட்டியலைக் காட்டுக.

தீககாமினி + உம்மாதசித்திரா

↓

பண்டுகாபயன்

↓

மூத்தசிவன் (முடசிவன்)

31. பண்டுகாபயன் மேற்கொண்ட சாதனைகளைத் தருக.

i. வடக்கு கிழக்கிற் சிதறி வாழ்ந்த ஆரியக் குழுக்களை இணைத்து ஒரு நிர்வாகத்தின்கீழ் மேற்கொண்டமை.

ii. அனுராதபுரத்தை தலைநகரமாக தெரிவுசெய்தமை.

iii. நகரின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நகரகுத்திக என்ற ஒரு அலுவலரை நியமித்தமை.

iv. பொருத்தமான இடங்களில் தேவாலயங்களையும், ஆராமைகளையும் நிர்மாணித்தமை.

v. கிராம எல்லைகளைக் குறித்துக்காட்டுவதற்காக இராச்சிய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியமை.

vi. விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்க முதலாவது குளமான அபயவாவி (பசவக்குளத்தை) நிர்வகித்தமை.

32. பண்டுகாபய மன்னனிற்குப்பின் மன்னனானவன் யார்?

மூத்தசிவன் - கி.மு 274 - 247 ஆண்டுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பௌத்தமதம் இலங்கைக்கு யாரால் கொண்டுவரப்பட்டது? அப்போது இலங்கையை ஆட்சிசெய்த மன்னன் யார்?

மகிந்ததேரரால் ஜம்புகோளப்பட்டினத்தில் வந்திறங்கி மிகுந்தலையை வந்தடைந்து தேவநம்பிய தீஸனைச் சந்தித்து பௌத்தமதம் பரப்பப்பட்டது.

இம் மகிந்ததேரரினால் பொசன் (ஆனி) மாதம் பௌர்ணமி தினத்தன்று கி.மு. 247ல் அறிமுகமானது. அதனைத் தொடர்ந்து பௌத்தமதம் சிங்கள இனத்தின் ஒரு மரபு உரிமையாக மாறியது.

34. பௌத்தமதம் இலங்கையில் விரைவாக பரவ ஏதுவான காரணங்களைத் தருக.

i. மன்னன் முதல் பௌத்தமதத்தை தழுவிக்கொண்டமையால் மன்னன் எவ்வழியோ குடிகள் அவ்வழி என்ற கோட்பாட்டிற் கமைய மக்கள் தழுவிக்கொண்டமையால் பௌத்த மதம் விரைவாக பரவியது.

ii. பௌத்தமதம் பரப்பப்படுவதற்கு முன்னர் கட்டுக்கோப்பான மதம் ஒன்றும் காணப்படாமையால்.

iii. பௌத்தமதம் பரப்பப்பட்ட காலத்தில் மொழி, இலக்கியம், நெடுங்கணக்கு என்பன காணப்பட்டமையால்.

35. பௌத்தமதம் பரப்பப்படுவதற்கு முன்னர் எவ்வாறான வழிபாட்டு முறைகள் காணப்பட்டன?

i. விருட்ச வழிபாடு
eg : ஆல், அரசு, வேம்பு

ii. மரணித்தவர்களை வழிபடும் முறை

iii. இயற்கையை வணங்கும் முறை
eg : சூரியன், சந்திரன், அக்கினி

36. பௌத்தமதம் பரவியமையால் ஏற்பட்ட விளைவுகளைத் தருக.

1. தார்மீகப் பண்புகள் வளர்ச்சியடைய வழிவகுத்தது.
eg : ஒழுக்கம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் வளர்ச்சியடைந்தது.

2. இலங்கை மக்களின் சமூக கலாசாரங்கள் வளர்ச்சியடைய வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பௌத்தமதத்தின் வளர்ச்சியினால் ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை ஆகிய கலைகள் வளர்ச்சியடைய பௌத்த மதம் வழிவகுத்தது.

37. பண்டுகாபய மன்னனின் வாழ்க்கை வரலாற்றை விளக்குக.

தீககாமினிக்கும் உன்மாதசித்ராவிற்கும் பிறந்தவனே பண்டுகாபய மன்னனாவான். இம் மன்னனின் வாழ்க்கை வரலாறு கிருஷ்ண பரமாத்மாவின் வரலாற்றுடன் ஒத்ததாக காணப்படுகின்றது. பண்டுகாபய மன்னன் தூவார மண்டல என்ற கிராமத்தில் சிறுவயதிலிருந்து வாழ்ந்ததாகவும், பாண்டுலன் என்ற பிராமணனின் வித்தைகளைக் கற்றதாகவும் அதன்பின்பு மாமன்மாருடன் போர் புரிந்து வெற்றியீட்டி அனுராதபுரத்தை தலைநகரமாகக்கொண்டு ஆட்சிசெய்ததாகவும் கூறப்படுகின்றது.

38. மூர்த்தசிவனின் ஐந்து புதல்வர்கள் வெவ்வேறு காலங்களில் ஆட்சி செய்தார்கள் அவர்களைத் தருக.

i. சூரதிஸ்ஸ
ii. தேவநம்பியதீஸன்
iii. அசேலன்
iv. உத்தியன்
v. மகாநாகன்

## எல்லாளன் (கி.மு 205 - கி.மு 161)

39. கி.மு 205 அசேல மன்னனை வெளியேற்றிவிட்டு எல்லாளன் ஆட்சிப்பீடம் ஏறி 44 ஆண்டுகள் நீதியாளனாக நீதியான முறையில் ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகின்றது. இம் மன்னன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த ஆக்கிரமிப்பாளனாவான். இவன் அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆட்சிசெய்தான்.

40. எல்லாளன் 44 ஆண்டுகள் நீதியான முறையில் ஆட்சி செய்ததாகக் கூறப்படுகின்றது. அவற்றிற்கான சான்றுகளைத் தருக.

i. தன் மகனால் தவறுதலாக கொல்லப்பட்ட பசுக்கன்றின் தாய்க்கு நீதி வழங்கினான்.
ii. பருவம் தப்பி பெய்த மழையால் இடருற்ற முதிய பெண்ணுக்கும் நீதி வழங்கினான்.
iii. பாம்பு ஒன்றுக்கு இரையான குஞ்சை இழந்த தாய்ப் பறவைக்கு நீதி வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துட்டகைமுனு

41. துட்டகைமுனு மன்னனின் குடிமரபுப் பட்டியலைத் தருக.

மகாநாகன்
↓
கொடபாயன்
↓
கவந்ததீசன் + விகாரமகாதேவி
↓
துட்டகைமுனு (காமினி அபய)
சத்தாதிஸ்ஸ (இளையவன்)

42. துட்டகைமுனுவின் வரலாற்றை விளக்குக.

⇒ உருகுணைப் பிரதேசத்தை ஆட்சிசெய்த கவந்ததீசனுக்கும் விகாரமகாதேவிக்கும் பிறந்தவனே காமினி அபய என்ற கைமுனு ஆவான். இவன் பிறப்பிலிருந்தே அனுராதபுரத்தை கைப்பற்ற வேண்டும் எனவும் எல்லாளனை வெளியேற்றவேண்டுமெனவும் ஆர்வம் கொண்டிருந்தான். அதனைத் தந்தை கவந்ததீசன் விரும்பாமையால் கவந்ததீசனுக்கு பெண்களுடைய ஆடையை அனுப்பி அவமானப்படுத்திவிட்டு கொத்மலைக்கு சென்றுவிட்டான். ஆகையினால் இவனை துட்டகைமுனு என அழைத்தார்கள்.

⇒ கவந்ததீச மன்னன் இறந்தபின் துட்டகைமுனு மகாகமவுக்கு வந்து ஆட்சியைப் பொறுப்பேற்றான். அப்போது தாய் விகாரமகாதேவி தம்பி சத்தாதிஸ்ஸவும் தீகவாவியை நிர்வகித்து வந்தனர். அப்போது துட்டகைமுனு தாயையும் யானைகளையும் ஒப்படைக்குமாறு கோரியபோது மறுத்தமையால் இரு சகோதரர்களுக்கும் சண்டை இடம்பெற்றது. இதில் முதல் சண்டையில் துட்டகைமுனு தோல்வியை தழுவிக்கொள்ள இரண்டாவது சண்டையில் வெற்றியீட்டினான். அதன்பின் துட்டகைமுனு தனது படைபலத்தை பெருக்கி எல்லாளனை தோற்கடிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டான். அதற்கு பலமாக சந்தாதிஸ்ஸ தீகவாவியில் பொருளாதாரத்தை விருத்தி செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⇒ இராணுவ பலத்தையும் பொருளாதார பலத்தையும் திரட்டி உருகுணை இராட்சியத்தை பலப்படுத்திய பின் அனுராதபுர இராட்சியத்தில் படையெடுப்பை மேற்கொண்டு மகியங்கனைக் கோட்டையில் முதற் சண்டையை ஆரம்பித்து விஜிதபுரம் வரையும் முன்னேறி விஜிதபுரத்தில் சிறிதுகாலம் ஓய்வெடுத்தபின் விஜிதபுரக்கோட்டையை இறுதியாக வெற்றிபெற்று அனுராதபுரத்தைக் கைப்பற்றி எல்லாள மன்னன் தோற்கடிக்கப்பட்டு எல்லாளன் கொல்லப்பட்டான்.

43. துட்டகைமுனு எல்லாளனுக்கு ஒரு மன்னனுக்குரிய அனைத்து விதமான மரியாதைகளையும் வழங்கினான் என்பதற்கு ஆதாரங்களைத் தருக.

i. எல்லாளனது உடல் கௌரவமான விதத்தில் தகனம் செய்யப் பட்டது.
ii. அவனுடைய அஸ்தியை வைத்து அதன்மீது ஒரு சமாதி கட்டப்பட்டது.
iii. அச்சமாதியைக் கடந்து செல்லும் அனைவரும் இறங்கிச் செல்லவேண்டும் எனக் கூறப்பட்டது.
iv. இசை முழக்கங்களுடன் ஊர்வலம் சென்றால் முழக்கங்களை நிறுத்தி மௌனமாக செல்லவேண்டும் என கூறப்பட்டது.
v. இவ்வாறு சிங்கள மன்னன் துட்டகைமுனு தமிழ் மன்னன் எல்லாளனை கௌரவித்தான்.

## காசியப்பன் (கி.பி 473 - 493)

44. காசியப்பன் மன்னனான விதத்தைத் தருக.

✓ தாதுசேனனுக்குப்பின் காசியப்பனுக்கே அரசுரிமை உரித்தானதாக இருந்தபோது தாதுசேனன் முகலனுக்கு ஆட்சி உரிமையை வழங்க முற்பட்டவேளையில் காசியப்பன் தாதுசேனனை சிறைப்பிடித்து மன்னனானான்.

45. காசியப்பனின் ஆட்சிமுறையை விளக்குக.

✓ அனுராதபுரத்திற்கு தெற்காக அமைந்துள்ள 180 அடி உயரத்திலுள்ள சிகிரியா குன்றின் உச்சியில் அரசமாளிகை அமைத்து ஆட்சி செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. சிகிரியாவை சிங்ககிரி என அழைக்கப்படுவது ஏன்?

சிகிரியா உச்சியை சென்றடைய சிங்கத்தின் வாய்வடிவில் அமைந்துள்ள வாயினூடாக படிக்கட்டுக்களை கடந்து செல்வதனால் சிகிரியாவை சிங்ககிரி என்பார்.

47. காசியப்பன் சிகிரியாவை தெரிவுசெய்ய காரணம் என்ன?

i. முகலனுக்கு பயந்து தனது இராச்சியத்தை பாதுகாப்பான இக்கோட்டையில் அமைக்கவேண்டும் என தெரிவுசெய்தான்.
ii. மன்னர்களுக்கு மக்கள் தெய்வாம்சத்தை வழங்கியமையால் சிகிரியாவை தெரிவுசெய்தான்.

48. சிகிரியா ஓவியத்தின் சிறப்பினை விளக்குக.

i. காசியப்பனின் கலை ஆர்வத்தினால் உருவான ஓவியமே இதுவாகும்.
ii. இவ் ஓவியம் இன்றும் அழியா ஓவியமாக காணப்படுவதுடன் ஆசியாவிலே மிக முக்கியமான ஓவியமாகவும் உலகப்புகழ் பெற்ற ஓவியமாகவும் காணப்படுவதுடன்
iii. இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியத்தை ஒத்த ஓவியமாகவும் காணப்படுகின்றது.

49. சிகிரியா ஓவியம் இன்றும் அழியா ஓவியமாக காணப்பட காரணம் எது?

வர்ண கலவையில் காணப்பட்ட சிறப்பாகும்.

50. சிகிரியா அரச மாளிகை அமைப்பை விளக்குக.

சிகிரியா அரசமாளிகையானது அரசசபை மண்டபங்களையும் நீர்அகழிக் கோட்டைகளையும், நீரப்பூங்கா, கற்பூங்கா, மாடிப்பூங்காவையும் கொண்டமைந்துள்ளது.

51. அக்கால உயர் தொழில்நுட்பத்தினை சிகிரியா எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றது?

i. வர்ணக் கலவையில் காணப்பட்ட சிறப்பு
ii. அரசமாளிகையில் காணப்பட்ட உயர் கலைப்படைப்புக்கள்

eg: 1. அரச மண்டபம் 2. நீர்அகழிக்கோட்டை
3. நீரப்பூங்கா 4. கற்பூங்கா
5. மாடிப்பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ம் மகிந்தன் (கி.பி 956 - 972)

52. நான்காம் மகிந்தன் மன்னனான விதத்தை விளக்குக.
4ம் சேனனின் இளவரசனாக செயற்பட்டுவந்து மகிந்தன் ஆட்சிக்கு வந்தான். இம்மன்னன் அனுராதபுர கால மன்னர்களில் பலவீனமான மன்னனாவான் என மகாவம்சம் கூறுகின்றது.

53. 4ம் மகிந்தன் ஆட்சிசெய்தபோது சோழருடைய படையெடுப்பு ஆரம்பமானது. அப்படையெடுப்பின் சோழமன்னன் யார்?
2ம் பராந்தகன் (சுந்தரசோழன்)
**Note :** 4ம் மகிந்தனுடைய காலத்தில் சுந்தரசோழன் தலைமையில் படையெடுப்பு இடம்பெற்றதாகவும் அப்படையெடுப்பை வெற்றி கரமாக முறியடித்ததாகவும் பூஜாவலிய கூறுகின்றது.

54. 4ம் மகிந்தனின் வரலாற்றைக் கூறும் முக்கியமான கல்வெட்டைத் தருக.
i. வெஸ்ஸகிரி கற்பலகை கல்வெட்டு
ii. வேவல் கெட்டிய கல்வெட்டு
iii. மிகுந்தலை கற்பலகை கல்வெட்டு
iv. ஜெதவனராம கல்வெட்டு
இக் கல்வெட்டுக்கள் 4ம் மகிந்தனால் அமைக்கப்பட்டது.

55. வெஸ்ஸகிரி கல்வெட்டில் காணப்படும் முக்கியமான விடயத்தைத் தருக.
அனுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய விகாரைக்கும் அதனை சூழவுள்ள தோட்டங்களுக்கும் நீர் விநியோகித்தல் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

56. ஏனைய கல்வெட்டுகளில் எவ்வாறான விடயங்கள் காணப்படுகின்றது?
i. 4ம் மகிந்தனின் ஆட்சி தொடர்பான விடயம்
ii. பௌத்தமதத்திற்கு அம்மன்னன் ஆற்றிய சேவைகள் தொடர்பான விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ம் மகிந்தன் (கி.பி 982 - 993)

57. 5ம் மகிந்தன் ராஜரட்டையை ஆட்சிசெய்தபோது ராஜரட்டையை நிர்வகித்த இந்திய இனத்தவரைத் தருக.
கேரள, கர்நாடக, சோழ படையணிகள் ராஜரட்டையை நிர்வகித்தமை

58. 5ம் மகிந்தன் ராஜரட்டையிலிருந்து உருகுணைக்கு தப்பிஓட ஏதுவான காரணத்தை விளக்குக.
5ம் மகிந்தனின் ஆட்சியில் அரச திறைசேரி காலியாக இருந்தமையால் அரசனின் கூலிப்படையினரான அகம்படியார் படையணியினர் அரச மாளிகையில் எதிரில் கூடி சம்பளம் கேட்டு கலவரம் செய்த சந்தர்ப்பத்தில் மன்னன் தனது பொருட்களை எடுத்துக்கொண்டு உருகுணைக்கு தப்பியோடினான்.

59. அநுராதபுரத்தை சோழன் கைப்பற்ற எண்ணியதற்கான காரணம் தருக.
   i. சிங்கள மன்னர்கள் கடைப்பிடித்த வெளிநாட்டு கொள்கைகள் சாதகமாக காணப்பட்டமையால்
   ii. இந்தியாவில் எழுச்சிபெறுகின்ற பேரரசுக்கு எதிரான ஏனைய இந்திய அரசர்களுடன் இணைந்து இலங்கை மன்னர்கள் தொடர்பை பேணிவந்தமை.

   eg : 5ம் மகிந்தனுக்கும் பாண்டியனுக்கும் காணப்பட்ட தொடர்பு சோழப்பேரரசின் விஸ்தரிப்புக்கொள்கை.

60. அநுராதபுரத்தில் சோழர் ஆட்சி இடம்பெற்றதற்கான ஆதாரங்களைத் தருக. (5ம் மகிந்தன் காலத்தில்)
   i. ராஜராஜ பெரும்பள்ளி சோழர்களால் அமைக்கப்பட்டது எனவும் அது பிற்காலத்தில் வெலிகம விகாரை என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.
   ii. இலங்கையிலிருந்து சோழப் படையெடுப்பாளர்கள் பெறுமதியான பொருட்களைக் கொண்டு சென்றதிலிருந்து
   iii. ராஜரட்டை பிரதேசத்தை பெரும் தொகையான தமிழ் கல்வெட்டுக்கள் காணப்படுவதிலிருந்து 5ம் மகிந்தன் காலத்தில் சோழர் ஆட்சி இடம்பெற்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. சோழர் ராஜரட்டையை கைப்பற்றிய விதத்தை விளக்குக.

1ம் ராஜராஜசோழனுடைய ஆட்சிக்காலத்தில் குழப்பம் நிறைந்த காலமாக காணப்பட்டமையால் அக்காலத்தில் (கி.பி 993) பெரும் படையை அனுப்பி வடபகுதியான ராஜரட்டையைக் கைப்பற்றி ஆட்சி செய்ததாக கூறப்படுகின்றது.

62. இலங்கை முழுவதும் சோழருடைய ஆட்சிக்கு உட்பட்டதை விளக்குக.

1ம் ராஜராஜனுடைய மகனான ராஜேந்திரசோழன் ஆட்சிப்பீடம் ஏறி இலங்கைமீது படையெடுப்பை மேற்கொண்டு 5ம் மகிந்தனை சிறைப்பிடித்து ஆக்கிரமித்ததாக கூறப்படுகின்றது. 1017ல்

63. 1ம் ராஜராஜசோழனால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

மும்முடி சோழ மண்டலம் இதன் தலைநகராக ஜனநாத மங்களம் புலந்தி நகரம் இங்கு ஜனநாத மங்களம் என்பது ராஜராஜ சோழனின் பட்டப் பெயராகும்.

64. சோழருடைய வருகையினால் ஏற்பட்ட முக்கியமான விளைவு யாது?

பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டு இந்துமதம் வளர்ச்சியடைந்தது.

65. சோழருடைய ஆட்சியை ஆட்சிக் காலத்தை அடிப்படையாக கொண்டு விளக்குக.

i. கி.பி 993ல் இருந்து 1070 வரை ராஜரட்டை சோழருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.
ii. 1017 - 1070 வரை ராஜரட்டை உருகுணை ரட்டை ஆகிய பிரதேசங்கள் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. எனவே சோழர் ஆட்சிக்காலம் என்பது கி.பி. 993ல் இருந்து 1070 வரை அதாவது 77 வருடங்கள் ஆகும்.

66. சோழரை இலங்கையிலிருந்து வெளியேற்றியவன் யார்?

முதலாம் விஜயபாகு (1070)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் விஜயபாகு (கி.பி 1055 - 1110)

67. முதலாம் விஜயபாகுவின் குடிமரபை தருக.
தந்தை - மொக்கல்லான
தாய் - லோஹிதா
மகன் - 1ம் விஜயபாகு (கீர்த்தி)
தங்கை - மித்தா இளவரசி
மனைவி - திரிலோக சுந்தரி

68. 1ம் விஜயபாகுவின் செயற்பாடுகளை அல்லது முக்கிய தகவல் களைத் தருக.
   i. 1ம் விஜயபாகுவின் இளமைப்பெயர் கீர்த்தி ஆகும்.
   ii. 14 வயதிலேயே அவன் வில்வித்தையை கற்றுக்கொண்டான்.
   iii. கி.பி 1055ல் உருகுணை பிரதேசத்தில் 1ம் விஜயபாகு என்ற பெயருடன் மன்னனானான்.
   iv. 1ம் விஜயபாகுவினால் மேற்கொண்ட முதலாவது படையெடுப்பு தோல்வியில் முடிவடைய மன்னன் வாக்கிரிகலைக்கு தப்பிச் சென்றான்.
   v. தென்னிந்திய சோழர் பலவீனம் அடைதல்வரை காத்திருந்து பொலநறுவை மீது தாக்குதல் மேற்கொண்டான்.
   vi. பலம்வாய்ந்த மூன்று படைகளை வெவ்வேறு வழிகளில் அனுப்பி பொலநறுவையை கைப்பற்றினான்.
   vii. பொலநறுவைக்கு விஜயராஜபுரம் என பெயரிட்டான்.
   viii. பொலநறுவை யுகத்தின் இறுதி சிங்கள மன்னன்.

69. 1ம் விஜயபாகுவின் தகவலைக் கூறும் கல்வெட்டு எது?
பனாகடுவ

70. 1ம் விஜயபாகு மேற்கொண்ட சாதனைகளைத் தருக.
   i. சீரகுலைந்திருந்த நாட்டு நிலைமைகளை நாட்டின் நிர்வாகத்தை கட்டி எழுப்பியமை.
   ii. பாழடைந்த குளங்களையும், கால்வாய்களையும் புனரமைப்புச் செய்தான்.
   eg : மின்னேரியா, கவுடுளு வாவி, கந்தளாய்க் குளம், எலகர கால்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. பர்மாவிலிருந்து புத்தபிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கினை செய்தமை.
iv. அட்டதாகேய என்ற பெயரில் தலதா மாளிகையைக் கட்டினான்.
v. பொலநறுவை நகரைச்சூழ மதிலை அமைத்தமை.
vi. சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகளின் வசதிக்காக வழிநெடுங்கிலும் தங்கும் இடங்களை அமைத்தான்.

71. 1ம் விஜயபாகு பொலநறுவையை கைப்பற்ற படைகளை அனுப்பிய 3 மார்க்கங்களையும் தருக.
i. உருகுணையிலிருந்து மாயரட்டை ஊடாக மேற்குக்கரை ஓரமாக படை அனுப்பினான்.
ii. உருகுணையிலிருந்து கிழக்குக்கரை ஓரமாக பொலநறுவை ஊடாக படை அனுப்பினான்.
iii. உருகுணையிலிருந்து மகியங்கனை ஊடாக மகாவலிகங்கை கரையோரமாக படையை அனுப்பினான்.

## மகா பராக்கிரமபாகு (கி.பி 1153 - 1186)

72. மகா பராக்கிரமபாகுவின் தந்தை தாயினைத் தருக.
தந்தை - மானாபரண, தாய் - இரத்தினாவலி

73. மகா பரக்கிரமபாகு ஆட்சிப்பீடம் ஏறிய விதத்தை விளக்குக.
தந்தை இறந்தபின் கலாஓயாவுக்கும் களுகங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தின் ஆட்சியாளனாக பொறுப்பேற்றான்.

74. 1ம் பராக்கிரமபாகு மேற்கொண்ட நடவடிக்கைகளை தருக.
i. குருநாகல் மாவட்டத்தில் கெட்டிபொல என்ற இடத்தை நிர்வாக மையமாக ஸ்தாபித்து பராக்கிரமபுர என பெயரிட்டான்.
ii. பண்டு வஸ் நுவர என்ற இடத்தில் ஒரு அரச மாளிகையை கட்டினான்.
iii. அங்கிருந்த ஒரு குளத்தை விரிவாக்கி பண்டாவாவி என பெயரிட்டு விவசாயத்துக்கு நீர் வழங்கினான்.
iv. தெதுறு ஓயா நதியின் குறுக்கே அணைக்கட்டுக்கள் அமைத்து கால்வாய்கள் ஊடாக விவசாயத்துக்கு நீர் வழங்கினான்.
v. பஸ்துன்ரட்டை கேரள (களுத்துறை) பிரதேசத்தில் சதுப்பு நிலங்களில் உள்ள நீரை அகற்றி சாகுபடி நிலங்களாக மாற்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. சிலாபம், கற்பிட்டி, கொழும்பு துறைமுகங்களை விருத்தி செய்தமை.

75. மகா பராக்கிரமபாகு முக்கியமான சேவைகளைத் தருக.

i. 50 வருட காலமாக அரசியல் குழப்பம் நிறைந்ததை ஐக்கியப் படுத்தியமை.

ii. 'வானத்திலிருந்து விழுகின்ற ஒருதுளி நீரேனும் கடலை சென்றடைய கூடாது' என்பதற்காக குளங்களையும், கால்வாய் களையும் அணைக்கட்டுக்களையும் அமைத்து புனரமைப்பு செய்தான்.

iii. பொலநறுவை யுகத்தின் மாபெரும் சாதனையாக பராக்கிரம சமுத்திரம் திகழ்கின்றது.

iv. அம்பன் கங்கைக்கு ஊடாக அங்கமிடில்ல என்ற இடத்தில் அணைகட்டி ஆகாச கங்கைக்கு ஊடாக பராக்கிரம சமுத்திரத் திற்கு நீர் கொண்டு செல்லப்பட்டமை.
அம்பன் கங்கை - ஆழிசார
அங்கமிடில்ல - ஆகாச கங்கை

v. பராக்கிரம சமுத்திரத்திற்கு மத்தியில் வசந்தமாளிகை அமைத்தான்.

vi. இந்நாட்டில் நிலவிவந்த பௌத்தமத பிரிவுகளை இல்லா தொழித்தான்.

vii. திபிலாகல காசியப்பதேரர் தலைமையில் பிக்குமார் ஒழுக்க நெறி கோவையை கல்விகாரை, கல்வெட்டில் பொறித்தான்.

viii. பொத்குல விகாரை, உத்தராராமைய, லங்காதிலக, சிலை மனை என்பவற்றை நிர்மாணித்தான்.

ix. தென்னிந்திய போர்களில் பிடிபட்ட கைதிகளைக் கொண்டு உருவாக்கிய சைத்தியாவிற்கு அவர்களுடைய உழைப்பிற்கு மதிப்பளித்து தெமலமகாசாய என பெயரிட்டான்.

x. நகரை அலங்கரிப்பதற்காக ஆங்காங்கே பொய்கைகள் அமைத்தான்.
eg : தாமரைப் பொய்கை

xi. புத்தபிக்குகள் தங்குவதற்கும் கல்வி கற்பதற்கும் ஆலாகன பிரிவேனா அமைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xii. ஸ்ரீபராக்கிரமபாகு என்ற பெயர் நாணயங்களில் பொறிக்கப் பட்டது.

76. பராக்கிரம சமுத்திரத்தின் நீளம், அகலம் என்பவற்றை தருக.
நீளம் 15.5 km, அகலம் 12 m

## நிஸங்கமல்லன் (கி.பி 1187 - 1197)

77. நிஸங்கமல்லன் மன்னனின் வரலாற்றை விளக்குக.
கலிங்க தேசத்தில் சிங்கபுரம் என்ற இடத்தில் இம்மன்னன் பிறந்ததாகவும், ஆகையினால் கலிங்க வம்சத்தவனாக காணப்படுகின்றான். இம்மன்னன் ஸ்ரீஜெயகோப மகாராசாவுக்கும் பார்வதிதேவிக்கும் பிறந்தான். இவன் பொலநறுவையை 9 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் கல்யாணவதியை இளவரசி ஆக்கி கொண்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

78. நிஸங்கமல்லன் வழங்கிய தானத்தை விளக்குக.
துலாபாரம் என்ற ஒருவருக்கு தன் உடலின் நிறைக்கேற்ப பொன்னையும் பொருளையும் தானமாக வழங்கினான்.

79. நிஸங்க மன்னன் ஆற்றிய சேவைகளைத் தருக.
i. ரன்கொத் விகாரை கட்ட தாகேய, வட்டகாகய என்பவற்றை நிர்வகித்தமை.
ii. மகியங்கனை, களனி, சிவனொலிபாதமலை ஆகிய புனித தலங்களுக்கு யாத்திரை சென்றமை.
iii. தம்புள்ள விகாரையை புணரமைத்து அங்குள்ள புத்தர் சிலை களுக்கு தங்கமுலாம் பூசியமை.
iv. நிஸங்கலதா மண்டபம் அரசசபை கட்டிடம், அரசமாளிகை என்பன இம்மன்னனால் நிறுவப்பட்டன.

80. இலங்கையில் மிகப்பெரிய கல்வெட்டு எது? அதனை அமைத்தவன் யார்?
கல்பொத்த கல்வெட்டு
நிஸங்கமல்லன் நீளம் - 8 m அகலம் 4 m
Note : இம் மன்னனே அதிகளவான கல்வெட்டுக்களை அமைத்த மன்னன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. நிஸங்கமல்லன் நீர்ப்பாசனத் துறைக்கு ஆற்றிய சேவையை விளக்குக.

i. பாண்டிய விஜயகுளம் இம்மன்னனால் கட்டப்பட்டது. இக் குளம் இன்று கல்மடியானே என அழைக்கப்படுகின்றது.

ii. நிஸங்க சமுத்திரம் இம் மன்னனால் கட்டப்பட்டது. ஆனால் பராக்கிரம சமுத்திரம் புனரமைத்ததாகவே கல்வெட்டில் கூறப்படுகின்றது.

## தென்னிந்தியப் படையெடுப்புக்கள்

82. இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் எவ்வாறான தொடர்புகள் இருந்தன.
நட்புறவுகள், படையெடுப்புக்கள்

83. நல்லுறவு என்பதை விளக்குக.
இரு நாடுகளுக்கு இடையே காணப்படும் அன்னியோன்னியமான பரஸ்பரமான தொடர்பே நல்லுறவு ஆகும்.

84. படையெடுப்பு என்றால் என்ன?
இரு நாடுகளுக்கு இடையே அரசியல், பொருளாதார போர் நோக்கங்களை கருத்திற்கொண்டு பலமான நாடுகள் அல்லது நபர்கள் மேற்கொள்ளுகின்ற ஆக்கிரமிப்பையே படையெடுப்பு என்கின்றோம்.

85. தென்னிந்தியாவில் காணப்பட்ட பலம்வாய்ந்த இராச்சியங்களைத் தருக.

i. சேரநாடு
ii. சோழநாடு
iii. பாண்டிய நாடு
iv. பல்லவ நாடு

86. தென்னிந்தியாவிலிருந்து காலத்திற்குக்காலம் படையெடுப்பு இடம் பெற்றதற்கான சான்றுகளைத் தருக.

i. சூரதிஸ்ஸ மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் குதிரை வியாபாரிகளான சேனன், குத்திகன் ஆகியோரின் ஆக்கிரமிப்பு.

ii. கி.மு 205ல் அசேல மன்னனை கொன்றுவிட்டு எல்லாளன் ஆட்சிப்பீடம் ஏறியமை.

iii. வலகம்பா மன்னன் ஆட்சிக்காலத்தில் புலஹத்த உட்பட ஏழு ஆக்கிரமிப்பாளர்களின் வருகை - 14 வருடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. தாதுசேனன் ஆட்சிப்பீடம் ஏறும் முன்பு பண்டுபாரிந் உட்பட ஐந்து ஆக்கிரமிப்பாளர்களின் வருகை - 25 வருடங்கள்.

v. 1ம் சேனன் காலத்தில் ஸ்ரீமார ஸ்ரீவல்லவ மன்னனின் ஆக்கிரமிப்பு

vi. 1ம் ராஜராஜசோழன் 1ம் ராஜேந்திரசோழன் ஆகியோர் இலங்கையை ஆக்கிரமித்தமை.

87. வலகம்பா மன்னன் ஆட்சிக்காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்த ஏழு பேரை பற்றி விளக்குக.

i. முதலாம் அவன் தப்பி ஓடிய வலகம்பா மன்னனின் இரண்டாவது ராணியான சோமாதேவியை கைப்பற்றிக்கொண்டு இந்தியா சென்றான்.

ii. ஏனையர்கள் பஞ்ச திராவிடர்கள் ஆவார்.

iii. இரண்டாமவன் அனுராதபுரத்திலிருந்து செம்பு பத்திரங்கள் தாதுக்களை எடுத்துக்கொண்டு இந்தியா சென்றான்.

88. பஞ்ச திராவிடர்களையும் தருக.

i. புலகத்தன்

ii. பாகியன்

iii. பணயமாறன்

iv. பிணையமாறன்

v. தாடிகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04

## இலங்கையின் நீர்வள நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

1. நீர்வள நாகரிகம் என்றால் என்ன?
2. இலங்கையின் நீர்வள நாகரிகத்தின் அடிப்படை
3. இலங்கை நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தின் மேன்மை
4. நீர்வள நாகரிகத்தின் நிர்வாக கட்டமைப்பு
5. சமயம் மற்றும் கலாசாரம்
6. நீர்வளம் சார்ந்த நாகரிகத்தின் வெளிநாட்டுத் தொடர்பு

1. இலங்கையை நீர்வள நாகரிகம் என அழைக்கப்படுவது ஏன்?

   இலங்கை நீர்நிலைகளை மையமாகக்கொண்டு வளர்ந்தமையால் நீர்வள நாகரிகம் என அழைக்கப்படுகிறது. இந் நாகரிகம் கி.மு. 6 ல் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

2. நீர்வள நாகரிகம் வளர்ச்சியடைய வழிகோரிய அடிப்படைக் காரணிகளைத் தருக.
   - i. விவசாயம் பிரதான ஜீவனோபாய தொழிலாகக் காணப்பட்டமையினால்
   - ii. விவசாயம் செய்வதற்கு தேவையான நீர்ப்பாசன அமைப்புகள் இருந்தமையால்
   - iii. விவசாயம் செய்வதற்கு பொருத்தமான சமதரையான நிலப் பரப்பு இருந்தமையால்
   - iv. வளமான மண் காணப்பட்டமையால்
   - v. சிறந்த காலநிலை நிலவிவந்தமையால்

3. குளங்களையும் கால்வாய்களையும் அமைத்து நீர் விநியோகத்தை மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டதற்கான காரணங்களையும் தருக.
   - i. ஆற்றுநீர் குறித்த ஒரு காலப்பகுதிக்கு மாத்திரம் போதுமானதாக காணப்பட்டமையால்.
   - ii. மழைநீர் விவசாயம் செய்வதற்கு போதுமானதாக காணப்பட்டமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. நிச்சயமற்ற மழைவீழ்ச்சி
iv. சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டமையால்

4. நீர்வள நாகரிகத்தின் ஆரம்பநிலைகளை தருக.
 i) புராதன கதைகளின் பிரகாரம் அனுராத என்ற அமைச்சன் 1வது குளத்தைக் கட்டியதாகவும் அக்குளம் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.
 ii) பண்டுகாபயன் அபயவாவி, காமினிவாவி, ஜெயவாவி எனும் 3 குளங்களையும் கட்டியதாகவும் அதில் அபயவாவியே கண்டு பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
 iii) தேவநம்பியதீசன் திஸாவாவியை அமைத்ததன்மூலம்
 iv) சத்தாதிஸ 18 குளங்களையும் கட்டியதாக மகாவம்சம் கூறுகிறது.

5. கி.மு. 2ம் நூற்றாண்டளவில் குளங்கள் எவ்வாறு விரிவடைந்தன.
 i) கமிகவாவி (கிராமக்குளம்)
 ii) மகாவாவி (பெரியகுளம்)
 iii) தனவ்வாவி (பெரிய குளங்களுக்கு நீர் வழங்கும் குளம்)

6. பாரிய குளங்களைக் கட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த அனுராதபுரகால மன்னர்கள்?
வசபன், மகாசேனன், தாதுசேனன்.

7. வசபன் நீர்ப்பாசனத்துறைக்கு ஆற்றிய சேவையினை விளக்குக.
பாரிய குளங்களைக் கட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த மன்னனாவான். 11 குளங்களையும், 12 கால்வாய்களையும் கட்டியதாக கூறப்படுகிறது. அதில் மகாவிலாச்சிக்குளம், நொச்சிப் பொத்தனை, கிரிவடுண்ண, மானாகட்டிய ஆகிய குளங்களையும் எலஹற கால்வாயையும் கட்டியதாக வரலாறு கூறுகிறது. அத்துடன் திஸாவாவியிலிருந்து ரன்மசுப் பூங்காவிற்கும் பொய்கைகளுக்கும் சுரங்கக் கால்வாய் வழியாக நீர் விநியோகப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

8. மகாசேனன் நீர்ப்பாசனத்துறைக்கு ஆற்றிய சேவைகளைத் தருக.
மகாசேனன் 16 குளங்களையும் ஒரு கால்வாயையும் கட்டியதாக கூறப்படுகிறது. அதில் மின்னேரியா, கவுடுளுவாவி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருளுவாவி, மகாகணதாராவாவி, மாமினியவாவி, மாகல்கடவல வாவி ஆகிய குளங்களையும் பப்பதன்னக் கால்வாயையும் கட்டியதாக கூறப்படுகிறது.

இம்மன்னன் 4670 ஏக்கர் (39 km) பரப்பளவு கொண்ட பரந்த சமுத்திரமான மின்னேரியா குளத்தை கட்டியமையால் அனுராதபுர மக்கள் மின்னேரியாத் தெய்வம் என போற்றுகின்றனர்.

9. தாதுசேனன் ஆற்றிய சேவைகளைத் தருக.

தாதுசேனன் தனது சொத்தாக கருதும் கலாவாவி மற்றும் மாத்துகமவாவியையும், ஹக்கிராவ் வாவியையும் அமைத்ததுடன் கலாவாவியிலிருந்து நீரை எடுத்துச் செல்வதற்காக யோதகால்வாயும் அமைத்தான். இக்கால்வாய் கலாவாவிக்கும் திஸாவாவிக்கும் இடையிலுள்ளது. 54 மைல் நீளமானதும் 1 Km இற்கு 95 mm சாய்வுள்ளதாகவும் உள்ள இக்கால்வாயை புதுமையான ஜெயகங்கைக் கால்வாய் எனவும் அழைப்பர்.

10. நீர்ப்பாசனத்துறைக்கு தொண்டாற்றிய அனுராதபுர கால மன்னர் களையும், ஆட்சிக்காலத்தையும் தருக.

| மன்னர்கள் | ஆட்சிக்காலங்கள் |
|---|---|
| பண்டுகாபயன் | கி.மு. 377 - 307 |
| தேவநம்பியதீசன் | கி.மு. 247 - 207 |
| வசபன் | கி.பி. 67 - 111 |
| மகாசேனன் | கி.பி. 274 - 301 |
| உபதிஸ்ஸ | கி.பி. 365 - 406 |
| தாதுசேனன் | கி.பி. 455 - 473 |
| 2ம் முகலன் | கி.பி. 535 - 555 |
| 1ம் அக்போ | கி.பி. 604 - 614 |

11. நீர்ப்பாசனத்துறைக்கு தொண்டாற்றிய பொலனறுவைக்கால மன்னர் களைத் தருக.

1ம் விஜயபாகு (1055 - 1110)
மகாபராக்கிரமபாகு (1153 - 1186)
நிஸங்கமல்லன் (1187 - 1196)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. நீர்ப்பாசனத்துறைக்கு தொண்டாற்றிய மன்னர்களையும், கட்டிய குளங்கள், கால்வாய்களை அட்டவணைப்படுத்துக.

| மன்னர்கள் | குளங்கள் | கால்வாய் |
|---|---|---|
| பண்டுகாபயன் | அபயவாவி | - |
| தேவநம்பியதீசன் | திஸாவாவி | - |
| வசபன் | மகாவிலாச்சி | எலஹர |
| | மானாகட்டிய | 12 கால்வாய் |
| | நொச்சிப்பொத்தானை | |
| | பிரிவடுண்ண | |
| | 11 குளங்கள் | |
| மகாசேனன் | மின்னேரியா | பப்பதன்னக்கால்வாய் |
| | கௌவுடுலுவாவி | |
| | குருளுவாவி | |
| | மகாகணதாரா | |
| | மாமினியவாவி | |
| | மாகல்கடவல | |
| | 16 குளங்கள் | |
| உபதிஸ்ஸ | தோப்பாவாவி | - |
| தாதுசேனன் | கலாவாவி | ஜோதகால்வாய் |
| | மாத்துகமவாவி | |
| | ஹக்கிராவ்வாவி | |
| 2ம் முகலன் | பதவியாக்குளம் | - |
| | நாற்சதுவகுளம் | |
| 1ம் அக்போ | மாமடுவகுளம் | மினிப்பேக்கால்வாய் |
| | ஸ்ரீவட்டமானக | |
| | குருத்திக்குளம் | |
| 2ம் அக்போ | கந்தளாய் | - |
| (குளக்கோட்டன்) | கிரித்தலை | |

### பொலனறுவைக்காலம்


| மன்னர்கள் | குளங்கள் | கால்வாய் |
|---|---|---|
| 1ம் விஜயபாகு | புனரமைத்தமை | புனரமைத்தமை |
| மகாபராக்கிரமபாகு | பராக்கிரமசமுத்திரம் | அங்கமடில்ல |
| நிஸங்கமல்லன் | பாண்டியவிஜய | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலங்கையின் நீர்ப்பாசனத்தொழில் நுட்பத்தின் மேன்மை

13. புராதனகால குளம் அமைக்கப்பட்ட விதத்தினை விளக்குக.
உள்ளகச் சமவெளிகளுக்கூடாக பாய்ந்து வருகிற ஆற்றினை இரு சுவடுகளின் முனைகளையும் இணைந்து அணைபோடப் படுவதன் மூலம் புராதன குளம் ஒன்று உருவாக்கப்பட்டது.




A - சுவடு
B - அணைக்கட்டு (குளக்கட்டு)
C - ஆறு
D - குளம்

14. புராதன குளமொன்றை வரைந்து அதன் பௌதீக உறுப்புகளை குறித்துக்காட்டுக.




A - கலிங்கல்
B - கால்வாய்
C - அணைக்கட்டு (குளக்கட்டு)
D - அலைதாங்கி
E - கலிங்கல்தொட்டி
F - சுருங்கை
G - ஆறு
H - குளம்

15. அணைக்கட்டின் தொழிற்பாட்டை விளக்குக.
பாய்ந்துவருகிற ஆற்றை தடுத்து நீரை சேமித்து வைப்பதே அணைக் கட்டு அல்லது குளக்கட்டு ஆகும்.

16. கால்வாயின் தொழிற்பாட்டை விளக்குக.
சேமித்து வைக்கப்பட்ட நீரை உலர்வலயப் பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்காக அமைக்கப்பட்டதே கால்வாய் ஆகும்.
உதாரணம் : ஜோதகால்வாய், பப்பதன்னக் கால்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கலிங்கல் என்பதன் பொருளை விளக்குக.

சேமித்து வைக்கப்பட்ட நீரை உலர்வலயப் பிரதேசங்களுக்கு கால்வாயினூடாக விநியோகிப்பதற்காக அமைக்கப்பட்ட துவாரம் இதுவாகும். இது இருவகைப்படும்.

1) உயர்கலிங்கல் 2) ஈரக்கலிங்கல்

குளத்தின் நீர்மட்டம் உயர்வாக இருக்கும்போது நீரினை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட துவாரமே உயர்கலிங்கல் ஆகும்.

நீர்மட்டம் குறையும்போது நீரை வெளியேற்றுவதற்காகவும் குளத்தை துப்புரவு செய்வதற்காகவும் அமைக்கப்பட்டதே ஈரக்கலிங்கலாகும். கலிங்கலை மடைக்கதவு எனவும் அழைப்பர்.

18. அலைதாங்கி என்பதனை விளக்குக.

நீர் வெளியேறும்போது ஏற்படும் மண்ணரிப்பையும் நீரரிப்பையும் கட்டுப்படுத்தி குளக்கட்டைப் பாதுகாப்பதற்காக குளத்தின் உட்புறத்தில் அமைக்கப்பட்ட கருங்கற் படையாகும்.

19. கலிங்கல்தொட்டி என்பதனை விளக்குக.

நீர் வெளியேறும்போது ஏற்படும் அமுக்கத்தை கட்டுப்படுத்து வதற்காக அமைக்கப்பட்ட சதுரக்கிணறே கலிங்கல் தொட்டி ஆகும்.

20. சுருங்கை என்பதனை விளக்குக.

குளத்திலிருந்து மேலதிகநீரை வெளியேற்றுவதற்காக சற்று உயரம் குறைந்த இடத்தில் அமைக்கப்பட்ட துவாரமே சுருங்கையாகும்.

21. நீரை சேமித்து வைப்பதற்காகவும் விநியோகித்து வைப்பதற்காகவும் பண்டையகால தொழில்நுட்பவியலாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

நீரை சேமித்து வைப்பதற்கு அமைக்கப்பட்டது குளம். அதேபோல் நீரை விநியோகிப்பதற்கு அமைக்கப்பட்டது கலிங்கலும் கால்வாயுமாகும். இதில் உயர்தொழில்நுட்பம் காணப்படுகிறது.

i) நீரை சேமித்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட குளத்தில் காணப்படுகிற பௌதிக உறுப்புகளான கலிங்கல்தொட்டி, அலைதாங்கி, சுருங்கை போன்றன பண்டையகால உயர் தொழில்நுட்பத்தை விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) வசபமன்னனால் அமைக்கப்பட்ட சுரங்கக்கால்வாய் பண்டைய கால உயர் தொழில்நுட்பத்தை எடுத்துக்காட்டுகிறது.
உதாரணம் : திஸவாவிக்கும், ரன்மசுப் பூங்காவிற்குமிடையில் இவனால் சுரங்கக்கால்வாய் அமைக்கப்பட்டது.

iii) தாதுசேனனால் அமைக்கப்பட்ட ஜோதகால்வாய் 1 km 95 mm சாய்வினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டமையால் அதனைப் புதுமையான கால்வாய் என அழைப்பர்.

iv) தற்கால நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாதுறுஓயா விற்கு குறுக்கே கலிங்கல் ஒன்று அமைக்க முற்பட்டபோது கலிங்கல் கண்டுபிடிக்கப்பட்டது. இது பண்டையகால உயர் தொழில்நுட்பத்தை எடுத்துக்காட்டுகிறது.

22. குளங்களை பாதுகாப்பதற்காக பண்டையகாலத்தில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன அலுவலர்களைத் தருக.

i) அனான்னிஹனிஷ      ii) அடிதரஉதர

iii) வேவெஐரும்

## நீர்வள நாகரிகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

23. நாகரிகத்தின் வளர்ச்சிக்கு பௌத்தமதம் செல்வாக்கு செலுத்தியுள்ள விதத்தை விளக்குக?

வடஇந்தியாவிலிருந்த ஆரியர்களின் ஜீவனோபாயம் விவசாயமாகும். அக்காலத்திலே மகிந்ததேரரால் பௌத்தமதம் கொண்டுவரப்பட்டு நீர் வளநாகரிகத்திற்கு செல்வாக்குச் செலுத்தி எழுச்சியடையச் செய்தது. அதன்பின் மன்னர்களும் மக்களும் பௌத்தமதத்தை தழுவி அதன் போதனைகளுக்கு ஏற்ப வாழ்க்கை நடாத்தினார்கள். அப்போதனைகள் பொருளாதார நடவடிக்கைகள் அரசியல் நடவடிக்கைகள் சமூக நடவடிக்கைகள் ஆகிய அனைத்திலும் பௌத்தமதம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

24. மத்திய நிர்வாகமுறை காணப்பட்ட விதத்தை விளக்குக.

i. நாட்டில் ஈடு இணையற்றவனாக அரசன் இருந்தான். அவன் அரசுரிமையினை வாரிசுரிமையாகக் கொண்டே பெற்றான்.

ii. முடிசூட்டு விழா சமயச் சடங்குகளுடன் நடாத்தப்பட்டது.

iii. அரசனுக்கு கீழிருந்த கிராமத் தலைவர்களை காமினி என அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. அக்காமினி என்ற பட்டம் அக்காலத்தில் அரசனின் பெயருடன் சேர்க்கப்பட்டது.

25. மன்னர்களின் முக்கியமான பணிகளைத் தருக.
  i. பௌத்தமதத்தைப் பாதுகாத்தல்
  ii. நாட்டு மக்களைப் பாதுகாத்தல்

26. அரசுரிமைக்குள்ள இலட்சணங்களைத் தருக.
  i. அரசகுடும்பத்தின் மூத்த சகோதரனுக்கே அரசுரிமை கிடைத்தது.
  ii. சகோதரர்கள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் மூத்த சகோதரரின் மகனுக்கு அரசுரிமை வழங்கப்பட்டது.
  iii. தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கைம்மாறும் சந்தர்ப்பம் பிற்காலத்தில் தோன்றுகிறது.
  iv. அரசுரிமை கிடைக்கவேண்டுமாயின் தாய், தந்தை இருவரும் அரசகுடும்பத்தை சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

27. மன்னருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரியாகவும் குழுவின் தலைவராகவும் விளங்குபவர் யார்?
தலைமைப் புரோகிதன்

28. தலைமைப்புரோகிதனின் பொறுப்புகள் யாவை?
  i. முடிசூட்டு விழா தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
  ii. அரசகுடும்பத்தின் பிறப்புக்கள், திருமண வைபவங்கள், இறுதிச் சடங்குகள் என்பவற்றை நடாத்துதல்.
  iii. அரசகுடும்பத்தின் சமய நடவடிக்கைகளின்போது ஆசீர்வாதம் வழங்குதல்.
  iv. கனவுகளுக்கு பலன் கூறல்.


29. பின்வரும் பதவிப் பெயர்களை விளக்குக.

| பதவிகள் | பொறுப்புகள் |
|---|---|
| தோவரிக்க | வாயில்காப்போன் |
| சேனாதிபதி | அரசனின் படைத்தலைவன் |
| அசிக்காகிக | போர் உபகரணங்களுக்குப் பொறுப்பானவன் |
| என்னக்காக்க | கொடிகள், பதாகைகளுக்கு பொறுப்பானவன் |
| மகலே | அரசனின் ஆவணங்களுக்கு பொறுப்பானவன் |
| படகாரிக | திறைசேரி (நிதிக்குப்) பொறுப்பானவன் |
| அமதே | அரசனின் அமைச்சரவை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. அனுராதபுர யுகத்தின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட நிர்வாகப் பிரிவுகளைத் தருக.

i. இராஜரட்டை
ii. உருகுணரட்டை
iii. மலையரட்டை (மலைநாடு)
iv. தக்கிணதேசம்




31. தலைநகராக அனுராதபுரம் விளங்கியபோது இராஜரட்டை எவ்வாறு விரிவடைந்து காணப்பட்டது? (நிர்வாகம்)

i) உத்தரபஸ்ஸ
ii) தக்கிணபஸ்ஸ
iii) பிராச்சினபஸ்ஸ
iv) பஸ்ஸிமபஸ்ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. கிராமிய சபையை விளக்குக?

கிராமமே நிர்வாகத்தின் மிகச்சிறிய அலகாகும். இக்கிராமத்தின் தலைவனை ஆரம்பத்தில் கமிக எனவும் அனுராதபுரத்தின் இடைப்பகுதியில் காமினி எனவும் இறுதிப் பகுதியில் கம்லத்தா எனவும் கிராம விதானை எனவும் இன்று கிராமசேவகர் எனவும் அழைப்பர்.

கமிக ⇒ காமினி ⇒ கம்லத்தா ⇒ கிராம விதானை ⇒ கிராம சேவகர்

33. கிராமசபையின் முக்கியமான பொறுப்புகளை தருக.

i. கிராமத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல்
ii. இராஜகாரிய முறையை உரியமுறையில் செயற்படுத்துதல்
iii. வரிகளை சேகரித்து உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தல்.
iv. குற்றவாளியைப் பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துதல்.

34. கிராமியசபை நீதி தொடர்பான பிரதானமான இரு நடவடிக்கைகளையும் தருக.

i. சிறு சச்சரவுகளைத் தீர்த்துவைத்தல்.
ii. பெரியகுற்றச்செயல்களை புரிந்திருக்கும் குற்றவாளிகளை நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்துதல்.

35. கிராமசபையானது நீதி தொடர்பான இரு பணிகளையும் நிறைவேற்றத் தவறுமாயின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது?

கிராமசபைக்கு சொந்தமான கிராமத்தலைவர்கள் அனைவரும் 125 தங்கக்குடங்களை அபராதமாக செலுத்தவேண்டும். (வேவல் வெட்டிய)

36. இராஜகாரிய முறை என்பதனை விளக்குக.

அரசனுக்கு செய்யும் சேவைகளையே இராஜகாரியமுறை என்கிறோம்.

## நீர்வளம் சார்ந்த நாகரிகத்தின் பொருளாதார அமைப்பு

37. நீர்வள நாகரிகத்தின் பொருளாதார அமைப்பு எவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது?

i) விவசாயம் ii) கைத்தொழில் iii) வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயம்

38. நீர்வள நாகரிகத்தின் விவசாயம் எவற்றை அடிப்படையாகக் கொண்டது?
    - i) சேனைப் பயிர்ச்செய்கை
    - ii) நெற்பயிர்ச்செய்கை
    - iii) வீட்டுத்தோட்டம்

39. சேனைப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

    காடுகள் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையே சேனைப் பயிர்ச்செய்கையாகும். இதுவே இலங்கையில் முதல்முதல் மேற்கொள்ளப்பட்ட சாகுபடி (பயிர்ச்செய்கை) முறை ஆகும்.

40. சேனைப் பயிர்ச்செய்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகளை தருக.

| | | |
|---|---|---|
| i. உழுந்து | ii. பயறு | iii. குரக்கன் |
| iv. சோளம் | v. கடுகு | vi. எள்ளு |
| vii. கத்தரி | viii. பூசணி | |

41. சேனைப் பயிர்ச்செய்கைமூலம் சர்க்கரையை உற்பத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை எது?

    கரும்பு

42. சேனைப் பயிர்ச்செய்கையில் உற்பத்தியை மேற்கொள்ள யாரிடமிருந்து அனுமதி பெறவேண்டும்?

    மன்னனிடம் அல்லது கிராமத்தலைவனிடம்

43. நெற்பயிர்ச்செய்கை இலங்கையில் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குக.

    நெற்பயிர்ச்செய்கை கி.மு. 4000ம் ஆண்டளவில் சீனா, இந்தியா போன்ற நாடுகளில் அறிமுகமாகி சாகுபடி செய்யப்பட்டன. ஆரியரின் வருகையின்பின் இலங்கையிலும் சாகுபடி செய்யப்பட்டு கி.மு. 4ம் நூற்றாண்டளவில் இரு போகங்களாக அதாவது சிறுபோகம், பெரும்போகம் என இரு போகங்களில் மேற்கொள்ளப்பட்டு இன்று சிறுபோகம் எனவும் பெரும்போகம் எனவும் இடைப்போகம் எனவும் மேற்கொள்ளப்படுகிறது. [மூன்று]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. வீட்டுத்தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிர்களைத் தருக.

| | |
|---|---|
| i. மரக்கறி வகைகள் | ii. சீனிக்கிழங்கு |
| iii. தானிய வகை | iv. வெற்றிலை |
| v. பாக்கு | vi. மிளகு |
| vii. புளி | viii. தோடை |
| ix. மா | x. வாழை |
| xi. தென்னை | xii. கித்துள் |

45. வீட்டுத்தோட்டம் தொடர்பாக கல்வெட்டுக்களில் காணப்படும் பதத்தினை விளக்குக.
கெவது மற்றும் அருப்

## கால்நடை வளர்ப்பு

46. கால்நடை வளர்ப்பு மேற்கொள்ளப்பட்ட நோக்கங்களை தருக.
   - i. பால் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக
   - ii. உழவுவேலைகளை பூர்த்தியாக்குவதற்காக
   - iii. போக்குவரத்துத் தேவைக்காக

47. மாடு வளர்ப்பு தொடர்பாக எந்நூலில் கூறப்பட்டுள்ளது?
பப்பஞ்சசுததி

## கைத்தொழில்

48. நீர்வள நாகரிகம் வளர்ச்சியடைந்த காலத்தில் எக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன.
   - i. செங்கல் ஓட்டுக் கைத்தொழில்
   - ii. உலோகக் கைத்தொழில்
   - iii. ஆபரணங்களை தயாரிக்கும் கைத்தொழில்
   - iv. புடவைக் கைத்தொழில்
   - v. கண்ணாடிப் பொருட் கைத்தொழில்
   - vi. மரவேலைக் கைத்தொழில்
   - vii. கட்டிட நிர்மாணக் கைத்தொழில்
   - viii. மட்பாண்ட உற்பத்திக் கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. நீர்வள நாகரிக காலத்தில் செங்கல் ஓட்டுக் கைத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றுகளைத் தருக.
   i. பாரிய தாகபங்கள் (விகாரைகள்) கட்டடங்கள் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதிலிருந்து
   ii. அக்கட்டடங்கள் இன்றுவரை வலுவானவையாகவும் நிலையான தாகவும் இருப்பதிலிருந்து
   iii. வர்ணம் தீட்டப்பட்ட ஓடுகள் தொல்பொருள் ஆய்வின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து

50. உலோகக் கைத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டதற்கான சான்றுகளினைத் தருக.
   i. உலோகங்கள் உருக்கப்பட்டு சிலைகள் செய்யப்பட்டதிலிருந்து உதாரணம் : அவலோகேஸ்வரபோதிசத்த
   ii. அபயகிரி அகழ்விலிருந்து பல உலோக நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து

51. ஆபரணம் தயாரிக்கும் கைத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றினைத் தருக.
ஜேத்தவனதாகவ அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட ஒரு நெல்மணி அளவிலான தங்கத்தில் 21 பூவேலைப்பாடுகள் காணப்பட்டதி லிருந்து அது ஒரு தாளியின் துண்டாகும்.

52. நீர்வள நாகரிகம் வளர்ச்சியடைந்த காலத்தில் வர்த்தகம் எவ்வாறு காணப்பட்டது?
உள்நாட்டு வர்தககம், வெளிநாட்டு வர்த்தகம் என இரு பிரிவுகளாக காணப்பட்டன.

## உள்நாட்டு வர்த்தகம்

53. அநுராதபுர காலத்தில் வாணிப அல்லது வாணிஜ என்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகளைத் தருக.
அம்பாறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பிராமியக் கல்வெட்டுகளிலிருந்து கி.மு. காலத்தில் வாணிப அல்லது வாணிஜ என்ற பதம் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. அநுராதபுர பொலனறுவை காலங்களில் உள்நாட்டு வர்ததகம் நன்கு வளர்ச்சியடைந்து இருந்ததற்கான சான்றினைத் தருக.

   i. 4ம் விஜயபாகுவிற்கு எதிராக கலகம் விளைவித்தவர்களில் ஒருவன் வர்த்தகன் ஆவான் - **பூஜாவலிய**
   ii. உபதிஸ்ஸ என்ற இடத்தில் அந்தராப்பன என்ற சந்தை இருந்ததாக கூறப்படுகிறது - **தீபவம்சம்**
   iii. நாடெங்கிலும் நிகம அல்லது நியம்கம் என்ற பெயரில் அழைக்கப்படும் சிறு வர்ததக நகரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.
   iv. சமைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் உணவகங்கள் இருந்ததிலிருந்து.

55. அநுராதபுர பொலனறுவை காலத்தில் பணப்பரிமாற்றம் இடம்பெற்ற தற்கான ஆதாரங்கள் கல்வெட்டுக்களை அடிப்படையாக கிடைத்த வற்றை தருக.

   i. நீர்ப்பாசன வேலைகள், காணிகளை விற்பனை செய்தல், காணி களை கொள்வனவு செய்தல் என்பவற்றிற்கு பணம் பரிமாற்றப் பட்டன.
   ii. நீதிமன்றத்தில் விதிக்கப்படும் அபராதங்களை செலுத்தல் தொழிலாளர்களுக்கு கூலிகளை வழங்கல்.

56. பணம் பயன்படுத்தப்பட்டதற்கான இலக்கிய ஆதாரங்களைத் தருக.

   i. துட்டகைமுனு மன்னன் மகாதூபியை நிர்மாணித்தபோது உழைப்புக்கு பணம் செலுத்தியதிலிருந்து - **மகாவம்சம்**
   ii. 1ம் பராக்கிரமபாகு மன்னன் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பொற்காசுகளை வெளியிட்டான் - **சூளவம்சம்**

57. நாணயப் பயன்பாடு தொடர்பான விடயங்களை விளக்குக.

முக்கோண வடிவைக் கொண்ட நாணயங்கள் வெளியிடப்பட்ட தாகவும் அவை வெள்ளித் துண்டுகளாக காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அந்நாணயங்கள் பின்வருமாறு அழைக்கப்பட்டன.

   i. கர்த்தாப்பன (சமஸ்கிருதம்)
   ii. கஹாவன (பாளி)
   iii. கஹாவனு (பிராமியக் கல்வெட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வர்த்தகம்

58. இலங்கையின் அமைவிடம் வெளிநாட்டு வர்த்தகத்தின்மீது செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளைத் தருக.

i. இலங்கை கீழைத்தேச மேலைத்தேச வர்த்தகப் பாதையில் அமைந்திருந்தமையால்

ii. பருவக்காற்றுகளின் உதவியுடனும் நீரோட்டத்தினதும் உதவி யுடனும் பாய்க்கப்பல்களை செலுத்தக்கூடிய வசதி காணப் பட்டமையால்

உதாரணம் : இலங்கை → அரேபியா
அரேபியா → இலங்கை

iii. இயற்கைத் துறைமுகங்களையும் பல ஓடைத் துறைமுகங் களையும் இலங்கை கொண்டமைந்து இருந்தமையால்.

உதாரணம் : கோகர்ண
மகாதீத்த
ஜம்புகோளப்பட்டினம்
ஊராத்தோட்டை போன்றன.

iv. இந்து சமுத்திரத்திற்கு மத்தியில் அமைந்திருந்தமையால்

v. பட்டுப்பாதையுடன் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு சிறுதொலைவில் இலங்கை அமைந்திருந்தமையால்.

59. புராதனகால துறைமுகங்களையும் அவற்றின் முக்கியத்துவங்களை யும் தருக.

| துறைமுகங்கள் | முக்கியத்துவங்கள் |
|---|---|
| மகாதீத்த | இத்துறைமுகம் புராதனகால பிரதானமான துறைமுகமாகும். இத்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி யிலிருந்து வெளிநாட்டு நாணயங்களும் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. இத் துறைமுகத்தை இன்று மாதோட்டம், மாந்தை, மன்னார் என்றெல்லாம் அழைப்பர். |
| ஜம்புகோளப்பட்டினம் | வடபகுதியிலுள்ள முக்கியமான துறைமுக மாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஊராந்தோட்டை | 1ம் பராக்கிரமபாகு மன்னனின் நைனாதீவுக் கல்வெட்டில் இத்துறைமுகத்தின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது. இத்துறைமுகம் வடபகுதியிலுள்ள முக்கியமான ஓடைத் துறைமுகமாகும். |
| கோகண்ண | இலங்கையில் காணப்படும் முக்கியமான இயற்கைத் துறைமுகமாகும். இதன் முக்கியத்துவத்தினால் இலங்கைக்கு வருகைதந்தனர். |
| கொடபாயா (திஸ்ஸமகாராம) | புராதனகால தென்பகுதித் துறைமுகம் |
| வெலிகம | மகா பராக்கிரமபாகு காலத்தில் செல்வந்த வணிகர்கள் இருந்தனர். |
| தேவநகர (காலி) | இன்றைய காலித்துறைமுகம். |

60. நீர்வள நாகரிகம் வளர்ச்சியடைந்த காலத்தில் முக்கியத்துவம் குறைந்த துறைமுகங்களாக காணப்பட்ட துறைமுகங்களை தருக.
i. பள்ளவங்க (பால்வக்கி)
ii. மதுபாததிஸ்ஸ (இல்லும்கடவ)
iii. மன்திகாரதித்த
iv. புலச்சரி
v. தெம்பரபடன்

61. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களையும் அட்டவணைப்படுத்துக.

| ஏற்றுமதி செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை |
|---|---|
| முத்துக்கள் | பட்டுத்துணிகள் |
| இரத்தினக்கற்கள் | ஆயுதங்கள் |
| யானைத்தந்தம் | மட்பாண்டங்கள் |
| வாசனைத்திரவியம் | திராட்சைப்பானம் |
| யானைகள் | மதுபானங்கள் |
| கறுவா | பவளங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கடலாமை ஓடுகள்<br>தேங்காய்<br>மரங்கள்<br>பட்டுத்துணிகள் | கற்பூரம்<br>குதிரைகள்<br>சந்தனம் |

62. இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையில் வர்த்தகம் இடம் பெற்றதற்கான ஆதாரங்களை தருக.

i. இந்தியாவிலிருந்து வந்த தபசு, பல்லுக என்ற சகோதர வியாபாரிகள் இருவரின் வருகை - **இந்தியா**

ii. சேனன், குத்திகன் எனப்படும் குதிரை வியாபாரிகளின் வருகை - **இந்தியா**

iii. பொலனறுவையில் அபேகல என்ற இடத்திலிருந்து கண்டெடுக்கப் பட்ட கல்வெட்டில் கப்பல் ஒன்று பொறிக்கப்பட்டிருத்தல் - **இலங்கை**

iv. சீனாவைச் சேர்ந்த லீசாச் என்ற எழுத்தாளர் இலங்கையின் கப்பல்களே மிகப்பெரிய கப்பல் என குறிக்கப்பட்டதிலிருந்து - **சீனா**

v. இந்தியாவை ஆக்கிரமிக்கும் பொருட்டு ஊராத்தோட்டைத் துறைமுகத்தில் கப்பல்கட்டும் தொழில் மேற்கொள்ளப்பட்ட திலிருந்து - **இலங்கை**

vi. 1ம் பராக்கிரமபாகு மன்னனின் வரலாற்றின் சூளவம்சத்தில் கப்பல் தொழில் பற்றிக் குறிப்பிடப்பட்டதிலிருந்து - **இலங்கை**

vii. 1ம் புவனேகபாகு மன்னன் எகிப்து சுல்தானுக்கு அனுப்பி வைத்த கடிதத்திலிருந்து - **எகிப்து**

viii. கிரேக்க தேசத்தவரான தொலமி என்பவரால் உலகப்படம் வரையப்பட்டு இலங்கைக்கு தப்ரபேன் சூடப்பட்டதிலிருந்து - **கிரேக்கம்**

ix. இலங்கை மன்னன் பாதுகாபயன் உரோமுக்கு தூதுக்குழுவை அனுப்பி (குளோடியஸ் மன்னனிடம்) பவளங்களையும் ஆபரணங் களையும் பெற்றுக்கொண்டதிலிருந்து - **உரோம்**

63. இலங்கையுடன் வர்த்தக உறவில் ஈடுபட்ட கீழைத்தேச மேலைத்தேச நாடுகளை தருக.

கீழைத்தேசம் : இந்தியா, பர்மா, சீனா

மேலைத்தேசம் : உரோம், பாரசீகம், கிரேக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம் மற்றும் கலாசாரம்

64. இலங்கையில் வளர்ச்சியடைந்த மதங்களை தருக.
பௌத்தமதம், இந்துமதம், இஸ்லாம்மதம்

65. பௌத்தமதத்துக்கிடையே காணப்பட்ட முரண்பாட்டுத் தகவல்களைத் தருக.
குப்பிகலமகாதிஸ்ஸதேரருக்கு வலகம்பா மன்னன் அபயகிரி மற்றும் பல காணிகளை தானமாக வழங்கியதால் மகா விகாரைப் புத்த பிக்குகளிடையே பிளவு தோன்றியது.

66. திரிபீடகம் எங்கு யாருடைய ஆட்சிக்காலத்தில் எழுத்துருப்பெற்றது?
அபயகிரி விகாரையில் வலகம்பா மன்னன் காலத்தில்

67. அனுராதபுர யுகத்தில் இந்துமதமும் அதன் வழிபாட்டு முறைகளும் இருந்ததற்கான சான்றுகள்?
   i. பண்டுகாபயன் காலத்தில் சிவலிங்கமொன்று இருந்ததாக குறிக்கப்பட்டதிலிருந்து
   ii. எல்லாளன் ஆட்சிக்காலத்தில் தழைத்தோங்கியதாக கூறப்பட்டுள்ளது.
   iii. மகாசேனன் மகாவிகாரையை அழித்தபோது தேவாலயங்களையும் அழித்ததாக நம்பப்படுகிறது.
   iv. மகாதீத்தவில் அமைந்துள்ள சிவன்கோவில் திருகோணமலையில் அமைந்துள்ள கோணேஸ்வரம் சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம் போன்ற இந்துமதத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

68. அனுராதபுரத்தில் இந்துசமயத்தின் ஆதாரமான சிவலிங்கம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?
'எச். சீ. பி. பெல' என்பவர் அனுராதபுரத்தில் மேற்கொண்ட அகழ்வின்போது இந்து ஆலயங்களின் இடிபாடுகளும் சிவலிங்கமும் கண்டுபிடித்ததாக நம்பப்படுகிறது.

69. பொலனறுவை யுகத்தில் இந்துமதம் வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றுகளைத் தருக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. பொலனறுவை யுகத்தில் பல்வேறு அளவுகளில் சிவன் கோவில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 1ம் இலக்க, 2ம் இலக்க சிவன்கோவில்கள் முக்கியம் பெறுகிறன. (16 சிவன்கோவில்)

ii. சந்திரவட்டக்கல்லிலிருந்து எருது என்ற மிருகம் பொலனறுவைக் காலத்தில் நீக்கப்பட்டதிலிருந்து

iii. புத்தபெருமான் விஸ்ணுவின் பத்து அவதாரங்களில் ஓர் அவதாரம் என இந்துமதத்தில் ஒரு கருத்து நிலவுவதால்.

iv. தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற பத்தினி வழிபாடும் இலங்கையில் பிரசித்தி பெற்றிருப்பதனாலும்.

70. இஸ்லாம் மதம் இலங்கையில் வளர்ச்சியடைந்ததற்கான சான்றினை தருக.

i. இஸ்லாம் மதம் கி.பி 9ம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த தாக கூறப்படுகிறது.

ii. கி.பி 850இல் சுலைமான் என்ற வர்த்தகர் ஆதாமின் மலை யிலேறியதாக நம்பப்படுகிறது.

iii. கொழும்பு, மன்னார் போன்ற இடங்களில் முஸ்லீம் குடியிருப்பு கள் இருந்ததாக கிடைத்த சான்றிலிருந்து.

iv. இப்னு அபுபக்கர் என்ற மதகுரு கி.பி 948இல் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

v. 12ம், 13ம் நூற்றாண்டுகளில் கொழும்பு, பேருவளை, சிலாபம், மட்டக்களப்பு, பெலிகம, காலி போன்ற துறைமுகங்களில் முஸ்லீம்களின் வர்ததக ஆதிக்கம் நிலவியதிலிருந்து.

## கலாசாரம்

71. இலங்கையின் கலாசாரத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த கலைகளை தருக.

i. செதுக்கற்கலை | ii. ஓவியக்கலை
iii. இலக்கியமும் மொழியும் | iv. கட்டடக்கலை

72. இலங்கையின் கலைவளர்ச்சியின் ஆரம்பத்தினை விளக்குக.
ஆரியர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோது அவர்களுடைய கலைகளும், நம் நாட்டில் பரவத்தொடங்கியது. அத்துடன் சங்கமித்தை இளவரசியுடன் 18 குலத்தொழிலாளர்கள் அல்லது கோத்திரத்தினர் வருகைதந்ததாகவும் நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. இலங்கையில் செதுக்கற்கலை வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றுகளை தருக.

i. அசோக தூண்களின் உச்சியிலுள்ள சிங்கம் ஹஸ்தி குதிரை என்பன.
ii. சாஞ்சி மற்றும் அமராவதி ஆகிய இடங்களிலுள்ள செதுக்கற் கலைப் பண்பின் சிறப்பினை இலங்கையில் காணமுடிகிறது.
iii. இலங்கையர்களின் சுதந்திரமான கலைப்பணியை எடுத்துக் காட்டும் இசுறுமுனிய காதலர்சிலை.
iv. புத்தபெருமானின் சிலைவடிவங்கள்
v. சந்திரவட்டக்கல்லில் காணப்படும் கலைப்படைப்புகள்.

74. புத்தபெருமானின் சிலை வடிவங்களும் காணப்படும் இடங்களையும் தருக.

i. நிற்கும் சிலை : அவுக்கண, சாசேருவ, புருதுவெகல, மாலிகாவுல
ii. சமாதிச்சிலை : அனுராதபுரம் (மகாமேகவனம்)
iii. அமர்ந்தசிலை : தொழுவிலை, தந்திரிமலை
iv. சயனச்சிலை : கல்விகாரை

75. அனுராதபுர கால சந்திரவட்டக்கல் அமைப்பினை விளக்குக.

சற்று மலர்ந்த தாமரையில் பாரதியும் அதனைச்சுற்றி அன்னங்களின் ஒரு வரிசையும் அதனைச்சுற்றி குதிரை, யானை, சிங்கம், எருது ஆகிய மிருகங்களின் ஒரு வரிசையும் தீச்சுவலையிலான அமைப்பினையும் கொண்டதே அனுராதபுரக்கால சந்திரவட்டக்கல் ஆகும். இதிலிருந்து எருது என்ற மிருகம் நீக்கப்பட்ட சந்திரவட்டக்கல் பொலனறுவைக்கால சந்திரவட்டக்கல் ஆகும்.

76. ஓவியக்கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டும் குகைகளை அனுராதபுர பொலனறுவையை அடிப்படையாக வேறுபடுத்துக.

அனுராதபுர யுகம் : சிகிரியக்குகை, சிதுல்பௌவகுகை, கரம்பஹல
பொலனறுவை யுகம் : திம்புலாகல, உத்தராராமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி இலக்கியம்

77. இலங்கையின் இலக்கியம், மொழி வளர்ச்சியடைந்த விதத்தினை விளக்குக.

விஜயனின் வருகையைத் தொடர்ந்து ஏதோ ஒரு மொழி பயன்படுத்தப்பட்டதாகவும் அம்மொழியின் சில சொற்கள் சிங்களமொழியில் சேர்ந்திருப்பதாகவும் நம்பப்படுகிறது. எழுத்துக்களின் பின்னரே இலக்கியம் வளர்ச்சியடைந்ததாகவும் வலகம்பா மன்னன் காலத்தில் அவரின் அனுசரணையுடன் மாத்தளையிலுள்ள அலுவிகாரையில் திரிபீடகம் எழுத்துருப் பெற்றதாகவும் அதுவே நீர்வள நாகரிகக் காலத்தில் இலக்கியத்தின் அடித்தளம் என நம்பப்படுகிறது.

78. அனுராதபுர யுகத்தில் இலக்கியம் வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான ஆதாரங்களை தருக.

i. சிகிரியாக்குன்றில் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான கிறுக்கல் கவிதைகள்.
ii. கி.பி. 7ம் நூற்றாண்டில் அக்ரபோதி மன்னனின் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்ற 12 கவிஞர்கள் வாழ்ந்துள்ளனர்.
iii. கி.பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரதாஸ மன்னன் சமஸ்கிருத மொழியில் ஜானகி ஹரண என்ற நூலினை எழுதியதிலிருந்து (இராமர் சீதை கதை)

79. பொலனறுவை யுகத்தில் இலக்கியம் வளர்ச்சியடைந்து காணப்பட்டமைக்கான ஆதாரங்களை தருக.

i. லீலாவதியின் காலத்தில் சசதாவத என்ற பாடல் புத்தகம்
ii. அக்காலத்தில் அமிர்தர் மாத்தா சங்கரஹய, ஜாதககதா சன்னய, வெஸதுருதா சன்னய, தாதுவங்க சன்னய, சசதா சன்னய, மகாபோதி வங்சய, தர்மப்பிரதீபிகாவ போன்ற நூல்கள்.
iii. குருலோமி என்பவரால் எழுதப்பட்ட அமாதுவர
iv. பொலனறுவை யுகத்தின்போது எழுதப்பட்ட புத்சரண, தம்சரண, சங்கசரண ஆகிய நூல்கள் வித்யா சக்கரவர்த்தியினால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. அனுராதபுர பொலனறுவை யுகத்தில் உருவான இலக்கியங்களை அட்டவணைப்படுத்துக.

| இராச்சியம் | இலக்கியம் |
|---|---|
| அனுராதபுரம் | ஜானகி ஹரண<br>அமாவதுவர |
| பொலனறுவை | சசாதாவத பாடல் புத்தகம்<br>அமிர்தர் மாத்தா சங்ஹரஹய<br>ஜாதககதா சன்னய<br>வெஸதுருதா சன்னய<br>தாதுவங்க சன்னய<br>சசதா சன்னய<br>மகாபோதி வங்சய<br>தர்மப்பிரதி பிகாவ<br>புத்சரண<br>தம்சரண<br>சங்கரண |

## கட்டிடக்கலை

81. கட்டிடக்கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிற அமைப்புகளை தருக.

i. தாகவைகள், சிலைமனைகள்
ii. போயாமனைகள், மருத்துவமனைகள், குளிக்கும் தடாகங்கள்
iii. கோட்டைகள், அரசமாளிகைகள்.

82. அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான விகாரைகளையும் கட்டிய மன்னர்களையும் தருக.

அபயகிரி விகாரை - வலகம்பா (வட்டகாமினி)
தூபராம - தேவநம்பியதீசன்
ஜெயத்தவனதாகவ - மகாசேனன்
ருவன்வெலிசாய - துட்டகைமுனு
மிருசவெட்டிய - துட்டகைமுனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. பொலனறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட தூபிகளையும் மன்னர்களையும் தருக.

விகாரை - ரன்கொத் விகாரை, கிரி விகாரை

மன்னர் - நிஸங்கமல்லன், மகாபராக்கிரமபாகு

84. விகாரைகள் அமைக்கப்பட்ட வேறு இடங்களை தருக.

i. திஸ்ஸமகாராம
ii. தீகவாவி
iii. சோமாவதி
iv. மகியங்கனை

85. பொலனறுவை யுகத்தில் கட்டிடக்கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டும் அரச மாளிகைகளை தருக.

i. விஜயபாகு மன்னனின் அரசமாளிகை
ii. பண்டுவஸ்துவரையில் மகாபராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட அரசமாளிகை
iii. பொலனறுவையில் நிஸங்கமல்லனால் அமைக்கப்பட்ட அரச மாளிகை.

## சமூக வாழ்க்கை

86. புராதன இந்தியாவில் நிலவிவந்த சமூகவாழ்க்கையின் 3 பிரதான பிரிவுகளையும் தருக.

| | சமூகநிலை | பணிகள் |
|---|---|---|
| i. | மன்னர், பிராமணர்கள் அமைச்சர்கள் | புரோகிதர் வேலை, சகுனம் பார்த்தல் வைத்தியம் பார்த்தல் |
| ii. | விவசாய வர்த்தக வகுப்பினர் | வர்த்தகம், விவசாயம் தொடர்பான உடல் உழைப்பை வழங்குதல் |
| iii. | சூத்திரர்கள், சண்டாள வகுப்பினர் | குப்பைகளை அகற்றுதல், பிரேதங்கள் சம்பந்தப்பட்ட வேலைகள். |

87. நீர்வள நாகரிக காலத்தில் சமூக அமைப்பு எவ்வாறு காணப்பட்டது? ஆண்கள் பெண்கள் எனவும் பௌத்தமத ரீதியாக பிக்குகள், பிக்குணிகள் எனவும் சமூகப்பிரிவு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. தந்தைவழிச் சமூகம் என்பதனை விளக்குக.
தந்தையின் பெயரை அடிப்படையாகக் கொண்டு தம்மை அறிமுகப் படுத்துகிற வழிமுறையினை தந்தைவழிச் சமூகம் எனப்படும்.

89. புராதன காலத்தில் பிரபல்யம் பெற்ற இளவரசிகளை தருக.
i. சீவலி ii. விகாரமகாதேவி iii. சோமாவதி
iv. அனுலா v. லீலாவதி vi. கல்யாணவதி
vii. சுகலா

90. புராதன காலத்திலிருந்து இன்றுவரை பெண்கள் சமஅந்தஸ்துடன் வாழ்கின்றார்கள் என்பதை விளக்குக.
புராதன காலத்தில் இலங்கையின் வீராங்கனையாக விகாரமகாதேவி, சோமாவதி ஆகியோர் காணப்பட்டதுடன் அரசிகளாக சீவலி, கல்யாணவதி, லீலாவதி, அனுலா, சுகலா ஆகியோர் காணப்பட்டதுடன் இன்று முதலாவது பெண் பிரதமராக சிறீமாவும், முதலாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட சந்திரிகாவும் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கவும் காணப்பட்டதிலிருந்து பெண்கள் அன்றிலிருந்து இன்றுவரை உயர்ந்த அந்தஸ்து உடையவர்களாக காணப்படுகின்றனர் எனலாம்.

## நீர்வளம் சார்ந்த நாகரிகத்தின் வெளிநாட்டுத் தொடர்புகள்

91. இலங்கையுடன் ராஜதந்திரத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட முக்கியமான நாடு?
இந்தியா

92. அரசியல் தொடர்பு ஏற்பட்ட 4 தன்மைகளும் எவை?
i. இடம்பெயர்பு ii. முற்றுகை iii. குடிப்பெயர்வு
iv. அரசாட்சிக்காக பெற்றுக்கொண்ட உதவிகள்
(இவை அரசியல் உறவை ஏற்படுத்திய காரணிகளாகும்)

93. அரசாட்சிக்காக பெற்றுக்கொண்ட உதவிகளுக்கு உதாரணம் தருக.
i. அபயநாகமன்னன் தமிழாட்சியாளர்களின் உதவியை நாடியமை.
ii. ஸ்ரீநாகமன்னன் தமிழ் அரசர்களின் உதவியை நாடியமை.
iii. 1ம் முகலன் தன் சகோதரனான காசியப்பனுக்கு எதிராக தென்னிந்திய உதவிபெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. இலங்கையுடன் வெளிநாட்டுத் தொடர்பு ஏற்பட்ட 3 தன்மைகள் எவை?

i. அரசியல் உறவு
ii. கலாசார உறவு
iii. வர்த்தக உறவு

95. இலங்கையின் கலாசாரத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்த நாடு எது?
இந்தியா

96. இலங்கையின் கலாசார வளர்ச்சிக்கு இந்தியா எவ்வாறு பங்களிப்பு செய்தது என்பதை விளக்குக.

i. பௌத்தம், இந்து மத வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்தது.
ii. கலைகளின் வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்தது

உதாரணம் : செதுக்கற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டிடக் கலை, இலக்கியம், மொழி


97. கட்டிடக்கலையின் உயர் தொழில்நுட்பத்தை விளக்குக.
தாதுகோபம் கட்டிடக்கலையின் உயர் தொழில்நுட்பத்தை எடுத்துக் காட்டுகிறது.

i. தாதுகோபத்தின் உயரம் பருமனுக்கேற்ப பலமான அத்திவாரம் போடப்படவேண்டுமென்ற கேத்திரகணித விஞ்ஞான அறிவு அக்காலத்தில் இருந்தது எனலாம்.
ii. புராதன கால தாதுகோபங்கள் உறுதியானதாகவும், பலமான தாகவும், நிலையானதாகவும் காணப்படுவதிலிருந்து புராதன காலத்தில் தரமான தொழில்நுட்பம் வாய்ந்த மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டது எனலாம்.
iii. புராதனகால தாதுகோபங்கள் உயரமானதாக அமைக்கப் பட்டமை. அவ் உயரத்திற்கு பொருட்களை எடுத்துச்செல்ல கப்பி பயன்படுத்தப்பட்டது. எனவே பண்டைய காலத்தில் தொழில்நுட்பம் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. புராதன காலக் குளங்களையும் கால்வாய்களையும் இலங்கைப் படமொன்றில் குறித்துக்காட்டுக.




இராசரட்டையின் நீர்ப்பாசன அமைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை

1. அரசியல் வரலாறு
2. பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்
3. சமூக வாழ்க்கை
4. சமயம், இலக்கியம், கலை, கட்டடக்கலை என்பவற்றின் மாற்றம்.

1. 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு எது?

   கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு (1215)

   கலிங்கல் என்பது இன்றைய இந்தியாவின் ஒரிசா மாநிலமாகும்.

2. மாகனுடைய படையெடுப்பினால் ஏற்பட்ட முக்கியமான விளைவினைத் தருக.

   மாகனுடைய படையெடுப்பினாலும் கொடுங்கோல் ஆட்சியினாலும் இராசதானிகள் தென்மேற்குத் திசைநோக்கி இடம்பெயர்ந்தது.

3. இராசதானிகள் தென்மேற்குத் திசை நோக்கி இடம்பெயர்ந்த ஒழுங்கினைத் தருக. இலங்கைப் படமொன்றில் குறித்துக்காட்டுக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இராசதானிகள் தென்மேற்கு (ஈரவலயம்) நோக்கி இடம்பெயர or குலம்பெயர ஏதுவான காரணங்களைத் தருக.
   i) மாகனின் கொடுங்கோல் ஆட்சியால் மக்கள் அஞ்சி இடம் பெயர்ந்தனர்.
   ii) நீர்வள நாகரிகம் சிதைவடைந்தமையால்
   iii) கொள்ளை நோய், கடும் பஞ்சம், கடும் வறட்சி என்பவை ஏற்பட்டமையால்.
   iv) போக்குவரத்து மார்க்கங்களும் மத நிலையங்களும் சிதைவடைந்தமையால்
   v) தென்மேற்கு பகுதி ஒரு பாதுகாப்பான பகுதியாக காணப் பட்டமையால்.

## தம்பதெனியா (1232 - 1272)

5. தம்பதெனியா தலைநகராக்கப்பட்ட விதத்தினை விளக்குக.

தம்பதெனியாவை 3ம் விஜயபாகு தலைநகராக்கியதாகவும் தந்ததாதுவை கொத்மலையிலிருந்து மீட்டுவந்த ஹேகாலை என்ற இடத்திலுள்ள பெலிகல என்ற இடத்தில் தலதாமாளிகையை அமைத்து பாதுகாத்ததன் மூலம்.

6. தம்பதெனியாவை தலைநகராக்கியதற்கான முக்கியத்துவத்தை விளக்குக.

பொலநறுவையிலிருந்து 75 மைல்களுக்கு அப்பால் மலைச்சாரலில் காணப்பட்ட ஜம்புதோனி என்னும் இடம் முக்கியமான இடமாக காணப்பட்டது. அதனையே தலைநகராக்கினான்.

7. 3ம் விஜயபாகு தொடர்பான முக்கியமான தகவல்களைத் தருக.
   i) நீண்டகாலமாக வன்னித் தலைவனாக விளங்கி-வன்னிராஜா எனப் பெயர் பெற்றான்.
   ii) கோட்டைக் கொத்தளங்களை அமைத்து பாதுகாப்பான நகரம் அமைத்தது. புத்தபெருமானின் பற்சின்னத்தைம் புனித பாத்திரத்தையும் பெலிகலையில் வைத்து தலதா மாளிகை அமைத்தான்.
   iii) களனி விகாரை, அத்தனகல்ல விகாரை இம்மன்னால் புனரமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) தம்பதெனியாவில் விஜயசுந்தரராமயவும் வத்தளையிலுள்ள விஜயபாகு விகாரையும் இம்மன்னால் கட்டப்பட்டது.

8. தம்பதெனியாவை ஆட்சிசெய்த மன்னர்களையும் அவர்களின் ஆட்சிக் காலத்தினையும் தருக.

i) 3ம் விஜயபாகு 1232 - 1236
ii) 2ம் பராக்கிரமபாகு 1236 - 1270
iii) 4ம் விஜயபாகு 1270 - 1272

9. மாகனை வெளியேற்றிய பெருமை யாரைச் சாரும்?

3ம் விஜயபாகுவின் மூத்த மகனான 2ம் பராக்கிரமபாகுவைச் சாரும்.

10. 2ம் பராக்கிரமபாகு தொடர்பான முக்கியமான தகவல்களைத் தருக.

i. கலிங்கமாகனின் 40 வருடகால ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தான். (1215 - 1255)
ii. யாவா மன்னன் சந்திரபானு இலங்கைமீது இரு தடவைகள் மேற்கொண்ட படையெடுப்பைத் தோற்கடித்தான். (1247, 1260)
iii. வருடாந்தம் உபசம்பதா விழாவை நடத்தினான்.
iv. புத்த குருமார்களுக்கான ஒழுக்க விதிகளை எழுதிவைத்தான்.
v. தம்பதெனியாவில் தந்ததாதுவிற்கு கோவில் அமைத்தான். இம் மன்னனால் பல இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன.

11. இம்மன்னன் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை தருக.

i. கவிசிலுமின எனும் பெரும்காப்பியம் எழுதியதுடன் விசுத்தி மார்க்க பாயிரத்தையும் எழுதினான்.
ii. தம்பதெனியா கதிகாவத இம்மன்னன் காலத்தில் வெளிவந்தது.
iii. இம்மன்னன் காலத்தில் தர்மசேன பிக்குவால் சத்தர்ம ரத்னாவலிய என்ற நூல் எழுதப்பட்டது.
iv. புத்தபுத்ர என்ற பிக்குவால் பூஜாவலிய என்ற நூல் எழுதப்பட்டது.

12. தம்பதெனியாவில் எழுதப்பட்ட இலக்கண, வைத்திய நூல்களைத் தருக.

இலக்கண நூல் → சங்கராவ
வைத்திய நூல் → பேசஜ்ஜ மன்சுரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. 2ம் பராக்கிரமபாகுவிற்குப்பின் ஆட்சிக்கு வந்தவர் யார்?
4ம் விஜயபாகு (1270 - 1272)

14. 4ம் விஜயபாகு தொடர்பான ஆட்சிமுறைளை விளக்குக.

2ம் பராக்கிரமபாகுவின் மூத்தமகனே இவனாவான். இவன் தந்தையினுடைய ஆட்சிக்காலத்திலேயே அனுராதபுர பொலனறுவை பிரதேசங்களை புனரமைத்ததாகவும் தந்தை வாழ்ந்த காலத்திலே பொலனறுவைக்கு தந்ததாவுவைக் கொண்டுசென்று தலதா மாளிகை அமைத்ததாகவும் தந்தையின் மரணத்தின் பின்பே தான் முடிசூடிக் கொண்டதாகவும் 2 வருடங்களின் பின்பு மித்திரன் என்ற தளபதியினால் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## யாப்பகூவ

15. யாப்பகூவவைத் தலைநகராக்கியவன் யார்?
1ம் புவனேகபாகு (1272 - 128)

16. யாப்பகூவ தலைநகராக்கப்பட்டமைக்கான காரணங்களைத் தருக.
   i. மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட பாதுகாப்பான பிரதேசமாக காணப்பட்டமையால்.
   ii. வன்னித் தலைவர்களின் கலகங்களுக்கு பாதுகாப்பான பிரதேசம் அவசியம் என்பதால்.
   iii. வடபகுதி ஆட்சியாளர்களிடமிருந்து ஏற்பட்ட பயமுறுத்தலுக்கு பாதுகாப்பான பிரதேசம் அவசியம் என்பதனால்.

17. யாப்பகூவவை 1ம் புவனேகபாகு தலைநகராக்கிய விதத்தினை விளக்குக.

4ம் விஜயபாகுவின் சகோதரனே இவன். இவன் மித்திரன் என்ற தளபதியை கொன்றுவிட்டு அக்கால சிங்களப் படையினருடன் சேர்ந்து போரிட்ட இந்திய ராஜபுத்திரர்களின் உதவியுடன் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டதாகவும் தம்பதெனியாவை ஆட்சிசெய்தபின் யாப்பகூவவை தலைநகராக்கியதாகவும் கூறப்படுகிறது. இக்காலத்திலே எகிப்திய சுல்தானின் தூதுக்குழு வந்ததாக கூறப்படுகிறது. (1203)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 1ம் புவனேகபாகுவின் முக்கியமான நிகழ்வுகளை தருக.

i. யாப்பகூவவைத் தலைநகராக்கி தனித்துநின்று ஆட்சிசெய்த பெருமை இவனையே சாரும்.

ii. எகிப்திய சுல்தானின் தூதுக்குழுவை சந்தித்தான்.

iii. ஆண்டுதோறும் உபசம்பதா விழாவை நடாத்தி சமய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தான்.

iv. வன்னி அதிகாரிகளின் கலகத்தை அடக்கினான்.

v. யாப்பகூவாவில் அரச மாளிகையையும் கட்டினான்.

19. 1284இலிருந்து 1287வரை குழப்பம் நிறைந்த ஆண்டாக இருந்தது. அதனை விளக்குக.

1284இல் இலங்கைக்கு குலசேகர பாண்டியன் பெரும் படையெடுப்பை மேற்கொண்டு புனித தந்ததாதுவை பாண்டிய நாட்டுக்கு எடுத்துச் சென்றதாகவும் அதனை 3ம் பராக்கிரமபாகு பாண்டிநாட்டிற்குச் சென்று மீட்டுவந்து சிறிதுகாலம் ஆட்சிசெய்தபின் 2ம் புவனேகபாகு தந்ததாதுவைக் கைப்பற்றி குருநாகலைத் தலைநகராக்கினான். இக்காலமே குழப்பம் நிறைந்த காலமாக கூறப்படுகிறது.

## குருநாகல்

20. குருநாகலை ராசதானி ஆக்கியவன் யார்?
2ம் புவனேகபாகு (1293 - 1302)

21. குருநாகலை ஆட்சிசெய்த மன்னர்களை தருக.
2ம் புவனேகபாகு (1293 - 1302)
4ம் பராக்கிரமபாகு (1302 - 1326)

22. 2ம் புவனேகபாகு குருநாகலை தலைநகராக்கிய விதத்தினை விளக்குக.

1ம் புவனேகபாகுவின் மகனே 2ம் புவனேகபாகு ஆவான். இவன் குருநாகலிலுள்ள அத்துல்புரவையை இராசதானி ஆக்கி 1300 இலிருந்து ஆட்சிசெய்தான். இவன் பௌத்தமத வளர்ச்சிக்கு உதவியதுடன் இவன் இறந்தபின் இவனுடைய மகனான 4ம் பராக்கிரமபாகு ஆட்சிப்பீடம் ஏறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 4ம் பராக்கிரமபாகு மேற்கொண்ட சேவைகளைத் தருக.

i. தலதா மண்டபத்தைக் கட்டி புனித தந்ததாதுவை பிரதிஷ்டை செய்து பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலித்தமை.

ii. புனித பற்சின்னத்தை பாதுகாப்பதற்கு கிராமங்களை நன்கொடையாக வழங்கினான்.

iii. புனித பற்சின்னத்துக்கு பூசை நடாத்தும் முறை பற்றிய நூலான தலதா சிரித என்ற நூலை எழுதினான்.

iv. கண்டி அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தான்.

v. புகழ்பெற்ற பிரிவேனாக்களுக்கு அரச உதவியை வழங்கினான்.

உ + ம் : தொட்டகமுவ விஜயபா பிரிவேனா
மகாநுவர அஸ்கிரிய செனாசன
விதாகமா கனானந்த பிரிவேனா

vi. பௌத்த பாளி நூல்களை சிங்கள மொழியில் மொழி பெயர்த்தமை.

உ + ம் : 550 (பண்சியப்பனாஸ் ஜாதக)

vii. சிங்களபோதி வங்சய, அனாகத வங்சய ஆகிய நூல்கள் இம்மன்னன் காலத்தில் எழுதப்பட்டது.

24. 4ம் பராக்கிரமபாகுவிற்கு வழங்கப்பட்ட பெயர் யாது? அவ்வாறு அழைக்கக் காரணம் யாது?

"பண்டித பராக்கிரம"

அந்த யுகத்திலே நன்கு கல்விகற்ற ஓர் அறிஞராகவும் சிறந்த கலைஞராகவும் சிறந்த நிர்வாகியாகவும் காணப்பட்டமையினால் 4ம் பராக்கிரமபாகு "பண்டித பராக்கிரம" என அழைக்கப்படுகிறார்.

## கம்பளை (கங்காஶ்ரீத/ கங்காஶ்ரீபுர)

25. கம்பளையை தலைநகராக்கியவன் யார்?

4ம் புவனேகபாகு (1341 - 1351)

26. கம்பளையை ஆட்சிசெய்த ஏனைய மன்னர்களை தருக.

4ம் புவனேகபாகு - 1341 - 1351
5ம் பராக்கிரமபாகு - 1344 - 1358
3ம் விக்கிரமபாகு - 1358 - 1374
5ம் புவனேகபாகு - 1374 - 1408



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் புவனேகபாகு - 1391 - 1396
6ம் விஜயபாகு - 1396 - 1410

27. 4ம் புவனேகபாகுவின் காலத்தில் இலங்கைக்கு வந்த அரேபியர் யார்?
இபன்பதூதா

28. 5ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிபற்றி விளக்குக.
4ம் புவனேகபாகுவின் சகோதரனே 5ம் பராக்கிரமபாகு ஆவான். இவர்கள் இருவரும் ஒரே காலத்தில் இரு பிரதேசங்களை ஆட்சி செய்ததாகவும் 5ம் பராக்கிரமபாகு இன்றைய தெதிகம என அழைக்கப்படும் தெத்திகம்புர பிரதேசத்தை ஆட்சி செய்துள்ளான் எனக் கூறப்படுகிறது.

29. கம்பளைக் காலத்தில் தூதுவிடு காவியங்களைத் தருக.
i. திரச சந்தேசம
ii. மயூரசந்தேசய
iii. பாரம்சதகய
iv. சதக சந்தேசய
v. குவிசி விவரணய

30. கம்பளைக் காலத்தில் வெளிவந்த இலக்கிய நூல்களை தருக.
i. சத்தர்மலங்கார
ii. பூஜாவலிய
iii. ஹத்தவன்ஹல்ல
iv. விகாரவம்சம்
v. புத்தசமயப் பிரிவு உபசாரம்

31. 4ம் புவனேகபாகு மேற்கொண்ட சேவைகளை தருக.
i. இம்மன்னனால் இலங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை, அம்பக்கே தேவாலயம் என்பன நிர்மாணிக்கப்பட்டது.
ii. அதிகளவிலான இலக்கிய நூல்களும் தூதுவிடு காவியங்களும் வெளிவர காரணமானான்.
iii. இம்மன்னன் பல சேவைகளை செய்தமையால் யுவராஜாவாக விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டே

32. கம்பளைக்குப்பின் இராசதானியாக விளங்கியது எது?
கோட்டே

33. கோட்டேயை தலைநகராக்கியவன் யார்?
6ம் பராக்கிரமபாகு

34. 6ம் பராக்கிரமபாகுவின் கோட்டை ராசதானி பற்றி விளக்குக.
1415இல் கோட்டையை இம்மன்னன் தலைநகராக்கி ஆட்சி செய்தான். இவன் சிறந்த மன்னனாகவும் இலங்கையை இறுதியாக ஒன்றுபடுத்திய பெருமையும் இவனையே சாரும். இம்மன்னன் தியவன ஆற்றையும் சதுப்பு நிலங்களையும் அரசனாகக் கொண்டு அமைத்த கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டையே ஆகும்.

35. இலங்கை முழுவதையும் ஆட்சிசெய்த இரு மன்னர்களையும் தருக.
2ம் பராக்கிரமபாகு - 1236 - 1270
6ம் பராக்கிரமபாகு - 1415 - 1467

36. 6ம் பராக்கிரமபாகு மேற்கொண்ட சேவைகளை தருக.
   - i. இலங்கையை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்தமை
   - ii. வன்னிப் பிரதேசத்தை வெற்றிகொண்டு வன்னி அதிகாரிகளை தன்கீழ் கொண்டுவந்தமை.
   - iii. சப்புமல் குமாரய்யாவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி அதனை தனது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தமை.
   - iv. ஜோதிய என்பவன் மலையகத்தில் கலகம் செய்தமையால் அம்புலுகல குமாரய்யாவை அனுப்பி கலகத்தை அடக்கியமை.
   - v. இலக்கியங்கள் சமயங்கள் என்பவற்றின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்தான்.

37. 6ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் உருவான புகழ்பெற்ற பண்டிதர்கள் யாவர்?
   - i. தொட்டகமுவ ஸ்ரீராகுல தேரோ
   - ii. வத்தாவே தேரோ
   - iii. விதாகம தேரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. 6ம் பராக்கிரமபாகு காலத்தில் வெளிவந்த இலக்கிய நூல்களை தருக.

| | |
|---|---|
| i. லோவட சங்கராவ | ii. புனுகுணலங்கார |
| iii. குத்தில காவிய | iv. காவியசேகர |
| v. பராக்கும் பாசிரித | vi. சத்தர்மரத்னா வலிய |
| vii. கோகில | viii. பரவிய |
| ix. கிழசலன | |

39. 6ம் பராக்கிரம காலத்தில் கல்வி வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட பிரிவேனாக்களை தருக.

i. காரகல பத்மாவதி பிரிவேனா
ii. தொட்டகமுவ விஜயபாகு பிரிவேனா
iii. தெவிநுவர விஜயபாகு பிரிவேனா
iv. பப்பிலியான சுவேத்ராவதி பிரிவேனா

40. கோட்டையை ஆட்சிசெய்த மன்னர்களையும், அவர்களின் ஆட்சிக் காலங்களையும் தருக.

| மன்னர்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|
| 6ம் பராக்கிரமபாகு | 1415 - 1467 |
| 2ம் ஜெயபாகு | 1467 - 1469 |
| 6ம் புவனேகபாகு | 1469 - 1480 |
| 7ம் பராக்கிரமபாகு | 1480 - 1490 |
| 8ம் வீரபராக்கிரமபாகு | 1490 - 1509 |

41. 6ம் புவனேகபாகு மன்னனான விதத்தினை விளக்குக.

6ம் பராக்கிரமபாகு 1467ல் இறக்க 2ம் ஜெயபாகு மன்னனானான். அப்போது யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்து கொண்டிருந்த சம்புமல் இளவரசன் ஒரு படையுடன் கோட்டையை சென்றடைந்து ஜெயபாகுவை கொன்றுவிட்டு 6ம் புவனேகபாகு என்ற பெயருடன் மன்னனானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. இராசதானிகள் பொலனறுவையில் இருந்து இடம்பெயர்ந்த ஒழுங்கில் ஆட்சிசெய்த மன்னர்களையும் ஆட்சிக்காலங்களையும் அட்டவணைப் படுத்துக.

| இராசதானிகள் | ஆட்சிசெய்த மன்னர்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|---|
| தம்பதெனியா | 3ம் விஜயபாகு | 1232 - 1236 |
| யாப்பகூவ | 1ம் புவனேகபாகு | 1272 - 1284 |
| குருநாகல் | 2ம் புவனேகபாகு | 1293 - 1302 |
| கம்பளை | 4ம் புவனேக்பாகு | 1341 - 1351 |
| கோட்டை | 6ம் பராக்கிரமபாகு | 1415 - 1467 |

43. இராசதானி கோட்டையை வந்தடைந்த பின்னர் எவ்வாறு விரிவடைந்தது?

கோட்டை ராஜ்ஜியம் - 8ம் வீரபராக்கிரமபாகு
யாழ்ப்பாண ராஜ்ஜியம் - பரராஜசேகரன்
மலையக ராஜ்ஜியம் - சேனாசம்பந்த விக்கிரமபாகு

## பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

44. 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பொருளாதார மாற்றத்திற்கு ஏதுவான காரணத்தை விளக்குக.

1215ம் ஆண்டு மாகனுடைய படையெடுப்பினால் ராஜரட்டை வீழ்ச்சி அடைந்ததுடன் உறுதியற்ற அரசியல் நிலை காரணமாகவும் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

45. ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட அந்நியப்படைகள் பின்பற்றிய யுத்த உத்தியை விளக்குக.

குளங்களையும் அணைக்கட்டுக்களையும் ஆக்கிரமிப்பாளர் அழித்து உணவுப்பஞ்சத்தை ஏற்படுத்தி அம்மக்களை பட்டினியால் வாட்டி அடிபணிய வைக்கலாம் என ஆக்கிரமிப்பாளர்கள் கருதி இவ் யுத்த உத்தியைப் பின்பற்றினார்கள்.

46. ராஜரட்டைப் பிரதேசத்தில் நிலவிய விவசாயப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த விதத்தினை விளக்குக.

i. மாகனுடைய படையெடுப்பின் காரணமாக ஆற்றல்மிக்க தலைமைத்துவங்கள் இல்லாது போனமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. அடிக்கடி ஏற்பட்ட போரினால் மக்களின் உயிர்கள் இழக்கப் பட்டமையால்
iii. பொருளாதாரத்திற்கு வலுவூட்டக்கூடிய நபர்கள் மரணித்தமையால்
iv. உடல் ஊனமுற்றவர்களாக மாறியமையால்
v. வரி அறவிடும் ஆவணங்கள் அழிக்கப்பட்டமையால்

47. மாகனுடைய படையெடுப்பால் சிதைவடைந்தவற்றை வரையறுக்கவும்.
i. பாரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு சிதைவடைந்தது.
ii. நிர்வாகக் கட்டமைப்பு சிதைவடைந்தது.
iii. பெருந்தொகையான விகாரைகளும், தாகவைகளும் சிதை வடைந்தது.
iv. விவசாயப் பொருளாதாரம் சிதைவடைந்தது.
v. பௌத்த நூல்களும் அரச திறைசேரி ஆவணங்களும் சிதைக்கப்பட்டன.

## சமூக வாழ்க்கை

48. 13ம் - 15ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் மக்கள் சமூக வாழ்க்கை யில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்குக.

13ம் நூற்றாண்டுக்கு முன் தன்நிறைவுப் பொருளாதாரம் காணப்பட 1215 இல் மாகனுடைய படையெடுப்பால் தன்நிறைவுப் பொருளாதாரமான விவசாயப் பொருளாதாரம் சிதைவடைய மக்கள் வாசனைத் திரவியங்களைக் கொள்வனவு செய்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் இதனை கி.பி. 1344இல் இலங்கைக்கு வருகைதந்த இபன்பதூதா எடுத்துக்கூறுவதாகவும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டின் இறுதிவரை சமயம், இலக்கியம், கட்டடம், கலை ஆகிய துறைகளின் மாற்றம்

## சமயம்

49. மாகனுடைய படையெடுப்பினால் பௌத்தமதம் எவ்வாறு சிதைவடைந்தது?
    i. மாகனுடைய கொடுங்கோல் ஆட்சியால் பல விகாரைகளும் தாகவைகளும் அழிக்கப்பட்டதிலிருந்து
    ii. பௌத்தமதம் தொடர்பான ஏடுகள் அழிக்கப்பட்டதிலிருந்து
    iii. புத்த பிக்குகள் தமது விகாரைகளிலிருந்து வெளியேறிச் சென்றமையால்

50. மாகனுடைய படையெடுப்பினால் சிதைவடைந்த பௌத்த மதத்தை மன்னர்கள் கட்டியெழுப்பிய விதத்தினை விளக்குக.
    i. 3ம் விஜயபாகு ஆங்காங்கே சிதறிச்சென்ற புத்த பிக்குகளை வரவழைத்து ஒரு மகாநாட்டை நடாத்தி புத்தசாசனத்தை தூய்மைப்படுத்தினான்.
    ii. புத்த பிக்குகளின் சமய ஞானத்தை மேம்படுத்தும் பொருட்டு தம்பரட்டவிலிருந்து நூல்கள் கொண்டுவரப்பட்டதிலிருந்து
    iii. 20 ஆயிரம் சிறுவர்களை துறவறம் பூணச்செய்து பாளி, சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்கு கற்ற அறிஞர்களாக்கினான்.
    iv. கண்ணைக் கவரும் தலதா மாளிகை ஒன்றை நிர்மானித்து நியதிப்பிரகாரம் பூஜைகளை நடாத்தி
    v. தலதா மாளிகையில் பூஜை நடாத்தும் தலதா சிரித என்ற நூலை வெளியிட்டு
    vi. தலதா மாளிகையினை பராமரிக்கும் ஆட்களுக்கு கிராமங் களை நன்கொடையாக வழங்கி
    vii. நெறிதவறிய பிக்குகளை துரத்திவிட்டு பிக்குமாரிடையே ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் இந்துமதமும் தமிழ்மொழியும் வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றுகளை தருக.

i. அக்காலத்தில் விகாரைகளில் வரையப்பட்ட ஓவியங்களில் தமிழ்ச் செல்வாக்கை காணமுடிந்தது.
ii. அக்காலத்தில் தென்னிந்திய தமிழ் கலைஞர்கள் பங்குபற்றிய திலிருந்து
iii. அக்காலத்தில் இந்துக்கள் எழுதிய பெருந்தொகையான தமிழிலக்கிய நூல்கள்
iv. தமிழர்கள் இந்துமதத்தைப் பின்பற்றிப் பூஜைகளை நடாத்தினார்கள், கோவில்கள் கட்டினார்கள் என தூதுவிடு காவியம் கூறுகிறது.
v. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டையில் தமிழ்மொழித் தோத்திரப் பாடல்கள் பாடப்பட்ட ஒரு கோயில் இருப்பதிலிருந்து.
vi. கோட்டையைப் பாதுகாக்கும் அரண்களுக்கருகில் 4 திசைகளிலும் 4 இந்து ஆலயங்கள் இருப்பதிலிருந்து
vii. சீதாவாக்கை மன்னன் 1ம் ராஜசிங்கன் சைவ சமயத்தை தழுவியதிலிருந்து
viii. சிவலிங்கம் பிரதிஸ்டைசெய்து பூஜைகள் நடாத்தப்பட்ட திலிருந்து

52. 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டுவரை ஆட்சிசெய்த முக்கியமான சில மன்னர்களையும் அவர்களது உறவுமுறைகளையும் அட்டவணைப்படுத்துக.

| | மன்னர்கள் | உறவுமுறைகள் |
|---|---|---|
| i. | 3ம் விஜயபாகு | விஜயமல்லனின் மகன் |
| ii. | 2ம் பராக்கிரமபாகு | 3ம் விஜயபாகுவின் மூத்த புதல்வன் |
| iii. | 4ம் விஜயபாகு | 2ம் பராக்கிரமபாகுவின் புதல்வன் |
| iv. | 1ம் புவனேகபாகு | 2ம் பராக்கிரமபாகுவின் மகன் |
| v. | 2ம் புவனேகபாகு | 1ம் புவனேகபாகுவின் மகன் |
| vi. | 4ம் பராக்கிரமபாகு | 2ம் புவனேகபாகுவின் மகன் |
| vii. | 4ம் புவனேகபாகு | 5ம் விஜயபாகுவின் மகன் |
| viii. | 5ம் பராக்கிரமபாகு | 5ம் விஜயபாகுவின் மகன் |
| ix. | 5ம் புவனேகபாகு | அழகக்கோனாரின் மருமகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. இராசதானிகள் தென்மேற்குத் திசையை நோக்கி இடம்பெயர்ந்த காலத்தில் இஸ்லாம் மதம் வளர்ச்சியடைந்து காணப்பட்டதற்கான சான்றுகளைத் தருக.

i. அரேபிய வர்த்தகர்கள் அக்காலத்தில் இலங்கைக்கு வந்ததிலிருந்து

ii. இபன்பதூதா வருகைதந்த காலத்தில் கோணநகர் என்ற இடத்தில் பள்ளிவாசலில் குறித்த குறிப்புக்கள்

iii. யுங்லோ என்ற சீனப் பேரரசன் முஸ்லீம் பள்ளிவாசல் ஒன்றுக்கு காணிக்கை வழங்கியதிலிருந்து

iv. சிவனொளிபாதமலை உச்சியிலிருந்து ஆதம் நபியின் பாதச் சுவடு உள்ளதென முஸ்லீம் மக்களிடையே ஒரு நம்பிக்கை நிலவுவதிலிருந்து

v. கி.பி. 850 இல் சுலைமான் என்ற அரேபிய வர்ததகர் சிவனொளி பாதமலையை தரிசித்ததிலிருந்து

vi. கரையோரப் பிரதேசங்களில் முஸ்லீம் குடியேற்றங்கள் முஸ்லீம் மையவாடிகள் காணப்பட்டதிலிருந்து

vii. அரபு மொழி ஆவணங்கள் முஸ்லீம் மதகுருவின் நினைவுச் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து

viii. போர்த்துக்கேயர் வருகைதந்து கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக முஸ்லீம் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்ட திலிருந்து



லங்கா திலக தாகப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியம்

54. இராசதானி தென்மேற்குத் திசைநோக்கி இடம்பெயர்ந்த ஒழுங்கில் ஒவ்வொரு யுகத்திலும் வெளிவந்த இலக்கிய நூல்களை அட்டவணைப்படுத்துக.

**தம்பதெனியா**
கவிசிலுமின
விசுத்திமார்க்கசன்னய
பூஜாவலிய
சித்தசங்கராவ

**குருநாகல்**
பண்சியப்பணஸ்ஜாதக
உம்மக்கஜாதக
சிங்களபோதி வங்சய
சத்தர்மலங்கார
நிக்காயசங்கிரஹ
பாலாவிதாரசன்னய
தம்பதெனிசுசன
தலதாசிரித
அனாகதவங்சய

**கம்பளை**
(தூதுவிடு காவியம்)
திரச சந்தேசய
மயூரசந்தேசய
பாரம்சதகய
சதகசங்தேசய
குருசிவிவரணய

**கோட்டை**
(இலக்கியப் பொற்காலம்)
பராக்கும் பாசிரித
காவியசேகர
குத்திலகாவிய
லோவடசங்கராவ
சத்தர்மரத்னாகரே

**வைத்திய நூல்**
வைத்திய சிந்தாமணி
யோகரத்னாகரே

**தமிழிலக்கிய நூல்**
கரபோதிமாலை
இரகுவம்சம்



யாப்பஹுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கலையும் கட்டிடக்கலையும்

56. 13ம் நூற்றாண்டிற்குப்பின் கலையிலும் கட்டிடக் கலையிலும் எந்த நாட்டுச் செல்வாக்கு மேலோங்கி காணப்படுகிறது?
தென்னிந்திய நாட்டுச் செல்வாக்கு

57. கடலாதெனிய விகாரை யாரால் நிர்மாணிக்கப்பட்டது?
ஆந்திராதேசத்தில் இருந்துவந்த கணேஸ்வர ஆச்சாரியாரால் உள்ளிட்ட கலைஞர்களினால் நிர்மாணிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

58. 3ம் விஜயபாகுவின் குடிமரபுப் பட்டியலை தருக.

- விஜயமல்லன்
  - 2ம் பராக்கிரமபாகு
    - 4ம் விஜயபாகு
      - 3ம் பராக்கிரமபாகு
    - 1ம் புவனேகபாகு
      - 2ம் புவனேகபாகு
      - 4ம் பராக்கிரமபாகு
    - திரிலோகமல்லன்
    - இளவரசன்
  - புவனேகபாகு
  - இளவரசி




தூபராமய தாகப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 06

## மத்தியகால ஆசியா

1. இஸ்லாமிய சமயத்தின் பரம்பலும் இந்தியாவில் அதன் தாக்கமும்
2. ஆசியாவின் பௌத்த இந்துமத செல்வாக்கும்
3. இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்பும்

1. ஆசியாவை நாடுகளை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கவும்.
   i. தெற்காசிய நாடுகள்
   ii. தென்கிழக்காசிய நாடுகள்
   iii. மேற்காசிய நாடுகள்
   iv. மத்திய ஆசிய நாடுகள்

   என வகைப்படுத்தமுடியும்.

2. மத்தியகாலத்தை வரையறுக்கவும்?
   கி.பி. 5ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15ம் நூற்றாண்டு வரையான காலம்

3. மத்தியகால ஆசியாவில் பலம்பொருந்திய பேரரசு எது?
   முஸ்லீம் பேரரசு

4. முஸ்லீம் பேரரசு எப்பிரதேசங்களில் வியாபித்திருந்தது?
   i. சிரியா
   ii. பலஸ்தீனம்
   iii. எகிப்து
   iv. மெசப்பத்தேமியா
   v. பாரசீகம்

5. முஸ்லீம் பேரரசை மத்திய காலத்தில் வலுவூட்டிய பேரரசு எது?
   துருக்கியின் ஒட்டோமன் பேரரசு

6. முஸ்லீம் பேரரசு விரிவடைந்த விதத்தை விளக்குக.
   முஸ்லீம் சாம்ராஜ்ஜியம் கிழக்குத்திசை நோக்கி விரிவடைந்து வடமேல் கைபர் கணவாயினூடாக இந்தியாவை நோக்கி இஸ்லாம் சாம்ராஜ்ஜியம் விரிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பட்டுப்பாதை என அழைக்கப்படும் வர்த்தக மார்க்கத்தை விளக்குக.

சீனாவுக்கும் அரேபியாவுக்குமிடையில் தரை மார்க்க, கடல் மார்க்கப் பாதையினையே பட்டுப்பாதை என்கிறோம்.

8. வடமேல் இந்தியாவின்மீது தாக்குதலைத் தொடுத்த அந்நிய இனத்தவர்களை தருக.

i. அரேபியர் ii. துருக்கியர்

iii. ஆப்பானிஸ்தானியர் ஆகியோர் தாக்குதலை மேற்கொண்டு சிந்து மற்றும் பஞ்சாப் பிரதேசங்களை கைப்பற்றினர்.

9. வடஇந்தியாவிற்கான இயல்புகளைத் தருக.

i. வடஇந்தியாவில் போர்புரிதல் என்பது ஒரு சத்திரிய தர்மமாகும்.

ii. பிராந்திய அரசுகளுக்கிடையில் சண்டை சச்சரவுகள் இடம் பெற்றன.

iii. வடஇந்தியாவில் இடத்துக்கிடம் ஆங்காங்கே பிராந்திய அரசுகள் காணப்பட்டன.

iv. அரசுகளுக்கிடையில் அதிகாரப் போட்டி இடம்பெற்றது.

10. இந்தியாவை ஆக்கிரமித்த ஆப்கானிஸ்தான் மன்னனைக் குறிப்பிட்டு அவனுடைய ஆட்சியை விளக்குக.

ஆப்கானிஸ்தான் மன்னன் மஹமூத் வடஇந்தியாவைக் கைப்பற்றி குதுபுதீன் படைத்தளபதியின் கண்காணிப்பின்கீழ் வைத்திருந்தான். அதனபின் மகமூத் இறக்க அடிமை அரச வம்சம் உருவானது.

11. டில்லி சுல்தான் ஆட்சி என அழைக்கப்படுவது ஏன்?

13ம் நூற்றாண்டளவில் இந்தியாவில் துருக்கியர் ஆப்கானிஸ்தானியர் ஆகியோரின் ஆட்சி ஆரம்பமானது. அவ்ஆட்சி டில்லியை மையமாகக் கொண்டு ஆட்சி செய்தமையால் டில்லி சுல்தான் ஆட்சி என அழைக்கப்பட்டது. இவ் ஆட்சி 16ம் நூற்றாண்டுவரை ஆட்சி நடைபெற்றது.

12. டில்லி சுல்தான் ஆட்சியாளர்களின் முக்கிய நோக்கம் எது?

இந்தியா முழுவதையும் கைப்பற்றி பிரமாண்டமான சாம்ராஜ்ஜியத்தை நிறுவவேண்டும் என கருதினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. குதுபுதீனுக்குப் பின் மன்னனானவன் யார்?
அவனது மருமகனான இல்துத்மிஸ்

14. இல்துத்மிஸ்சுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் யார்?
அவனது மகள் ரசியா

15. மொகாலயர் எந்த வம்சத்தை சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்?
மங்கோலிய வம்சத்தை சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

16. முஸ்லீமுடைய சாம்ராஜ்ஜியத்தில் ஆட்சிசெய்த வம்சங்களைத் தருக.
   i. அடிமை வம்சம்
   ii. கில்ஜி வம்சம்
   iii. துக்லக் வம்சம்
   iv. சைய்யது வம்சம்
   v. லோடி வம்சம்

17. இல்துத்மிஸ்ஸினுடைய ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தவற்றை தருக.
   i. இஸ்லாமியருடைய ஆட்சியை முதலில் இஸ்திரப்படுத்தியவன் ஆவான்.
   ii. மொகாலயர் என்ற கோத்திரத்தினர் மேற்குப்பஞ்சாப்பை கைப்பற்றியது இவருடைய காலத்திலே ஆகும்.
   iii. டில்லியிலுள்ள குதுபுமினான் கட்டிடத்தை இம்மன்னன் கட்டினான்.

18. ரசியா அரசியின் காலத்தில் நிகழ்ந்தவற்றை தருக.
   i. சிறிதுகாலம் சிறப்பாக ஆட்சிசெய்தாள்.
   ii. பெண்ணாக இருந்து ஆட்சி அதிகாரத்தை தன்வசம் கொண்டிருந்தபோது கோபம் கொண்ட மக்கள் இவளைக் கொன்றனர்.
   iii. இவளது ஆட்சியின்பின் சுல்தான்களின் சாம்ராஜ்ஜியம் மங்கொலிய கோத்திரத்தினரின் ஆட்சிக்கு உட்பட்டதுடன் தென்பகுதி மன்னர்களின் படையெடுப்புக்கு உட்பட்டது.

19. சுல்தான் சாம்ராஜ்ஜியத்தின் இறுதி மன்னன் யார்?
பல்வன்

20. டில்லிசுல்தானின் ஆட்சிக்காலத்தை தருக.
கி.பி. 1206 - 1526



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. டில்லியை ஆட்சிசெய்த முக்கியமான மன்னர்களில் துக்லக்கும் ஒருவனாவான். அவனுடைய இயல்புகளை தருக.

   i. இந்துமதத்தை சேர்ந்த இவன் இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டான்.
   ii. தன்னை டில்லிசுல்தான் என பிரகடனப்படுத்தி ஓர் அரச வம்சத்தை ஆரம்பித்தான்.

22. டில்லிசுல்தான் வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்களைத் தருக?

   i. டில்லி நகரைக் கைவிட்டுவிட்டு தேவகிரிகை துக்லக் மன்னன் தலைநகராக்கியமையால்.
   ii. பல பிராந்திய அரசுகள் தோன்றின. அவற்றினை நிர்வகிக்க டில்லி சுல்தான் பேரரசால் முடியாதிருந்தமையால்
   iii. பலவீனமான மன்னர்கள் பிராந்திய ஆட்சியாளர்கள் மக்களை துன்புறுத்தி வரிகளை சேகரித்து தமது அதிகாரத்தை நிலை நிறுத்தியமையால்.
   iv. இஸ்லாம் சமயத்தின் கடுமையான ஆட்சியின் பிரகாரம் இந்துக் களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தி ஆட்சிசெய்தமையால்.
   v. துக்லக் மன்னனின் ஆட்சிமுறையும் பொருளாதாரக் கொள்கையும் தூரநோக்கற்றதாக காணப்பட்டது.

## மொகாலயப் பேரரசு

23. மொகாலயப் பேரரசின் தோற்றத்தை விளக்குக.

பாபர் என்ற அரசன் 1526இல் டில்லியை கைப்பற்றியதன் மூலம் மொகாலயப் பேரரசு ஆரம்பமாகியது. இம்மன்னன் ஆப்கான் ஆட்சியாளர்களுடன் அடிக்கடி சண்டையில் ஈடுபட்டு 8 வருடகாலம் வாழ்ந்ததாகவும் அதில் 36 வருடம் போர்புரிந்ததாகவும் கூறப்படுகிறது.

24. பாபர் என்பவருக்குப்பின் மன்னனானவன் யார்?

பாபர் என்பவரின் பேரரான அக்பர் 1556இல் மன்னனானான். இவன் இந்திய வரலாற்றில் தலைசிறந்த மன்னனாக கருதப்படுகிறான்.

25. அக்பர் மன்னன் காலத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளை தருக.

   i. வடஇந்தியாவிலிருந்து அனைத்து பிராந்திய அரசுகளையும் தனது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. தனது 40 ஆவது வருட ஆட்சியில் வடஇந்தியா முழுவதையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தான்.

iii. இம்மன்னன் மேற்கொண்ட சேவைகளால் அசோகனுக்கு பின் ஆண்ட சிறந்த மன்னனாவான்.

26. அக்பரின் ஆட்சிக்காலத்தில் மொகாலய ராஜ்ஜியம் வியாபித்திருந்த விதத்தினை விளக்குக.

காஸ்மிரிலிருந்து அகமதாபாத் வரையிலும்
சிந்துவிலிருந்து வங்காளம் வரையிலும்
கந்தகாரிலிருந்து ஒரிசா வரையிலும் வியாபித்திருந்தது.

27. அக்பர் மன்னன் எவ்வாறு வர்ணிக்கப்படுகின்றான்?

இந்தியாவை ஆட்சிசெய்த மன்னர்களுள் அசோகனுக்கு அடுத்த சிறந்த மன்னனாக வர்ணிக்கப்படுகிறான்.

28. அக்பர் மன்னனின் காலத்தில் அவன் சிறப்புகளை தருக.

i. இந்துமதம் குறித்த ஓர் அனுசரணைப்போக்கை கடைப்பிடித்தான்.

ii. அனைத்து சமயங்களிலும் உண்மை பொதிந்துள்ளது எனக் கூறினான். புதிய சமயத் தத்துவத்தை தோற்றுவித்தான்.

iii. ஒரு புதிய சமயக்கருத்தை பிரச்சாரம் செய்தான்.

iv. மக்களின் அபிமானத்தை வென்றெடுத்தான்.

29. அக்பருக்குப்பின் ஆட்சிக்கு வந்தவன் யார்?

அக்பரின் பேரனான சாஜஹான் (மொகாலயப் பேரரசு மேலும் வளர்ச்சி பெற்றது இம்மன்னன் காலத்தில்)

30. சாஜஹான் இந்திய வரலாற்றிலே சிறந்த மன்னனாகவும் அவனுடைய காலத்தை பொற்காலம் எனவும் வர்ணிக்கக் காரணம் யாது?

சாஜஹான் மன்னன் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைக் கட்டி தனது மனைவி மும்தாஜ் மீது வைத்த அன்பையும் காதலையும் வெளிப்படுத்தி நின்றமையால் இன்றும் போற்றுகின்றனர்.

31. சாஜஹானுக்குப்பின் மன்னனானவன் யார்?

மகன் ஔரங்கசீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்கணத்தின் பகமனி ராஜ்ஜியம்

32. பகமனி ராஜ்ஜியத்தின் தோற்றம் பற்றி விளக்குக.
இந்தியாவின் தக்கணப் பிரதேசத்தில் பலம்பொருந்திய முஸ்லீம் ராஜ்ஜியமாக பகமனி ராஜ்ஜியம் தோற்றம்பெற்று 1347இலிருந்து 1526 வரை ஆட்சி இடம்பெற்றது.

33. பகமனி ராஜ்ஜியம் ஆரம்பமாகிய விதத்தை விளக்குக.
டில்லி சுல்தானின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிசெய்து தேவகிரியைக் கைப்பற்றினார்கள். அதனை அடுத்து பாரசீக வம்சத்தைச் சேர்ந்த பகமன்சா என்ற மன்னனின் கீழ் பகமனி அரசவம்சம் ஆரம்பமாகியது.

34. பகமனி ராஜ்ஜியம் 4 பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டன. அவற்றை தருக.
i. இல்பர்கா
ii. தௌலதாபாத்
iii. பீதார்
iv. பிளார்

35. பகமனி ராஜ்ஜியத்தை ஆட்சிசெய்த மன்னர்களையும் அவர்களின் ஆட்சிக்காலங்களையும் தருக.

| மன்னர்கள் | ஆட்சிக்காலங்கள் |
|---|---|
| பஹமன்ஷா | 1347 - 1358 |
| முகமதுஷா | 1358 - 1377 |
| பிரோஷா அகமது | 1397 - 1422 |
| 2ம் அஹமத்ஷா | 1422 - 1435 |
| 2ம் அலாவுதீன்ஷா | 1438 - 1458 |
| 3ம் முகமதுஷா | 1463 - 1482 |

36. பகமனி ராஜ்ஜியம் வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்களை தருக.
i. விஜயநகர அரசுடன் இடையறாப் போரில் ஈடுபட்டமையால்
ii. பகமனி ராஜ்ஜிய மன்னர்கள் மதவெறி பிடித்தவர்களாகவும், சிற்றின்பத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் காணப்பட்டமையால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. பகமனி அரசர்கள் இந்து அரசுக்களுடன் போர்புரிந்து வெற்றி பெற்றார்களே ஒழிய அவர்களை அழிக்க முடியவில்லை.

iv. உள்நாட்டில் நிலப்பிரபுகளின் ஊசல்களும் மதப்பிரிவினை மோதல்களும் பகமனி ராஜ்ஜியம் வீழ்ச்சியடைய ஏதுவானது.

## விஜயநகர்ப் பேரரசு

37. விஜயநகர்ப் பேரரசு எப்பிரதேசம் வரை வியாபித்திருந்தது.

துங்கபத்திரா நதி தொடக்கம் காவேரி நதி வரையிலுள்ள பிரசேதத்தில் வியாபித்திருந்தது.

38. விஜயநகர் ராஜ்ஜியத்தின் தோற்றத்தையும் எழுச்சிபெற்ற விதத்தையும் விளக்குக.

i. டில்லி சுல்தான்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யப்பட்டு தோற்றம் பெற்ற ராஜ்ஜியமே இதுவாகும்.

ii. டில்லி சுல்தான்களை ஹரிஹரன், புக்கான் என்ற இளவரசர்கள் சிறைப்பிடித்து அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்ஜியமே இதுவாகும்.

iii. இவ் ராஜ்ஜியம் கி.பி. 1344 - 1646 வரை நீடித்தது.

iv. இதனை விஜயநகரம், வித்யா நகர், விருபாஷபுரம் எனவெல்லாம் அழைப்பர்.

39. விஜயநகர்ப் பேரரசை ஆட்சிசெய்த மன்னர்களையும் அவர்களின் ஆட்சிக்காலங்களையும் அட்டவணைப்படுத்துக.

| மன்னர்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|
| 1ம் ஹரிஹரன் | 1336 - 1356 |
| 2ம் ஹரிஹரன் | 1377 - 1404 |
| 2ம் தேவராயர் | 1422 - 1426 |
| கிருஷ்ண தேவராயர் | 1509 - 1530 |
| அச்சுதராயன் | 1530 - 1542 |
| ஸ்ரீரங்கன் | 1675 மறைவுடன் பேரரசு வீழ்ச்சி |

40. விஜயநகர் ராஜ்ஜியத்தில் காணப்பட்ட சமூக சிறப்பம்சங்களைத் தருக.

i. பிராமணர்கள் விஷேட அந்தஸ்து பெற்றவர்களாக காணப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. இந்துசமயம் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

iii. சாதி வேற்றுமை நன்கு வலுவடைந்து 74 சாதிப்பிரிவினர் காணப்பட்டனர்.

iv. வடமொழி அரச ஆதரவை பெற்றிருந்தது.

v. இலக்கியம் நுண்கலைகள் என்பன நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

vi. இந்துசமய விழாக்கள் பிரபல்யம் பெற்றிருந்தன.
உதாரணம் : தீபாவளி, வருடப்பிறப்பு, ஹோலி

41. விஜயநகர்ப் பேரரசு மன்னர்கள் இந்துமதத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த விதத்தினை விளக்குக.

i. திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில் பாரிய கோவில்கள் கட்டப்பட்டன.
உதாரணம் : இராமேஸ்வரம்
ஹசாரா சுவாமி கோவில்
விட்டல் சுவாமி கோவில்

ii. வேலூர், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் பல கோவில்கள் கட்டப்பட்டன.

42. விஜயநகர் ராஜ்ஜியத்தின் பொருளாதார சிறப்பம்சங்களை தருக.

i. அரேபியா போர்த்துக்கல் போன்ற நாடுகளுடன் வர்த்தகம் செய்து செல்வச் செழிப்புடைய ராஜ்ஜியமாக காணப்பட்டது.

ii. விவசாயத்துறை நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது.
உதாரணம் : நெசவுக் கைத்தொழில்
நறுமணப் பொருளுற்பத்தி
உலோகக் கைத்தொழில்

iii. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமும் இவ்விராஜ்ஜியத்தில் வளர்ச்சியடைந்து காணப்பட்டதெனலாம்.

43. விஜயநகர் ராஜ்ஜயத்திலிருந்து ஏற்றுமதி செய்த பொருட்களையும் இறக்குமதி செய்த பொருட்களையும் அட்டவணைப்படுத்துக.

| ஏற்றுமதி செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை |
|---|---|
| இரத்தினக்கற்கள் | தந்தம் |
| வைரம் | வெள்ளி |
| வாசனைத்திரவியங்கள் | குதிரைகள் |
| கஸ்தூரி | பன்னீர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைத்தந்தம் குங்குமம்
மருந்துச்சரக்குகள் கத்திகள்
துணிகள் மென்பட்டுக்கள்
சந்தனம்

44. விஜயநகர்ப் பேரரசு வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்களைத் தருக.
   i. விஜயநகர் ராஜ்ஜியத்துக்கும் பகமனி ராஜ்ஜியத்துக்கும் இடையில் இடையறா யுத்தம் இடம்பெற்றமையால் பாரிய உயிர்ச்சேதங்களும், உடமைச் சேதங்களும் ஏற்பட்டமையால்.
   ii. அச்சுதராயர் ஆட்சிக்காலத்தில் தோன்றிய உள்நாட்டு கிளர்ச்சிகளும் படையெடுப்புக்களும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியமையால்.
   iii. பிராந்திய ஆட்சிக்குப் பொறுப்பான நாயக்கர்களின் கிளர்ச்சியை அடக்கவேண்டிய தேவை படையினரிடம் காணப்பட்டமையால் (200 நாயக்கர்கள்)
   iv. விஜயநகர் ராஜ்ஜியத்திடம் முப்படைகள் இருந்தபோதிலும் ஆயுதபலம் இல்லாமையினால் விஜயநகர் ராஜ்ஜியம் 1675இல் ஸ்ரீரங்கர் ஆட்சிக்காலத்தில் வீழ்ச்சியடைந்தது.

45. ஆசியாவில் பௌத்தமதம் செல்வாக்குப் பெற்ற விதத்தை விளக்குக.
   i. இந்தியாவை ஆட்சிசெய்த அசோகன் ஆசிய நாடுகள் பலவற்றுக்கு தர்மதூதுக்குழுக்களை அனுப்பி பௌத்த மதத்தை ஆசிய நாடுகளில் பரப்பி பௌத்தமதம் செல்வாக்குப் பெற காரணமானான்.
   ii. மத்திய ஆசியாவில் கி.பி. 3ம் நூற்றாண்டுக்கும் 5ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலங்களில் பாமியன் தக்ஸிலா, ஹடா ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவியதிலிருந்து
   iii. மேற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில் பௌத்தமதம் பரவியதற்கான ஆதாரமாக பாமியன் புத்தர்சிலை காணப் படுகிறது.

46. ஆசியாவில் இந்துமதச் செல்வாக்குகளை தருக.
   i. இந்தியாவிலிருந்து இந்துமதம் ஆசியநாடுகளுக்கு பரப்பப்பட்ட தாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. பர்மா, தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் பண்டைய கால மன்னர்கள் சமஸ்கிருத மொழிகளில் பெயர்கள் சூடப் பட்டதிலிருந்து.
iii. சில ஆசிய நாடுகளில் இந்துமதக் கோட்பாட்டை அடிப்படை யாகக் கொண்டு ஆட்சி நிர்வாகத்தை மேற்கொண்டதிலிருந்து.
iv. ஆசிய நாடுகளில் பிராமணர்கள் முதன்மை பெற்றிருந்த திலிருந்து.

47. பௌத்த இந்து மதச் செல்வாக்கு பெற்றிருந்த ஆசிய நாடுகளைத் தருக.
i. சீனா (கதாய்)
ii. பர்மா (மியனமார்)
iii. தாய்லாந்து (சீயம்)
iv. கம்போடியா (கம்பூச்சியா)

48. சீனா தொடர்பான முக்கியமான தகவல்கள்?
i. புத்தசமயம் இன்றுவரை சீனாவில் மிகுந்த பக்தியுடன் பின்பற்றப் பட்டு வருகிறது.
ii. சீனாவில் மகாஞான பௌத்தமதமே பிரபல்யம் பெற்றுவருகிறது.
iii. எதிர்காலத்தில் பரிநிர்வாண நிலையை அடைபவர் எனக் கருதப்படும் போதி சத்துவர்களையே வழிபடுகின்றனர்.
iv. கி.மு. 97இல் சீனாவுக்குச் சென்ற தூதுக்குழு பரிசுப்பொருட் களையும் இரு புத்தர் சிலைகளையும் எடுத்துச்சென்றதாக கூறப்படுகிறது.
v. சீனாவிற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை 1ம் நூற்றாண் டளவில் உரோமுக்குச் சென்றுள்ள தூதுக்குழு குளோடியஸ் மன்னனிடம் கூறினார்கள்.
vi. கி.பி. 425இல் சீனாவிற்குச் சென்ற தூதுக்குழு தலதா மாளிகையின் மாதிரியுருவத்தை எடுத்துச் சென்றதாக சீனநூல் கூறுகிறது.
vii. சீன இனத்தைச் சேர்ந்த பிக்குவான ஹியுங்சாங் சுமார் 3 வருடகாலம் நாலந்தா பல்கலைக்கழகத்தில் புத்தசமயக் கல்வியை கற்றதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. இலங்கையிலிருந்து சென்ற 10 பிக்குனிகளின் குழுவே பிக்குனிகளின் சாசனத்தை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

ix. 13ம், 14ம் நூற்றாண்டளவில் புத்தரின் புனித பாத்திரத்தை பெற தூதுக்குழு வந்ததாகக் கூறப்படுகிறது.

x. 6ம் பராக்கிரமபாகு காலத்தில் சீனாவிற்கு தூதுக்குழு சென்ற தாகவும் நம்பப்படுகிறது.

## பர்மா

49. 1) பர்மாவில் அமைந்திருக்கும் ஸ்வேதகொள் தாபக முழு பௌத்த உலகத்தினதும் மதிப்பை பெற்றிருக்கும் விகாரை ஆகும்.

2) அநுராதபுர யுகம் தொடக்கம் இலங்கைக்கும் பர்மாவுக்கும் இடையில் வர்த்தக கலாசார உறவு காணப்பட்டது எனலாம்.

3) 1ம் விஜயபாகு காலத்தில் பர்மாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்பு இருந்ததாக கூறப்படுகிறது.

4) மகா பராக்கிரமபாகு பர்மா மீது படையெடுப்பு மேற்கொண்ட தாகவும் அது தவிர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

5) மகத மொழியில் எழுதப்பட்ட நிருபம் ஒன்றை பர்மாவுக்கு அனுப்பி புத்த சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

6) பர்மா தேச பிக்குகளுக்கு அனுப்பப்பட்ட பாளிமொழியிலான நிருபத்தின் பிரதியே மானாவுளு நிருபம் என அழைக்கப் படுகிறது.

50. 13ம் - 15ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் பர்மாவுக்கும் தொடர்புகள் இருந்ததற்கான சான்றிதழைத் தருக.

1) பர்மாவின் ஜேகு இராச்சியத்தின் கின்யா என்ற மன்னன் ஒரு ஸ்தூபத்தை அமைப்பதற்கான புனித வஸ்துவை பெற்றுக்கொள்ள ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பியதாக கூறப்படுகிறது.

2) ஆவா நகரை ஆட்சிசெய்த தீகது மன்னன் இரு பிக்குகளை அனுப்பி இலங்கையிலிருந்து புனித வஸ்துக்களை எடுத்துச் சென்று யதன்சே நகரில் உள்ள ஸ்தூபத்தில் வைத்ததாக புராணக்கதைகள் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஆவா நகரை ஆட்சிசெய்த தீகது மன்னன் கி.பி. 1456ல் தலதா மாளிகைக்கு தங்கம், இரத்தினக்கற்களை அனுப்பியதாக கூறப்படுகிறது.

## தாய்லாந்து (சீயம், கங்கார தேசம்)

51. 1) இந்நாட்டில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்களே. ஆனால் கலாசாரத்தில் இந்துமத செல்வாக்கை அவதானிக்கமுடிகிறது.

2) தம்பதெனிய யுகத்தில் தாய்லாந்து ரோச்சஇஜாய மன்னன் ஒரு புத்தர் சிலையை பெற்றதாக ஜினகாலமாளி நூல் கூறுகின்றது.

3) தாய்லாந்து பிக்குமாரின் நடத்தை நெறிமுறைகளை உருவாக்கும் பொருட்டு உதும்பரசாமி தலைமையில் சீயத்துக்கு தூதுக்குழு அனுப்பப்பட்டது.

4) புனித வெள்ளரசு மரத்தின் ஒரு கிளையை சீயத்தின் சுவோதய விகாரையில் நடப்பட்டது.

5) இலங்கைக்கு வந்த கடலாதெனிய தர்மகீர்த்தி தேரரிடம் புத்த மதத்தை பற்றிச் சென்ற பிக்கு தான் வசித்த விகாரைக்கு லங்கா ராமே என சீயத்தில் சூட்டி உள்ளார்.

6) இலங்கைக்கு வந்த பிக்குகள் சிங்கள சங்கம் என்ற சமயப் பிரிவை நிறுவினார்.

7) தாய்லாந்தில் இன்றும் இந்துக் கடவுள்களை சிவன், விஷ்ணு, காளி, ஸ்ரீதேவி, பிரமன் வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது.

52. **ஜாவாத் தீவு**

1) ஜாவாத் தீவில் பிரசித்தமான போரோ புதூர் பௌத்தர்களின் புனித தலமாக விளங்குகின்றது.

2) இந்து, பௌத்தம், இஸ்லாம் கொன்பூசியஸ் ஆகிய வழிபாட்டு முறைகளை காணமுடிகின்றது.

3) மகாபாரதம் இராமாயணம் போன்ற காவியங்களும் பௌத்த ஜாதக கதைகளும் பிரபல்யம் பெற்றுள்ளது.

4) போரோ புதூர் விகாரையில் புத்தரின் முற்பிறவி செய்திகள் புதூர் விகாரையில் புத்தரின் முற்பிறவி செய்திகள் கூறும் செதுக்கல்கள் உள்ளன. (அவை 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும்)

5) ஜாவா மன்னன் சந்திரபானு இலங்கை மீது இரு தடவைகள் படையெடுப்பை மேற்கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 07

## மத்தியகால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி

1. மானியமுறை அமைப்பின் தோற்றம்
2. சிலுவை போர்களும் வர்த்தக வளர்ச்சியும்
3. மறுமலர்ச்சி
4. நாடுகாண் பயணங்கள்
5. மதச் சீர்திருத்தம்

1. உலக வரலாற்றை எத்தனை காலப்பகுதியாக வகுக்கலாம்? அவை எவை? 3

   1. புராதன காலம் 2. மத்திய காலம் 3. நவீன காலம்

2. மத்திய காலத்தை வரையறுத்து வகைப்படுத்துக.
   கி.பி 400 முதல் கி.பி 1400 வரை கி.பி 5 - கி.பி 10 மத்திய காலத்தின் முற்பகுதி - இருண்ட காலம்
   மத்திய காலத்தின் பிற்பகுதி - மானியமுறைக் காலம் கி.பி 11 - கி.பி 15

3. ஐரோப்பிய வரலாற்றிலே மத்திய காலத்தின் முற்பகுதியை இருண்ட யுகம் என குறிப்பிடுவதேன்.
   1. அரசியற் பிரச்சினைகளினால் ஏற்பட்ட குழப்பநிலையால்
   2. கறோலிஞ்சி பேரரசை தவிர உறுதியான ஆட்சி நிலவிய இராஜ்ஜியம் வேறில்லாமை.
   3. திருச்சபையை மையமாகக் கொண்டு சிறுசிறு கல்வி நிலையங்களே 12ம் நூற்றாண்டில் பல்கலைக்கழகங்கள் தோன்றும் வரை காணப்பட்டன.
   4. கல்வியறிவு பெரிதும் பின்தங்கியிருந்தமையால்.

4. மானிய முறை என்றால் என்ன?
   மன்னன் தொடக்கம் அடிமட்டத்திலிருந்து வரும் பிரஜை வரையில் நிலத்தை அனுபவித்து வருவது தொடர்பாக நிறைவேற்றி வைக்கும் பொறுப்புகளுடன் இணைந்த சமூக ஒழுங்கே மானிய முறையாகும்.

5. மானிய முறையின் முக்கியமான இயல்புகளைத் தருக.
   i. நிலவுரிமை தொடர்பான சேவை அடிப்படையில் உருவான முறை யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. நாட்டின் நிலம் முழுவதும் அரசனுக்கே சொந்தமானதாக காணப் பட்டது.

iii. அரசனுக்கு சேவை ஆற்றுவோருக்கு வேதனத்திற்கு பதிலாக நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

iv. அரசனுக்கு செய்துவரும் சேவைகளுக்கென பிரபுகளுக்கு வழங்கப் பட்ட காணிகளை கீழ்ப்பட்டவருக்கு பகிர்ந்தளித்தனர்.

6. மானிய முறைமை பொருளாதாரத்தின் அத்திவாரமாக விளங்கியது எது?

விவசாயம்

7. மானியமுறை சமூகப் பிரிவுகளைத் தருக.

1. மன்னர் 2. மதகுருமார் 3. பிரபுக்கள்
4. நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் சாதாரண மக்கள்
5. நிலமானிய சேவகர்கள்

8. நிலமானிய சேவகர்களின் மூன்று பிரிவுகளையும் தருக?

1. சுதந்திரப் பிரஜைகள் 2. பண்ணைச் சேவகர்கள்
3. நிலமானிய அடிமைகள்

9. சுதந்திரப்பிரஜைகள் பற்றி விளக்குக.

பண்ணையின் மற்றைய தமியர்களை விட சுதந்திரமுடையவர் களாக காணப்பட்டதுடன் பிரதானியுடன் கலந்துபேசி சலுகைகள் பெற்று இருந்தார்கள். இவர்களிடம் போர்க்காலச் சேவையே எதிர்பார்க்கப்பட்ட கடமையாகும்.

10. பண்ணைச் சேவகர்கள் பற்றி விளக்குக.

சுதந்திரக்குடிகள் அனுபவித்த சுதந்திரத்தைவிட குறைந்தளவிலான சுதந்திரத்தை அனுபவித்து பிரதானிகளால் ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்து தாம் பெற்ற நிலத்திற்கு பதிலாக வரி அல்லது அறுவடையில் ஒரு பகுதி செலுத்திவந்தார்கள்.

11. நிலமானிய அடிமைகள் பற்றி விளக்குக.

மானியமுறையில் மிகத் தாழ்ந்த நிலையிலேயே அடிமைகள் இருந்தனர். இவர்கள் சதாகாலமும் பிரதானியின் நிலத்தில் வேலைசெய்பவர்களாக இருந்ததோடு இவர்களுக்கு எவ்விதமான பொருளாதார அரசியல் சமூக சலுகைகளும் இருக்கவில்லை.

12. மானியமுறையின் வீழ்ச்சிக்குரிய காரணங்களைத் தருக.

1. வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் விரிவடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பணப்புழக்கம் ஏற்பட்டமை.
3. நகரங்கள் தோன்றியமை
4. கொள்ளை நோய்கள், பஞ்சங்கள் ஏற்பட்டமை.
5. சிலுவைப் போர்கள் ஏற்பட்டமை.
6. சமய சீர்திருத்த இயக்கம் தோன்றியமை.
7. தேசிய அரசுகளின் தோற்றம்.
8. நாடு காண் பயணங்களின் விருத்தி.
9. தன்னிறைவுப் பாங்கு சிதைவுற்றமை.
10. பண்ணை முறை வலுவற்றுப்போனமை.

13. நிலமானிய முறை உண்டாவதற்கு ஏதுவான காரணங்களைத் தருக.
1. உரோமப் பேரரசு மேற்கு உரோம் கிழக்கு உரோம் என இரண்டாக பிரிந்தமை.
2. ஐரோப்பிய இராச்சியங்கள் பல பிராந்தியக்கூறாகப் பிரிவடைந்தமை.
3. கரோலிஞ்ஜிப் பேரரசு வீழ்ச்சியடைந்தமை.
4. அடிக்கடி அன்னியர்களின் ஆக்கிரமிப்புக்கள் ஐரோப்பாவில் இடம் பெற்றமையால்.

14. நிலமானிய முறையின் நன்மைகளைத் தருக.
1. அன்னியப்படை எடுப்புக்களை எதிர்க்க உதவியது.
2. சமய ஒற்றுமை ஏற்பட உதவியது.
3. சமூகரீதியான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.
4. பிரஜைகளுக்குரிய கடமைகள் இருந்தாலும் உரிமைகள் பெறவும் வழிவகுத்தது.

15. சிலுவைப்போர் ஏற்பட்ட விதத்தை விளக்குக.

ஜெருசலேம் கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமாக விளங்கியபோது கி.பி. 637இல் அரேபிய முஸ்லீம் ஜெருசலேமை கைப்பற்றினார். இதன் காரணமாக 7ம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் போர் இடம்பெற்றுவந்தன. கி.பி 1096 - 1291 வரையில் 7 போர்கள் இடம்பெற்றன. அதில் 5 போர்கள் முக்கியமானவை. இப்பேரரசானது ஜெருசலேமை முஸ்லிம்களிடம் இருந்து மீட்பதற்காக கிறிஸ்தவர்கள் தமது உடையில் சிலுவை அணிந்து போரிட்டமையால் சிலுவைப் போர் என்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மானியமுறையின் வீழ்ச்சிக்கு சிலுவைப்போர் எவ்வாறு காரணமானது என்பதை தருக. அதற்கான காரணங்களைத் தருக.
   1. அடிமை முறை வழக்கொழிந்தமையால் மேற்கு ஐரோப்பிய பிரபுக் குலத்தவர்கள் கட்டாயமாக பங்கேற்க வேண்டியிருந்தமை.
   2. அவர்கள் தமது நிலங்களைச் சேர்ந்த அடிமைகளுடன் கொன்ஸ்தாந்து நோபிளை சூழவுள்ள பிரதேசங்களில் ஒன்று திரண்டமையால்.
   3. ஒரு சில பிரபுக்கள் தமது அடிமைகளை விடுவித்து போரில் ஈடுபடச் செய்தனர்.
   4. பெரும்பாலானவர்கள் போருக்கு செல்லாமல் வியாபாரம் செய்து வந்தனர்.
   5. சிலர் பணம் செலுத்தி தம்மை அடிமைத் தன்மையிலிருந்து விடுவித்துக்கொண்டனர்.

17. மானிய முறையின் வீழ்ச்சிக்கு வர்த்தக வளர்ச்சி எவ்வாறு பங்களிப்பு செய்தது என்பதை விளக்குக.
   1. மானிய முறை சமூகத்தின் சில கட்டுப்பாடுகள் தளர்வடையத் தொடங்கியமையால்.
   2. பணப் பாவனை அதிகரித்தமையால்
   3. பிரபுக்களின் நிலங்களில் உழைப்பதற்கு பதிலாக மக்கள் பணம் செலுத்தியமை.

18. மானிய முறையின் வீழ்ச்சிக்கு வர்த்தக நகரங்களின் தோற்றம் எவ்வாறு பங்களிப்பு செய்துள்ளது என்பதை விளக்குக.

    வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் வர்த்தக நகரங்கள் தோன்றின. அதன்பின் வங்கியாளர்கள், வர்த்தகர்கள், கப்பல் உரிமையாளர், வாகன உரிமையாளர்களின் எழுச்சியினால் பிரபுக்கள் அனுபவித்த சலுகைகள் அதிகாரங்கள் என்பன குறைவடைந்தது.

19. தோற்றம் பெற்ற வர்த்தக நகரங்களை தருக.
    இத்தாலியில் - வெனிஸ், ஜெனோவா, மிலான், புளோரன்ஸ்
    பிரான்சில் - பாரிஸ்
    ஜேர்மனியில் - பீட்டர்ஸ், பேர்க், மியூனிக்

20. மத்திய கால ஐரோப்பாவில் கடும் பஞ்சம் கொள்ளைநோய் எக்காலப் பகுதிகளில் ஏற்பட்டது.
    கடும்பஞ்சம் : 1315 - 1317 (இரண்டாம் ஆண்டு)
    கொள்ளைநோய் : 1347 - 1350 (மூன்று ஆண்டு) (பிளேக் நோய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கொள்ளை நோய், பஞ்சம் என்பன மானிய முறையின் வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்த விதத்தை விளக்குக.

கொள்ளை நோய், பஞ்சம் என்பவற்றால் ஐரோப்பிய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மரணித்தனர். ஆகையால் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டு பிரபுக்களின் நிலங்களில் வேலைசெய்ய ஆட்கள் கிடைக்கவில்லை. அதனால் பொருளாதாரம் நலிவடைய அதன் பின்னர் மத்திய ஆட்சி முறை உருவாக மானிய முறை முடிவுக்கு வந்தது.

22. நாடுகாண் பயணம் மானிய முறையின் வீழ்ச்சிக்கு காரணமான விதத்தை விளக்குக.

நாடுகாண் பயணத்துறையின் விருத்தியினால் ஒரு புத்தார்வம் தோன்றி ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களுக்கு இடையிலான பாதைகள் திறக்கப்பட்டு கிராமத்துக்குள் ஒதுங்கி தனித்து வாழ்ந்த மக்கள் திறந்த மனதுடன் புதிதாக சிந்திக்கத் தொடங்கியமையால் மானியமுறை வீழ்ச்சியடைந்தது.

23. ஐரோப்பாவில் நிலவிய மானியமுறை முற்றுமுழுதாக துடைத்தெறிய ஏதுவான காரணிகளைத் தருக.

i. 17ம் நூற்றாண்டு தொடங்கிய கைத்தொழில் புரட்சி
ii. 18ம் நூற்றாண்டு இடம்பெற்ற பிரெஞ்சுப் புரட்சி
iii. 20ம் நூற்றாண்டில் இடம்பெற்ற ரஷ்யப் புரட்சி

## சிலுவைப் போர்களும் வர்த்தக வளர்ச்சியும்

24. சிலுவை யுத்தம் தோற்றம்பெற ஏதுவான காரணத்தை விளக்குக.

கி.பி. 637 இல் அரேபிய இனத்தவர் கிறிஸ்தவர்களின் புனிதஸ்தலமான ஜெரூசலேமை கைப்பற்றினார். ஆயினும் தமது புண்ணிய பூமியில் வழிபாடுகளை செய்ய கிறிஸ்தவர்களுக்கு அனுமதி வழங்கினார். பிற்காலத்தில் அத்தகைய சமய நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் இடையூறுகளை விளைவித்தனர். அதன் காரணமாக புனித பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீட்டு எடுப்பதற்கு என கிறிஸ்தவர் பாப்பாண்டவரிடம் அனுமதி கோரியதையடுத்து ஐரோப்பிய கிறிஸ்தவர் சிலுவை அணிந்து கொண்டு முஸ்லீம்களுக்கு எதிராக போர் தொடுத்தனர்.

25. சிலுவைப்போரில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளைத் தருக.

1. அனைவரினதும் பாவங்கள் மன்னிக்கப்படும்.
2. இறப்பவர் விண்ணுலகம் செல்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இறப்பவரின் சொத்து, குடும்பம என்பவற்றுக்கு திருச்சபை பாதுகாப்பளிக்கும்.
4. கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.
5. குற்றவாளிகளாயின் தண்டனைகள் நீக்கப்படும்.

26. சிலுவைப் போர்களில் முக்கியமான சிலுவைப்போர் இடம்பெற்ற காலப் பகுதிகளைத் தருக.

| போர்கள் | காலப்பகுதிகள் |
|---|---|
| முதலாவது சிலுவைப்போர் | 1096 - 1099 |
| இரண்டாவது சிலுவைப்போர் | 1146 - 1148 |
| மூன்றாவது சிலுவைப்போர் | 1188 - 1192 |
| நான்காவது சிலுவைப்போர் | 1202 - 1204 |
| ஐந்தாவது சிலுவைப்போர் | 1254 - 1291 |

27. சிலுவைப் போரின் விளைவை விளக்குக.

1096 - 1099 வரை இடம்பெற்ற முதலாவது சிலுவைப்போரில் கிறிஸ்தவர் கொன்ஸ்தாந்தி நோபுளுடன் இணைந்து அணிதிரண்டு போர்செய்து கிறிஸ்தவர் ஜெருசலேமை மீண்டும் கைப்பற்றினார்.

இரண்டாவது சிலுவைப்போரில் துருக்கி இனத்து பேரரசன் சலாவூதின் மீண்டும் ஜெருசலேமை தங்கள் வசமாக்கினார்.

அதன்பின் நடந்த சிலுவைப்போரிலும் வெற்றி கிடைக்கவில்லை.

28. சிலுவைப் போர்களின் (1096 - 1291) விளைவுகளைத் தருக?
1. ஐரோப்பியர்கள் போர்க்கலைகள் தொடர்பாக பல முக்கியமான விடயங்களைக் கற்றுக்கொண்டனர்
2. குறுக்கே எய்யும் அம்பின் உபயோகம் அறிமுகம்
3. கவன் கல் எறிதல் அறிமுகம்
4. சுரங்கங்களை அமைத்தல் முறை பரவியது
5. புறாக்களைக் கொண்டு தகவல் பரிமாறல்
6. முஸ்லீம் சீனரிடம் இருந்து வெடி பொருட்களின் உபயோகம்
7. ஐரோப்பாவில் அரசர்களின் அதிகாரம் அதிகரித்தது
8. பிரபுக்களின் அதிகாரம் வீழ்ச்சியடைய வழிவகுத்தது
9. பெண்களின் செயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் (தமது கணவர்கள் யுத்தத்தில் மரணமடையும் போது அரசியல் பொறுப்புக்களை ஏற்கும் நிலை)
10. இத்தாலியில் நகரங்கள் வளர்ச்சியடைந்தமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அரிசி, சீனி, பழவகைகள், பருத்தித்துணி மற்றும் வாசனைத் திரவியங்கள் போன்ற கீழைத்தேச உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு புதிய கேள்வி ஏற்பட்டமை.

29. சிலுவைப்போர்கள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கும்போது பொருட்கள் விநியோகிக்கப்பட்ட முறையை விளக்குக.

1. சீன, முஸ்லிம் இத்தாலி வர்த்தகர்கள் பல வணிக மார்க்கங்களுக்கு ஊடாக ஐரோப்பாவிற்கு பொருட்கள் எடுத்துச்சென்றனர்.
2. இத்தாலி வர்த்தகர்கள் வர்த்தகத் தொடர்பை பெருமளவு ஏற்படுத்தினர்.
3. இத்தாலிச் சந்தைகளில் இருந்து எடுத்து வரப்பட்ட வியாபாரப் பொருட்கள் அல்பஸ் மலைத்தொடர் ஊடாக ஐரோப்பாவிற்கு விநியோகிக்கப்பட்டன.

30. வர்த்தகத்தில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளையும் நகரங்களையும் தருக.

நாடுகள் - பிரான்ஸ், ஜேர்மனி

நகரங்கள் - ஜினோவா, கொன்ஸ்தாந்திநோபிள், அலெக்சாத்திரியா, கம்பர்க், லுபெக், பிரேட்டன்

31. வணிக நகரங்களை பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பு எது?
கன்சிட்டிங் லீக்

32. ஐரோப்பாவில் உயர்ந்த கேள்வியுடைய பொருட்களையும் வழங்கிய நாடுகளையும் தருக.

உயர்ந்த கேள்வி - வாசனைத்திரவியம், மருந்து வகைகள், நறுமணப் பொருட்கள், சாய வகைகள், முத்து, மாணிக்கம்

ஆசியாவிலிருந்து - பட்டு, பருத்தி, தங்கம், வெள்ளி, யானைத்தந்தம்

மத்திய கிழக்கிலிருந்து - தானியம், புடவைகள், பழவகை

பால்டிக்கிலிருந்து - கம்பளி, பலகை, மீன்வகை

ஸ்பானியாவிலிருந்து - வைன் வகைகள், எண்ணெய்கள், தோல் பொருட்கள், போர் உபகரணம்

33. ஐரோப்பாவில் வர்த்தகம் வளர்ச்சி அடைந்ததிற்கான சான்றினை தருக.

தென்கிழக்கு பிரான்சில் அமைந்திருந்த சம்பே வர்த்தக மத்திய நிலையம் இதற்கு சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. வர்த்தக மத்திய நிலையம் உருவாக்கியமையால் ஏற்பட்ட அனுகூலங் களைத் தருக.

1. பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து அறிமுகமாக வாய்ப்பு கிடைத்தது.
2. வணிக விழாக்களை நடத்தி களிப்புற்றனர்.
3. வங்கித் தொழில்முறை தோன்றியது.
4. பணம், வங்கி போன்ற முதலாளித்துவ பொருளாதார கோட்பாடுகள் வளர்ச்சியடைந்தன.

## மறுமலர்ச்சி

35. மறுமலர்ச்சி என்ற சொல்லின் பொருள் என்ன?

1. மறுபிறப்பு - கிரேக்க உரோம் நாகரிகங்களில்
2. மீண்டும் மலர்தல் - எளிமையான கருத்து
3. கலாசார மோதல்களின் ஒரு விளைவு
4. மீள உதித்தல்

36. மறுமலர்ச்சி என்பதன் பொருளை விளக்குக.

அரசியல், சமூக, சமய, பொருளாதார, விஞ்ஞானத்துறைகள் அனைத்திலும் உண்டான புதிய எழுச்சியும் பரம்பலும் ஆகும்.

37. மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்களைத் தருக.

1. உடனடிக் காரணம்

கிழக்கு உரோமின் தலைநகராக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் ஒடோமன் துருக்கியர்களால் 1453ல் கைப்பற்றப்பட்டமை.

2. நீண்ட காலக் காரணி

i. 12 நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் பணம் படைத்த வர்த்தக வகுப்பொன்று தோன்றியது. அவர்கள் கலைத்துறை வளர்ச்சி பற்றி சிந்திக்க ஓய்வு நேரம் கிடைத்ததுடன் தேவையான பணமும் கிடைத்தமையால்
ii. இத்தாலியில் பழைய உரோம நாகரிகத்தின் அம்சங்களின் எச்சங்கள் காணப்பட்டமை.
iii. கிரேக்க உரோம் இலக்கிய நூல்களை கற்பதில் ஆர்வம் புத்துயிர பெற்றது.
iv. ஜேர்மனி இனத்தவரான ஜோன்கட்டன் பேக் என்பவரால் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கடதாசி உற்பத்தி முறையும் கண்டுபிடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. கி.பி 1453ம் ஆண்டு கொன்தாந்திநோபிள் ஓடோமன் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை எவ்வாறு உடனடிக் காரணமாக அமைந்தது என்பதை விளக்குக.

i. மத்தியகால கிரேக்க உரோம் இலக்கிய நூல்களும் தத்துவ நூல்களும் இந்நகரில் பாதுகாக்கப்பட்டமையால்

ii. இந்நகரம் துருக்கியர் வசமானதால் கற்ற கிறிஸ்தவர்கள் அந்நூல்கள் அனைத்தையும் மேற்கு ஐரோப்பியர் கொண்டு சென்றமையால்

iii. மேற்கு ஐரோப்பா முழுவதும் அந்நூல்கள் ஆராயப்பட்டதனால் கிரேக்க, உரோம கலாசாரம் மீண்டும் எழுச்சிபெற்றமையால்.

39. மறுமலர்ச்சியின் பிரதான கட்டங்கள்

1. கலாசார மறுமலர்ச்சி
2. விஞ்ஞான மறுமலர்ச்சி
3. சமய மறுமலர்ச்சி
4. நாடுகளை கண்டுபிடித்தல் (நாடுகாண் பயணங்கள்)

40. கலாசார மறுமலர்ச்சி என்பதனை விளக்குக.

மறுமலர்ச்சிக் காலத்தில் மொழி இலக்கியம், சித்திரக் கலைகள், சிற்பக்கலைகள், கட்டடக்கலைகள் என்பவற்றில் ஏற்பட்ட புதிய எழுச்சியே ஆகும்.

41. மொழி இலக்கியங்கள் கலாசார மறுமலர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குக.

i. பழைய கிரேக்க லத்தீன் மொழிகள் புத்துயிர்பெற்று கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.

ii. கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் எழுதப்பட்ட நூல்களை கற்கும் ஆர்வம் ஏற்பட்டமையால்.

iii. இத்தாலி மாத்திரமன்றி ஏனைய நாடுகளிலும் மொழி இலக்கியம் பற்றி பெரும் எழுச்சி உண்டானமை

42. மொழி இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த நாடுகளையும் நூலாசிரியர்களையும் தருக.

இத்தாலி - தாந்தே, பெட்றாக், பொக்காசியோ
கிரேக்கம் - ஹோமர்
இங்கிலாந்து - சேர் தோமஸ்மூவர், பிறான்சிஸ்பேகன்,
வில்லியம் சேக்ஸ்பியர்
பிரான்ஸ் - இறாஸ்மாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரக்கலை

43. சித்திரக்கலையின் முக்கிய அம்சங்களை தருக.

i. மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக்கலை பரந்த அளவில் விருத்தி யடைந்தது.

ii. சித்திரக்கலையின் வளர்ச்சிக்கு இத்தாலி நாட்டின் புளோறன்ஸ் நகரம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

iii. புலன் உணர்ச்சி இன்பங்களை தூண்டும் இயற்கை தன்மைக்கும் முக்கியத்துவம் அளித்து கலைப்படைப்புக்கள் உருவாக்கப்பட்டன.

iv. சித்திரங்களில் மனித உருவங்களும் தெய்வங்களின் உருவங் களும் நிர்வானமாகவும் அரைநிர்வானமாகவும் வரையப்பட்டன.

v. செல்வந்தர்களின் உருவங்களை வரைதல் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றது.

vi. புளோறன்ஸ் நகரில் வாழ்ந்த மசக்கியோ, பொட்டி செல்லி, லியானடோ டாவின்சி, மைக்கேல் ஆஞ்சலோ, இராப்பேல், தித்தியான் ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர்.

44. **லியானடோ டாவின்சி (1452 - 1515)**

இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த புளோறன்ஸ் நகரில் வின்சியில் பிறந்தார். இவர் தலைசிறந்த ஓவியக்கலைஞராகவும், இசைக் கலைஞராகவும், பொறியியலாளராகவும், சிற்பக் கலைஞராகவும் காணப்பட்டதுடன் அறிவியல், கணிதம், தாவரவியல், உயிரியல் எனப்பல துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவராக காணப்பட்டார். இவருடைய ஓவியங்கள் அழியாப் புகழ்பெற்றவையாகக் காணப்பட்டன.

45. லியானடோ டாவின்சியின் படைப்புக்களையும், சிறப்புக்களையும் தருக.

1. மாறா புன்னகையுடன் கூடிய அழகான பெண்ணின் உருவமான **மொனாலிசாவை** வரைந்தார்.
2. மிலான் மடாலயத்தில் இயேசுவின் இறுதி இராப்போசனத்தை அழகாக வரைந்தார்.
3. வில்டி யூறான்ற் என்பவர் இவர் எக்காலத்துக்கும் உரிய பூரண மனிதன் என அழைத்தார்.

**46. மைக்கல் ஆஞ்சலோ (1475 - 1564)**

இத்தாலியின் புளோறன்ஸ் நகரிலுள்ள கேப்பிரசி நகரில் 1475ல் பிறந்தார். இவர் சித்திரக்கலைஞரும், சிற்பக் கலைஞரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஜீலியஸ் பாப்பாண்டவரின் அனுசரணையின்கீழ் உரோமாபுரியின் சிஸ்டையின் தேவாலயத்தின் விதானத்திலே இவர் வரைந்த ஓவியங்கள் அபாரமான படைப்புக்கள் ஆகும். இவர் உருவாக்கிய பீட்டர் சிலை, மேடில்வின் உருவம் என்பன இன்று உலக மக்களின் அபிமானத்தை பெற்ற படைப்புக்கள் ஆகும்.

47. **இராப்பேல் (1483 - 1520)**

i. இக்கலைஞரின் சிறப்பினை ஐரோப்பிய ஓவியங்களில் காணக் கூடியதாக உள்ளது.

ii. சிஸ்ரீன் மெடோனோ பத்திக்கானில் இவரது தூண் வேலைகள் பிரசித்தமானவையாகும்.

iii. பாப்பரசர் 2ம் யூலியஸ் பத்தாவது லியோ ஆகியோருடைய காலத்தில் இவரால் ஓவியங்கள் வரையப்பட்டன.

48. **தித்தியான் (1477 - 1576)**

i. நிறங்களின் பாவனையில் பிரசித்தி பெற்றவராவார்.

ii. 99வது வயதில் இறக்கும்போது 700 ஓவியங்களை தீட்டியதாகவும் அதில் வேர்ஜின் ஓவியம் பிரசித்தமானதாகும்.

iii. இக்கலைஞருக்கு ஐந்தாம் சான்ஸ் ஸ்பானிய மன்னன் 2ம் பிலிப் ஆகியோர் ஆதரவளித்தனர்.

49. மறுமலர்ச்சிக்கால சிற்பக்கலை சிறப்புக்களைத் தருக.

1. 13ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கிரேக்க உரோமக் கலையின் படியே சிலைகள் செதுக்கப்பட்டன.
2. பளிங்குக் கற்களிலே சிலைகள் செதுக்குகின்ற வழக்கம் தெட்டத் தெளிவாகின்றது.
3. மைக்கேல் ஆஞ்சலோ உரோமாபுரியின் புனித பேதுறு தேவாலயத்தில் செதுக்கிய பீட்டர் சிலை உலகப்புகழ் பெற்றதாகும்.

50. மறுமலர்ச்சிக் கால கலைஞர்களும் அவர்களின் கலைப்படைப்புக் களையும் தருக.

டொனடேலோ - புனித ஜோர்ஜ்இன் சிலை
இராப்பேல் - சிஸ்தீன் மெடோனோ
தித்தியான் - நிறங்களின் பாவனை
ஜடோ - யேசுநாதர் வாழ்க்கையைக் கண்ணாடியில் வரைந்தார்.
லோறன்ஸ் சாஜிபர்டி - புளோரன்ஸ் நகர மோட்ஷத்தின் கதவுகளை செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. மறுமலர்ச்சிக்காலத்தின் கட்டிட கலையின் விசேட அம்சங்களை தருக.

1. அரைக்கோள கலைச்சுவர்கள், செங்குத்தான கூரைகள், சௌகரிய மான மாளிகைகள், பிரமிட் கோபுரங்கள், உயரிய தூண், வட்ட வில் வளைவு போன்றன கட்டிடக் கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன.

2. உரோம் - புனித பேதுரு, புனித பீற்றர் தேவாலயம்
வெனிஸ் - புனித மாக் தேவாலயம்
இங்கிலாந்து - புனித பவுல் தேவாலயம்
கிரேக்கம் - அதன்ஸ் நகர மாளிகை

## விஞ்ஞான துறை

52. விஞ்ஞான துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தவர்களை தருக.

| விஞ்ஞானிகள் | நாடு | காலப்பகுதி |
|---|---|---|
| நிக்கலஸ் கொப்பனிக்கஸ் | போலந்து | 1473 - 1543 |
| யொஹன்னஸ் கெப்லர் | ஜேர்மனி | 1571 - 1630 |
| கலிலியோ கலிலி | இத்தாலி | 1564 - 1642 |
| ஐசாக் நியூட்டன் | இங்கிலாந்து | 1642 - 1727 |

53. நிக்கல்ஸ் கொப்பனிக்கஸ் எவ்வாறான கருத்தை பொய்ப்பித்து தனது கருத்தை எவ்வாறு முன்வைத்தார்.

பிரபஞ்சத்தின் மையம் பூமி என்றும் அது தட்டையான பொருள் எனவும் மத்திய காலத்தில் நிலவிய கருத்தை பொய்ப்பித்ததுடன் சூரிய மைய கொள்கையை முன்வைத்து பூமியும் ஏனைய கோள்களும் வலம்வருகிறது எனக்கூறி பூமி உருண்டை என நிருபித்தார். அதனால் இவர் வானியலின் தந்தை என போற்றப்படுகின்றார்.

54. **யொஹன்னஸ் கெப்லர்**

சூரியனைச் சுற்றி புவியும் ஏனைய கோள்களும் நீள்வட்டப் பாதையில் வலம்வருகின்றது என கணித சமன்பாடுகளை பயன்படுத்தி கொப்பனிக்கஸ்சின் கருத்தை நிருபித்தார்.

55. **கலிலியோ கலிலி**

i) இவர் தொலைநோக்கியை கண்டுபிடித்து வானிலுள்ள பொருட்கள் குறித்து விரிவான ஆய்வுகளை நடாத்தி அதாவது சந்திரனில் உள்ள குழிகள், மலைகள், சூரியனின் கறைத்திடம், வியாழனின் துணைக்கோள்கள் என்பவை பற்றி ஆய்வுகளை நடாத்தியதுடன் கொப்பனிக்கஸ்சின் கருத்துக்களையும் ஊர்ஜிதம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) பிரசித்தி பெற்ற பீசா கோபுரத்தில் ஏறி வேறுபட்ட கனம் உடைய இரு பொருட்களை கீழே போட்டு அவை இரண்டும் ஒரே நேரத்தில் விழுவதைக் காட்டினார்.

iii) 1632 ல் வானியல் சாஸ்திரம் என்ற நூல் எழுதப்பட்டது. அது திருச்சபையால் பகிரங்கமாக எரிக்கப்பட்டது.

விஞ்ஞான பரீட்சார்த்தங்களின் பிதா என்ற முறையில் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். எனினும் கத்தோலிக்க திருச்சபையை கடுமையாக எதிர்த்தமையால் நாடுகடத்தப்பட்டார்.

56. **ஐசாக் நியூட்டன்**

இவர் அப்பிள்ப்பழம் விழுந்ததை வைத்து ஆய்வு நடாத்தி புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்தார். அத்துடன் நீரிலும் கண்ணாடியிலும் ஒளி ஊருடுவும்போது ஒளித்தெறிப்பு ஏற்படும் என கண்டுபிடித்தார்.

57. மருத்துவ துறையின் விருத்திக்கு பங்களிப்புச்செய்த விஞ்ஞானிகளை தருக.

1. சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சரசல் பவுஸ்
2. ஸ்பானியாவைச் சேர்ந்த மைக்கல் சர்வேஸஸ்
3. ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த வில்லியம் ஹாவே

58. வைத்தியத்துறையின் முக்கிய அம்சங்களை தருக.

1. இத்தாலியின் பாதுவாப் பல்கலைக்கழகம் வைத்தியத் துறையில் புகழ்பெற்ற ஒன்றாகும்.
2. வில்லியம் ஹாவே இரத்தோட்டம் குறித்த (குருதிச்சுற்றோட்டம்) முக்கிய விடயங்களை கண்டுபிடித்தார்.

## நாடுகாண் பயணம்

59. நாடுகாண் பயணங்களில் ஐரோப்பியர் ஈடுபட தூண்டிய காரணிகளைத் தருக.

1. கொன்ஸ்தாந்தி நோபிள் கைப்பற்றப்பட்டமையால்

   கி.பி 1453 இல் ஒடோமன் துருக்கியர் கைப்பற்றியமையால் கீழைத்தேசத்திற்கும் மேலைத்தேசத்திற்கும் இடையில் காணப்பட்ட தரைமார்க்க வர்த்தகப்பாதை தடைப்பட்டமையால்

2. விஞ்ஞானத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள்

   புவி உருண்டை வடிவானது என நிருபிக்கப்பட்டதில் இருந்து ஒரு இடத்திலிருந்து மேற்காக பயணம் செய்து ஆசியாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டமையும் தொலமியின் உலகப்படமும்.

3. துருக்கியரின் கொள்கைகளும் செயற்பாடும்

எகிப்து, சிரியா வரை பரந்திருந்த துருக்கியர்களின் அவமதிப்பும் பொருட்களின் விலை அதிகரிப்பும், வரி விதிப்பும் புதிய பாதைகளை கண்டுபிடிக்கத் தூண்டியது.

4. **கப்பல் கட்டும் தொழிலும் உபகரணங்களின் கண்டுபிடிப்பும் வளர்ச்சியும்**

கப்பலோட்டியின் திசைகாட்டி வட நட்சத்திரத்தைக் கொண்டு திசையை அறியும் கருவி, தொலைநோக்கி புயல், அலை, நீரோட்டம் என்பவற்றின் அறிவு வளர்ச்சி.

5. மன்னர்களினதும் மாலுமிகளினதும் ஆதரவு

போத்துக்கல் நாட்டு கடலோடி ஹென்றியும் பேடினன் இஸபெலா மற்றும் நாடுகாண் பயண வீரர்களும் ஆதரவு வழங்கியமையால்.

60. நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட நாடுகாண் பயண வீரர்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலோடி ஹென்றி | 2. | பர்த்தலோமிய டயஸ் |
| 3. | கிறிஸ்தோபர் கொலம்பஸ் | 4. | வாஸ்கொடகாமா |
| 5. | பாடினந்து மகலன் | 6. | அமெரிகோ வெஸ்புசி |
| 7. | ஜக்குவிஸ் கார்டியர் | 8. | பெர்னான்டோ கொட்டேஸ் |
| 9. | பிரான்சிஸ்கோ பிஸாரோ | 10. | ஜொலைட் |
| 11. | சம்பளேன் | 12. | ஹென்றி ஹட்சன் |
| 13. | பல்போவா | | |

61. **கிறிஸ்தோபர் கொலம்பஸ் (கி.பி. 1451 - 1506)**

இத்தாலியின் ஜெனோவா நகரில் பிறந்த கொலம்பஸ் இளம் பராயத்திலேயே கடற்பயணங்களில் ஆர்வம் உடையவராக காணப்பட்டு ஸ்பானிய மன்னன் பேடினந் அரசி இஸபலாவின் உதவியைப் பெற்று 1492ல் ஓகஸ்ட் மாதமளவில் புதிய கடல் மார்க்கத்தை கண்டுபிடிக்க ஆயத்தமாகி 1492ல் ஒக்ரோபர் மாதமளவில் பஹாமாத்தீவை அடைந்தான்.

கொலம்பஸ் மீண்டும் கி.பி. 1493, 1498, 1503 களில் பயணம் செய்து 1493ல் கியூபா, 1498ல் ரினிடாட், வெனசுலாவையும் 1503ல் கொண்டூரஸ், நிக்கரகூவா என்பவற்றை கண்டுபிடித்தார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவை சூழவுள்ள பல தீவுகளை கண்டுபிடித்தமையால் அமெரிக்காவை கண்டுபிடித்த பெருமை இவரையே சாரும்.

62. வஸ்கொடகாம (கி.பி 1460 - 1524)

கி.பி 1497ல் விஸ்பன் நகரிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து ஆபிரிக்காவின் தென்முனைக்குச் சென்று 1498 மே மாதம் இந்தியாவின் கள்ளிக்கோட்டை துறைமுகத்திற்குச் சென்றார். இவரே இந்தியாவுக்குச் சென்ற 1வது ஐரோப்பியர் ஆவார். இவர் இந்தியாவில் கூறிய வாசகம் 'நாம் கிறிஸ்தவர்களையும் வாசனைத் திரவியங்களையுமே தேடி வந்துள்ளோம்' எனக் கூறினார்.

63. வஸ்கொடகாம கள்ளிக்கோட்டைக்கு சென்றடைந்த விதத்தை விளக்குக.

போர்த்துக்கலிலிருந்து புறப்பட்டு ஆபிரிக்காவை சென்றடைந்து மொசாம்பிக்கா நாட்டில் தரையிறங்கி அங்குள்ள சுதேச மக்களிடம் முகம் பார்க்கும் கண்ணாடியைக் காட்டி ஏமாற்றிவிட்டு பிரச்சினைகள் இல்லாது கப்பல் ஏறினான். அதன்பின் அவர் மாலுமிகளின் கலவரம் ஒன்றையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அப்படி இருந்தபோதும் காமா இம்னு, மஜீத் என்ற இரு முஸ்லீம் மாலுமிகள் உதவியுடன் மேற்கிந்தியாவில் உள்ள கள்ளிக்கோட்டையைச் சென்றடைந்தார்.

64. பேடினன்ட் மகலன் (கி.பி 1480 - 1521)

1. போர்த்துக்கல் நாட்டவர். இவர் ஸ்பெயின் நாட்டு அரசனின் அனுசரணையுடன் 1519ல் கேடீஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு பசுபிக் சமுத்திரத்திற்கு ஊடாக சீனாவுக்கு செல்லக்கூடிய ஒரு கடல் மார்க்கத்தை கண்டுபிடிக்கும் பொருட்டு கப்பலில் பயணித்தான்.
2. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து பசுபிக் சமுத்திரத்திற்குள் பிரவேசிக்கும் தொடுகடலை கண்டுபிடித்தமையால் மகலன் தொடுகடல் எனப் பெயரிடப்பட்டது.
3. விக்ரோரியா கப்பலில் பல மாலுமிகளுடன் [267 பேர்] ஸ்பெயினிலிருந்து புறப்பட்டு மகலன் நீரிணைக்கு ஊடாக பயணம்செய்து பசுபிக் சமுத்திரத்தை அடைந்து பின் வடமேற்கு திசையாகச் சென்று பிலிப்பைன்ஸ் தீவுகளை அடைந்து சுதேச மக்கள் செய்த போரில் மகலன் இறக்க டெல்கானோ என்ற மாலுமி தலைமைதாங்கி நடாத்தி நன்நம்பிக்கை முனையைச் சுற்றி ஸ்பெயினை அடைந்து புவி கோளவடிவானது என்று நிரூபித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. பத்தலோமிடயஸ்

1486ல் கேப் முனையைச் சுற்றி பயணம்செய்த வேளை புயலில் சிக்கி அடிபட்டு ஆபிரிக்காவின் தென்முனைக்குச் சென்றான். இவன் அம்முனைக்கு புயல்முனை என பெயரிட அதன்பின் வந்த போர்த்துக்கல் மன்னன் நன்நம்பிக்கை முனை என பெயரிட்டான்.

66. அமெரிக்கோ வெஸ்புசி

இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். கொலம்பஸ்சுடன் பயணம் செய்து அமெரிக்காக் கண்டத்தில் கால்பதித்த ஐரோப்பியர் என்ற பெருமை இவரையே சாரும். இவருடைய பெயரே அக்கண்டத்தில் சூட்டப்பட்டுள்ளது.

67. கடலோடி ஹென்றி

போர்த்துக்கல்லைச் சேர்ந்த ஹென்றி இளவரசனும் ஸ்பானியாவை சேர்ந்த பேர்டினன் இஸபெலா இளவரசியும் கடற்பயணங்களை மேற்கொள்ள முன்வந்தனர். கென்றி மன்னன் சென்வின்ஷெண்ட் முனையில் கடற்பயண செயற்பாடுகளை பயிற்றுவிக்கும் நிலையமொன்றை நிறுவி கி.பி 1419ல் இந் நிலையத்தில் படவரைஞர்கள் வானசாஸ்திர வல்லுனர்கள் ஆகியோரை பணியில் அமர்த்தி மதீரா, கனரி, சென்கல் போன்ற பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் குடியேற்றங்கள் ஆக்கப்பட்டு இம்மன்னனாலேயே கினித் தீவிலிருந்து முதன்முதலில் நீக்கிறோ அடிமைகள் போர்த்துக்கல்லுக்கு கொண்டுவரப்பட்டனர்.

68. கண்டுபிடிக்கப்பட்ட இடங்களையும் ஆண்டுகளையும் நபர்களையும் அட்டவணைப்படுத்துக.

| இடங்கள் | ஆண்டுகள் | கண்டுபிடித்தவர்கள் |
|---|---|---|
| 1. மெக்சிக்கோ | 1519 | பெர்னான்டோ கோட்டைஸ் |
| 2. பேரு | 1533 | பிரான்சிஸ்கோ பிஸாரோ |
| 3. கேப் பிரிட்டன் | 1497 | ஜோன்கபொற், செபஸ்டியன் கபொற் |
| 4. சென்ட் லோறன்ஸ், புளோரிடா | - | டிரேக், கில்பர்ட், வோல்டர் ராலே |
| 5. சென்ட் லோறன்ஸ் நதிப்பிரதேசம் | 1535 | ஜக்குவிஸ் கார்டியார் |
| 6. மிசிசிப்பி நதிப் பிரதேசம் | 1573 | ஜொலைட் |
| 7. கியுபெக் | 1608 | சம்ப்ளேன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 8. ஹட்சன் நதி ஹட்சன் வளைகுடா | 1609 | ஹென்றி ஹட்சன் |
| 9. பனாமா நீரிணைப் பிரதேசம் | 1513 | பல்போவா |

## சமய சீர்திருத்தங்கள்

69. சமய சீர்திருத்தத்திற்கு வழிவகுத்த காரணிகளைத் தருக.
  1. மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட சிந்தனைப்புரட்சியினாலும் விஞ்ஞான வளர்ச்சி கண்டுபிடிப்புக்கள் காரணமாகவும் மனிதன் கூர்மையாக ஆராய தலைப்பட்டமை.
  2. திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தமை.
  3. அரசியல் ரீதியாக திருச்சபையின் ஆதிக்கம் மன்னரின் ஆதிக்கத்தைவிட மேலோங்கியிருந்தமையால் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மன்னர்கள் எதிர்த்தமை.
  4. திருச்சபையிடமிருந்து சொத்துக்களை மண்ணரும் மத்திய வகுப்பினரும் திரும்பப்பெற முயன்றமை.
  5. திருச்சபையின் ஊழல்கள் பற்றி கண்டனங்கள் செய்யப்பட்டமை யால்.

70. திருச்சபைக்கு எதிராக கண்டனம் செய்தோரில் முக்கியமானவர்களைத் தருக.
ஆங்கிலேயரான ஜோன் வைக்கிளிப்
பொகிமியரான யோன் ஹஸ்
பிரான்சியரான இறாஸ்மஸ்

71. மத்தியகால நடுப்பகுதியில் இனசன்ற் என்ற பாப்பரசர் கூறிய கருத்தினைத் தருக.
"தான் கடவுளிலும் கீழானவர் என்றும் மனிதர்களிலும் மேலானவர் என்றும் தன்னை எவரும் கட்டுப்படுத்த முடியாது" எனக் கூறினார்.

72. இனசன்ற் என்ற பாப்பரசரின் கருத்தை கடுமையாக எதிர்த்தவர்களைத் தருக.
1. செனட் பேர்னாட் 2. செனட் பிரான்சிஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. 12ம் நூற்றாண்டில் திருச்சபைக்கு எதிராக உருவான இயக்கங்களைத் தருக.
    1. வொல்டென்சியன்  2. அல்பிகென்சியன்

74. ஜோன்ஹஸ்ஸை திருச்சபை ஏன் உயிருடன் எரித்தது.
    தேவாலயங்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு இயக்கம் என கூறியமையால்.

75. கிறிஸ்தவ திருச்சபைக்கு எதிராக எழுந்த சீர்திருத்த இயக்கத்தை வழிநடாத்தியவர்களைத் தருக.
    மாட்டின் லூதர் - ஜேர்மனி  யோன் கல்வின் - சுவிற்சலாந்து
    உல்றிச் ஸ்வின்கின் - பிரான்ஸ்

76. அகஸ்தியான் சபையின் மதப்போதகராக இருந்த மாட்டின் லூதர் முன்வைத்த இரு வினாக்களையும் தருக.
    1. "பிறப்பிலே பாவியாக இருக்கும் ஒருவர் மீட்புப்பெறுவது எவ்வாறு?"
    2. "மனிதனுக்கு மீட்சியைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஒரேயொரு நிறுவனம் திருச்சபைதானா?"

77. மாட்டின் லூதர் (1483 - 1546)
    1. 1483ம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்தார்.
    2. விற்றன் பேக் பல்கலைக்கழகத்தில் மறையிற் பேராசிரியராக இருந்தார்.
    3. திருச்சபையின் கொள்கைகளை விளக்கி வெளிவந்த பாவமன்னிப்பு என்ற பத்திரிகைக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தார்.
    4. 95 வாக்கியங்களில் எழுதி விற்றன் பேக் திருச்சபையின் கதவில் ஒட்டிவிட்டார்.
    5. கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையில் மதகுருமாரோ பாப்பாண்டவரோ நிற்கத்தேவையில்லை என லூதர் பிரச்சாரம் செய்தார்.
    6. தேவாலயத்திற்கு பணத்தொகைகளைப் பங்களிப்புச் செய்வதன் மூலம் பாவ மன்னிப்பு பெறமுடியும் என்ற கருத்தை எதிர்த்தார்.
    7. பைபிளின் புதிய ஏற்பாட்டை ஜேர்மனி மொழியில் மொழிபெயர்ததார்.
    8. லியோ பாப்பரசர் மாட்டின் லூதரை திருச்சபையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கட்டளையை 1520இல் தீயிட்டார்.
    9. மாட்டின் லூதரை கொலைசெய்ய சூழ்ச்சி இடம்பெற்றபோது 'கர்த்தர் எனக்கு உதவுவார்' எனக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 08

# ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றம்


1. ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அதிகார விரிவாக்கம்.
2. கிறிஸ்தவ சங்கத்தின் பரம்பல்
   - i. றோமன் கத்தோலிக்க மதம்
   - ii. புரட்டஸ்தாந்து மதம்

1. தேசிய அரசு என்றால் என்ன?

   சட்ட ரீதியான அரசியல் எல்லைக்குள் வசித்த ஒரே கலாசாரம் மொழியை பின்பற்றுகின்ற மக்களின் கீழ் ஒன்றிணைந்து அமைக்கப்பட்டதே தேசிய அரசு ஆகும்.

2. தேசிய அரசுகள் முதல் தோன்றிய நாட்டையும் பின்தோன்றிய நாடுகளையும் தருக.

   முதல் தோன்றியது - ஸ்பானியா
   போர்த்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் முக்கியம் பெறுகின்றன.



3. தேசிய அரசுகளாக மாற்றம் அடைய முன்னர் இந்நாடுகள் எவ்வாறு காணப்பட்டன.
   1) கிறிஸ்தவ உலகில் பிரிவினை காணப்படவில்லை.
   2) அரசுகள் அனைத்திலும் மன்னர் ஆட்சி நிலவிவந்தது.
   3) அரசுகள் அனைத்தும் இலத்தீன் மொழி மூலம் ஒருங்கிணைந்து இருந்தனர்.

4. தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமைக்கு ஏதுவான காரணங்கள் தருக.
   1) மானியமுறை வீழ்ச்சி அடைந்தமை.
   2) மறுமலர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள்.
   3) சிலுவைப்போரில் ஏற்பட்ட தோல்வியில் கிறிஸ்தவ உலகை பிரிவடையச் செய்தமை.
   4) மத்திய வகுப்பினர் எழுச்சியும், புதிய எண்ணங்களின் தோற்றமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) 16ம் நூற்றாண்டில் உறுதிபடைத்த மன்னர்கள் உருவாகியமை.
6) பிரதேச அரசர்கள் பலமிழந்தமை.

5. தேசிய அரசு வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குக.
1) போடினன்ட் அரசனுக்கும் இசபெல்லா இளவரசிக்கும் 1469ல் நடைபெற்ற திருமணத்தின் பின் ஸ்பானியாவில் தேசிய அரசு முதன்முதல் தோன்றியது.
2) 1485ல் இங்கிலாந்தில் 7ம் ஹென்றி மன்னனாலும்,
3) 1516ல் பிரான்சின் 1ம் பிரான்ஸிஸ் மன்னனாலும் தேசிய அரசுகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது.

6. தேசிய அரசின் அம்சங்களைத் தருக.
1) அரசியலமைப்பு, நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் யாவும் அரசின் கீழ் காணப்பட்டமை.
2) அரசனின் ஆலோசகர்களுக்கும், அரச சேவையாளர்களுக்குமான பதவி வகுப்பினர் தோற்றமளித்தனர்.
3) அரச சேவையாளர்களுக்கு வேதனம் வழங்கும் முறை ஆரம்பிக்கப் பட்டது.
4) நிரந்தரமான யுத்தப்படையினரைக் கட்டியெழுப்புதல்.
5) தேசிய அரசுகளின் நிர்வாகத்திற்கான சட்டதிட்டங்களும் சமயக் கொள்கைகளும் தயாரித்தல்.
6) அடிமைப்படுத்தும் பேரரசும், வியாபாரக் கப்பல் குழுவினரும் உருவாகியமை.
7) அரசு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு புதிய பொருளாதார முறையை ஏற்படுத்தியது.

7. 16ம் நூற்றாண்டில் உறுதி படைத்த மன்னர்களைத் தருக.
8ம் ஹென்றி, 1ம் பிரான்சிஸ், 5ம் சாள்ஸ், 2ம் பிலிப்

8. ஸ்பானியா
1) பிரனீஸ் மலைத்தொடலின் மூலம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு பிஸ்கோ விரிகுடாவிற்கு தெற்கே அமைந்துள்ளது.
2) அத்திலாந்து சமுத்திரத்தை எதிர்கொண்டநிலையில் அமைத்து இருப்பதனால் பாதுகாப்பான கரையோரமாக காணப்படுகிறது.
3) நெடுங்காலமாக கடல் பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் பிரிவினராக காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) உரோமர்களின் ஆட்சி நிலவிய காலத்திலிருந்து இந்நாட்டில் கிறிஸ்தவ மதம் பரவியது.
5) பேடினந்து இசபெல்லா ஆதரவில் புதிய கண்டம் கண்டுபிடிக்கப் பட்டமை. ஸ்பானியாவின் செல்வச்செழிப்புக்கும் அதிகாரத்துக்கும் உதவியது.
6) ஆஸ்திரியா அரச குடும்பத்துடன் திருமண பந்தத்தை ஏற்படுத்தி முஸ்லீம்களின் ஆதிக்கத்தை முறியடித்து கிறிஸ்தவமதம் பரவியது.
7) கரிபியன் தீவுகள் மிச்சிக்கோவை சூழவுள்ள நாடுகள் தென் - அமெரிக்காவின் பல அரசுகள் ஸ்பானியாவின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.
8) பேடினன், இசபெல்லா ஆகியோரின் பேரனான 5ம் சாள்ஸ் மன்னனின் காலத்தில் ஸ்பானியா ஐரோப்பாவின் செல்வச்செழிப்பு மிகுந்த நாடாகவும் பாரிய சாம்ராச்சியமாகவும் விளங்கியது.

9. **போர்த்துக்கல்**

1) கீழைத்தேச வர்த்தகத்தை முஸ்லீம்களிடமிருந்து ஐரோப்பியரிடம் பெற்றுக்கொடுத்த பெருமை போர்த்துக்கேயரையே சாரும்.
2) ஐபீரியத் தீவகற்பத்தின் முனையில் உள்ள நாடு ஆகும்.
3) அந்நாட்டு மக்களின் பிரதானமான தொழிலாக கடற்தொழில் காணப்பட்டது.
4) தமது விவகாரங்களை அரசியல் சமய சச்சரவுகளின்றி மேற்கொள்ள முடிந்தது.
5) கிழக்கில் ஸ்பானிய பேரரசு இருந்துவந்தமையால் ஐரோப்பியரின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொண்டனர்.
6) கடலோடி கென்றி ஆபிரிக்க கரையோரப் பிரதேச நாடுகளை கண்டுபிடிக்க ஆதரவு வழங்கினார்.
7) போர்த்துக்கல்லின் சாக்ரேஸ் முனையில் கப்பல் துறை ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவியிருந்தனர்.
8) பத்திலோமியோ டயஸ் என்ற மாலுமி ஆபிரிக்காவின் தென்முனை வரை சென்று புயலில் சிக்கி "புயல்முனை' என்று பெயரிட போர்த்துக்கேயர் நன்நம்பிக்கை முனை என்று பெயர் சூட்டினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒல்லாந்து (நெதர்லாந்து)

1. இந்நாடு ஸ்பானிய பேரரசின் ஒரு பாகமாக இருந்தது.
2. ஒல்லாந்து புரட்டஸ்தாந்து சமய நாடாக பிரசித்தி பெற்றது.
3. ஸ்பானியாவின் பிலிப் மன்னன் இந்நாட்டில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்ப மேற்கொண்ட முயற்சியினால் இருநாடுகளுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டமையால் பிரிந்தது.
4. இம்மக்களின் முக்கிய சீவனோபாயம் வர்த்தகமாகும்.
5. பிலிப் மன்னன் அதிகளவு வரிகளை விதித்தமையால் மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.
6. மௌனி வில்லியம் என்ற இளவரசனின்கீழ் போர் இடம்பெற்றது.
7. இங்கிலாந்தின் உதவியுடன் நெதர்லாந்து மக்கள் ஸ்பானியாவிட மிருந்து சுதந்திரமடைந்தனர்.
8. கடல் மார்க்கமாக கீழைத்தேய வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.

11. ஒல்லாந்து ஸ்பானியாவிடம் இருந்து பிரிவடைய ஏதுவான காரணங் களைத் தருக.

1. ஸ்பானியாவின் பிலிப் மன்னன் இந்நாட்டில் கத்தோலிக்க மதத்தைப் பரப்ப மேற்கொண்ட முயற்சியினால் இந்நாடுகள் இரண்டிற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால்.
2. பிலிப் மன்னன் அதிகளவு வரிகளை அறவிட்டமையால்.

12. இங்கிலாந்து

1. மத்தியகால ஐரோப்பாவில் புனித உரோமப் பேரரசுக்குச் சொந்தமாக இருந்தது இங்கிலாந்து.
2. ஐரோப்பாவிலிருந்து பிரிந்திருந்த ஒரு தீவு ஆகையால் தனது அடையாளத்தை பேணி ஒரு தேசிய அரசாக முடிந்தது.
3. நோர்மன் ஆட்சியாளர்களின் கீழ் பிராந்திய அரசுகளை ஒற்றுமைப் படுத்தி இங்கிலாந்து ஒரு தனிநாடாகியது.
4. பாராளுமன்றம் மன்னனின் ஆலோசனைச் சபையாக இருந்தமை யால் மன்னனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.
5. மன்னனின் அதிகாரம் பலவீனமடைந்தமையால் பிரபுக்கள் குடும்பங்களிடையே அதிகாரப்போட்டி தோன்றியது.
6. லங்காஸ்டர், யோர்க் குடும்பங்களுக்கிடையே அதிகாரப் போட்டி தோன்றியது.
7. லங்காஸ்டர் சிவப்பு ரோசாப் பூவையும், யோர்க் குடும்பத்தினர் வெள்ளை ரோசாப் பூவையும் சின்னமாக பயன்படுத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் ரோசாப்பூவையும் சின்னமாக பயன்படுத்தினர். அதனால் ரோசாப்பூ யுத்தம் என்றழைக்கப்பட்டது.

8. லங்காஸ்டர் குடும்பத்தைச் சேர்ந்த 7ம் ஹென்றி வெற்றியீட்டி தியூடர் என்ற அரச வம்சத்தை ஆரம்பித்தான்.
9. 7ம் ஹென்றியின் தலைமையில் ஒரு தேசிய அரசு தோன்றியது.
10. 7ம் ஹென்றிக்கு பின் ஆட்சிக்கு வந்த 8ம் ஹென்றி கத்தோலிக்க மதத்தவராக இருந்தபோதும் பாப்பாண்டவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் புரட்டஸ்தந்து மதத்தை தழுவினான்.
11. 8ம் ஹென்றி மன்னனின் ஆட்சியின்போது இங்கிலாந்து பாப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர அரசாகச் செயற்பட்டது.

## 13. பிரான்ஸ்

1. பிரான்ஸ் நாடு கோல் தேசம் என அழைக்கப்பட்டது.
2. மத்திய வர்க்கத்தினரின் உணர்வினால் பெரிய மாற்றத்தை எதிர்கொண்டு கப்பட்டியன் என்ற வம்சத்தின் கீழ் பிரான்சியர் அதிகாரம் வளர்ச்சி கண்டது.
3. இங்கிலாந்துடன் ஏற்பட்ட நூறாண்டுப் போரினால் பிரான்சின் பலம் அதிகரித்தது.
4. அதன்பின் பிரான்சிஸ் என்ற மன்னன் பாப்பரசரிடம் ஓர் ஒப்பந்தம் செய்து அதன்மூலம் வத்திகானிலிருந்து வரும் அழுத்தங்களிலிருந்து மீண்டு தனது அதிகாரத்தை நிலைநாட்டினான்.
5. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து இயக்கங்களிடையே சண்டை சச்சரவு தோன்றி பூர்பன் என்ற புதிய அரச வம்சம் தோன்றியது.
6. கி.பி. 1598இல் நான்காம் ஹென்றி மன்னன் ஆட்சிக்கு வந்தான். அவனுக்கு பின் மகன் 13ம் லூயி முடிசூடினான்.
7.. பிரான்சின் முதல்மந்திரியான இரிச்சல்யு என்ற கார்டினலின் தூரநோக்கான கொள்கையால் மன்னராட்சி வலுவடைந்தது.
8. 13ம் லூயிக்கு பின் மகன் 14ம் லூயி என்ற பெயரில் பிரான்சின் மன்னனானான்.
9. 14ம் லூயி மன்னன் காலத்தில் அவர் உருவாக்கிய பொருளாதார முன்னேற்றத்தால் தேசிய வருமானம் அதிகரித்தது. நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் விருத்தி செய்யப்பட்டன. விவசாயம், கைத்தொழில் என்பவற்றுக்கு அரச உதவிகள் வழங்கப்பட்டன. இதனால் மத்திய வகுப்பு துரிதமாக வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ மதத்தின் பரம்பல்

14. கிறிஸ்தவ மதத்தின் இரு பிரதான மதங்களைத் தருக.
    1. றோமன் கத்தோலிக்க மதம்
    2. புரட்டஸ்தந்து மதம்

15. கிறிஸ்தவ மதத்தின் பரம்பல் தொடர்பான முக்கியமான தகவல்களைத் தருக.
    1) கிறிஸ்தவம் றோமப் பேரரசின் அரச மதமாகும்.
    2) பாப்பாண்டவரை உள்ளிட்ட திருச்சபை முறையான சமயத்தை போதித்தது.
    3) அக்கால சமூகத்தினரின் காணிகளில் மூன்றில் ஒரு பங்கு திருச்சபைக்கு அல்லது மதகுரு மாருக்கு உரியது.
    4) திருச்சபையின் போதனையின்படி அரசன் உலகியல் தலைவனாகவும் பாப்பரசன் மக்களின் ஆன்மீக தலைவராகவும் இருந்தான்.
    5) திருச்சபை சமுதாய மேம்பாட்டில் பாரிய அளவில் செல்வாக்கு செலுத்தியுள்ளது.
    6) தேவாலயத்துக்கு பொறுப்பான குரு சாதாரண நபரின் அந்தஸ்தில் இருந்து வந்தார். ஆனால் ஆயர்கள் பிரபுக்களின் அந்தஸ்தினை கொண்டிருந்தனர்.
    7) திருச்சபை சமய நடவடிக்கையில் மட்டுமன்றி போரிடல், அரசியலில் ஈடுபடல், வேட்டையாடுதல் போன்ற உலகியல் கருமங்களிலும் திருச்சபை ஈடுபடுகின்றது.
    8) மனிதனை சமயம் சார்ந்த நல்வழியில் நெறிப்படுத்துவது கலைப் படைப்புகள் ஆகும்.

16. புனித கத்தோலிக்க மதம் தொடர்பான முக்கியமான தகவல்களை தருக.
    1) புனித கத்தோலிக்க மதம் விவிலியத்தில் உள்ளடக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.
    2) விவிலியத்துக்கு பொருள் விளக்கம் அளிக்கக்கூடிய உரிமை திருச்சபைக்கு உள்ளது.
    3) இக்கருத்தை புரட்டஸ்தாந் பிரிவினர் கடுமையாக எதிர்த்தனர்.
    4) ஸ்பானியாவில் உருவான யேசுசபை குருமார் சபை கத்தோலிக்க திருச்சபையின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கத்தோலிக்க மதம் பரவிய விதத்தை தருக.
   1) ஐரோப்பாவில் போர்த்துக்கல் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு சொந்தமான பிரதேசங்களில் கத்தோலிக்க மதம் பரவியது.
   2) பிரான்சிஸ் சேவியர் எனும் குருவானவர் இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளில் உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பினார்.

## புரட்டஸ்தாந்து மதம்

18. புரட்டஸ்தாந்து இயக்கம் தோன்றியமைக்கு ஏதுவான காரணங்களைத் தருக.
   1) ஐரோப்பாவில் அக்கால கிறிஸ்தவ சபையில் நிலவிய ஊழல் களினாலும், முறைகேடுகளினாலும்.
   2) அக்கால பாப்பரசர்கள் தம்மை எவரும் விமர்சிக்க முடியாது என கூறியமை.
   3) ஆட்சியாளர் வர்க்கத்தினாலும் சமயத்துறை அதிகாரம் மேலானது என பிரகடனப்படுத்தியமை.

19. புரட்டஸ்தாந்து மதம் தோற்றம் பெற ஏதுவான அடிப்படைக் காரணம் யாது?
   ஐரோப்பிய மறுமலர்ச்சியும் அதன் செல்வாக்கும் என்பது அறிஞர்களின் கருத்து ஆகும்.

20. மறுமலர்ச்சி ஏற்படுத்திய மாற்றங்களையும் செல்வாக்குகளையும் தருக.
   1) மனிதர்களின் லௌகீக வாழ்க்கையை செழிப்புறச் செய்தது.
   2) சமயத்துறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது.
   3) மக்களின் உள்ளங்களில் புதிய மனப்பாங்கை உருவாக்கியது.
   4) ஹிப்ரு மொழியில் இருந்த தேவ ஆகமத்தை கற்றதால் புதிய நூல்கள் வெளிவந்தன.
   5) இராஸ்மஸ் "புதிய ஏற்பாடு" நூல் கிரேக்க மொழியில் வெளிவந்தது.
   6) கிறிஸ்தவ உலகின் சிக்கல்களுக்கு புதிய கருத்துக்களுடன் தீர்வு காணமுடிந்தது.

21. புரட்டஸ்தாந்து மதம் முதலில் எந்த நாட்டில் பரவியது.
   ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஜேர்மனியில் சமயப்புரட்சி தோன்றுவதற்கு ஏதுவான காரணங்களைத் தருக.

1) மதகுருமார் சமய நடவடிக்கைகளை புறக்கணித்து அரசியலில் ஈடுபட்டமையால்.
2) மதகுருமார் ஆடம்பரமான சொகுசு வாழ்க்கை வாழ்ந்தமை.
3) தேவாலயத்துக்கு கிடைத்த வருமானத்தில் அரைப்பகுதியை உரோமாபுரி தேவாலயத்துக்கு அனுப்பியதால்.
4) நாட்டின் பொருளாதாரத்தின் மீது தாக்கம் ஏற்பட்டமை.
5) பாப்பரசரின் அதிகாரம் மற்றும் மதகுருமாரின் நிர்வாகம் என்பன சாதாரண மக்களின் ஏளனத்துக்கு உள்ளாகியமை.
6) அறிஞர்களிடையே சமய சீர்திருத்தம் அவசியம் எனும் கருத்து பரவியது.

23. சமய சீர்திருத்த இயக்கத்திற்கு வழிகோலிய மார்டின் லூதர் பற்றி விளக்குக.



1) 1485 ல் மார்டின் லூதர் ஜேர்மனியில் பிறந்தார்.
2) சிறு பிராயம் முதல் சமய நெறியில் வளர்க்கப் பட்டார்.
3) ஜேர்மனி பிராங்பர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார்.
4) மார்டின்லூதர் சமய பக்தியுடனும் அறிவுக் கூர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.
5) அக்கால மதகுருமார் சமயத்தை பணத்திற்கு விற்பனை செய்யும் ஒரு செயன்முறையில் ஈடுபட்டதை கடுமையாக விமர்சித்தார்.
6) கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக துணிச்சலுடன் கருத்துக் களை வெளியிட்டார்.

24. புரட்டஸ்தாந்து மதத்தின் சர்வதேச மத்திய நிலையமாக எது விளங்கியது?

ஜெனீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 09

# இலங்கையும் மேலைத்தேச நாடுகளும்

1. கோட்டை இராச்சியம்
2. சீதாவாக்கை இராச்சியம்
3. யாழ்ப்பாண இராச்சியம்
4. வன்னியர்கள்
5. கண்டி இராச்சியமும் போர்த்துக்கேயரும்
6. கண்டி இராச்சியமும் ஒல்லாந்தரும்
7. கண்டி இராச்சியமும் ஆங்கிலேயரும்

1. 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்ட மூன்று இராச்சியங்களையும் ஆட்சிசெய்த மன்னர்களையும் தருக.
   கோட்டை - 8ம் வீரபராக்கிரமபாகு
   யாழ்ப்பாணம் - பரராசசேகரன்
   மலையகம் - சேனா சம்மந்த விக்கிரமபாகு

2. 16ம் நூற்றாண்டுக்குப் பின் இலங்கைக்கு வருகைதந்த அன்னியர்களையும் அவர்களின் ஆட்சிக்காலத்தையும் வரையறுக்குக.
   போர்த்துக்கேயர் - 1505 - 1658
   ஒல்லாந்தர் - 1658 - 1796
   ஆங்கிலேயர் - 1796 - 1948

## கோட்டை இராச்சியம்

3. கோட்டை இராச்சியத்தின் எல்லையை வரையறுக்கவும்.
   வடக்கு - மல்வத்து ஓயா தெற்கு - வளவே கங்கை
   கிழக்கு - மத்தியமலை நாட்டின் மேற்கு சரிவு
   மேற்கு - இந்துசமுத்திரம்

4. 8ம் வீரபராக்கிரமபாகு (1484 - 1509) மன்னன் காலத்து இயல்புகளைத் தருக.
   1. இலங்கையில் தலைசிறந்த மன்னனாக காணப்பட்டவனாவான். திரீ சிங்களாதீஸ்வர, லங்காதீஸ்வர, சக்கரவர்த்தி போன்ற பட்டம் பெயர்களால் அழைக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஏனைய பகுதி ஆட்சியாளர்கள் வருடாந்தம் கப்பம் மற்றும் காணிக்கைகள் என்பவற்றை கோட்டை அரசமாளிகைக்கு எடுத்து வந்து அடிபணிந்தவர்களாக காணப்பட்டனர்.
3. கோட்டை மன்னன் நாட்டின் தலைவனாகவும் புத்த மதத்தின் பாதுகாவலனாகவும் போற்றப்பட்டான்.

5. கோட்டை இராட்சியத்தின் பொருளாதார அமைப்பை விளக்குக.
   1. கோட்டை இராட்சிய மக்களின் பிரதான சீவனோபாயமாக விவசாயமே இருந்துவந்தது.
   2. வெளிநாட்டு வர்த்தகமும் கணிசமான அளவில் விருத்தியடைந்து இருந்தது.
   3. பாக்கு, மிளகு, யானைத்தந்தங்கள், முத்துக்கள், மாணிக்கக்கற்கள், யானைகள் என்பன முக்கியமான வர்த்தகப் பண்டங்களாக இருந்து வந்தன.
   4. வர்த்தகத்துறையின் ஏகபோகம் முஸ்லீம்களின் கைகளிலே இருந்தது.

6. போர்த்துக்கேய தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய தளபதி யார்?
லோறன்கோ டீ அல்மெய்டா

7. போர்த்துக்கேயரின் வருகையை சிங்கள மக்கள் மன்னனுக்கு எவ்வாறு வர்ணித்தார்கள்.

கற்களை உண்ணுகின்றார்கள், இரத்தத்தை குடிக்கின்றார்கள், அங்கும் இங்கும் திரியும் அபூர்வ மனிதர்களாக காணப்படுகின்றார்கள். எலுமிச்சம்பழத்திற்கும் மீனிற்கும் அதிகளவிலான வெள்ளிக்காசுகளை கொடுக்கின்றார்கள். அவர்கள் இரும்பாலான ஆடைகளையும் தொப்பிகளையும் அணிந்துள்ளார்கள். அவர்களுடைய பீரங்கிகளிலிருந்து வெளியேறும் சத்தம் இடிமுழக்கம் போல் கேட்கின்றது.

8. 'பறங்கிக் கோட்டைக்குப் போனதுபோல' என்ற பழமொழி தோன்றிய விதத்தை விளக்குக.

➢ போர்த்துக்கேய விருந்தாளிகளை வரவேற்ற மன்னன் தகவல் அனுப்பினான். அதன் பிரகாரம் பர்னாவோ கற்றீம் என்பவனுடைய குழுவினர் சிங்களப் படைவீரர்களுடன் நகரத்துக்குச் செல்ல புறப்பட்டனர். கோட்டை அரசமாளிகை கொழும்புக்கு அருகாமையில் இருந்தபோதும் அதனை போர்த்துக்கேயர் அறிந்துகொள்ளக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக கொழும்பிலிருந்து மலையக கணவாய்களுக்கு ஊடாக கூட்டிச்சென்று இரண்டு மூன்று நாட்களின் பின்னர் அரசமாளிகையை சென்றடைந்தமையால் இப்பழமொழி தோன்றியது.

9. கோட்டை மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களைத் தருக.
   1) ஆண்டுதோறும் 400 பகார் (80 மெற்றிக்தொன்) கறுவாவை வழங்குவதற்கு அரசன் இணங்கினான்.
   2) இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை போர்த்துக்கேயர் பாதுகாக்கவேண்டும் எனக் கூறப்பட்டது.

10. போர்த்துக்கேயருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே காணப்பட்ட உறவைத் தருக.
    1) தமது வர்த்தகத்திற்கு போர்த்துக்கேரினால் ஆபத்து ஏற்படும் என அஞ்சி முஸ்லீம்கள் சிங்களவரின் உதவியுடன் போர்த்துக்கேயருக்கு எதிரான இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தனர்.
    2) கடற்படைப் பலமும், ஆயுத பலமும் கொண்ட போர்த்துக்கேயரை துரத்திவிடுவது எளிதான விடயமாக இருக்கவில்லை.
    3) போர்த்துக்கேயர் முஸ்லீம்களின் வர்த்தகத்தை கைப்பற்றுவதோடு இலங்கையிலும் கண்ணாய் இருந்தனர்.

11. கோட்டை இராச்சியம் மூன்று இராட்சியங்களாக பிரிவடைய ஏதுவான காரணத்தை குறிப்பிட்டு அதனை விளக்குக.
    விஜயபாகு கொலை
    
    8ம் வீர பராக்கிரமபாகுவிற்கு பின் 6ம் விஜயபாகு ஆட்சிக்கு வந்தான். அவன் முதல் திருமணம் செய்து 7ம் புவனேகபாகு, மாயாதுன்னை, மத்தும பண்டார ஆகிய புதல்வர்களை பெற்றெடுத்த பின் கீரவல்ல ராணியை திருமணம் செய்து தேவராஜனுக்கு ஆட்சி உரிமையை வழங்க முற்பட்ட வேளையில் முதல்த்தாரத்து புதல்வர்கள் மூவரும் வெளிநாட்டவருக்கு பணத்தினைக் கொடுத்து விஜயபாகு கொலை செய்யப்பட்டான். அக் கொலையின் பின் கோட்டை இராட்சியம் மூன்றாக பிரிவடைந்து ஆட்சிப் பொறுப்பை பெற்றுக்கொண்டனர்.

12. கோட்டை இராட்சியம் பிரிவடைந்த விதத்தினையும் ஆட்சிசெய்த மன்னர்களையும் தருக.
    கோட்டை - 7ம் புவனேகபாகு, சீதாவாக்கை - மாயாதுன்னை
    
    இறைகம - மத்துமபண்டார (இறைகம பண்டார)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கோட்டை இராட்சியம் மூன்றாக பிரிவடைந்தபின் இடம்பெற்ற முக்கிய மான நிகழ்வுகளை ஒழுங்காக தருக.

1) 7ம் புவனேகபாகு மன்னன் போர்த்துக்கேயரின் தூண்டுதலினால் தனது இராட்சியத்திலிருந்து முஸ்லீம்களை வெளியேற்ற முயன்றான்.

2) 7ம் புவனேகபாகுவிற்கும், முஸ்லீம்களின் வெளியேற்றத்தை கடுமையாக எதிர்த்த மாயாதுன்னைக்கும் இடையே கருத்து முரண்பாடு தோன்றியது.

3) 7ம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை பெற்றும் மாயாதுன்னை கள்ளிக்கோட்டையின் மன்னனான சமோறியனின் உதவியைப் பெற்றும் போர் புரிந்தனர்.

4) இரு சகோதரர்களுக்கும் போர் இடம்பெற்றபோது கோட்டை இராட்சியத்திலே போர்த்துக்கேயர் தமது செல்வாக்கை பலப்படுத்திக் கொண்டனர்.

5) போர்த்துக்கேயர் போர் செலவுக்காக 7ம் புவனேகபாகுவிடமிருந்து கறுவா, மற்றும் வர்த்தகப் பொருட்களை பெருமளவு பெற்றுக் கொண்டனர்.

6) 1537ல் 7ம் புவனேகபாகுவிற்கும் மாயாதுன்னைக்கும் இடையில் கடும்போர் இடம்பெற்றது. அதில் மாயாதுன்னை தோல்வி அடைந்தான்.

7) 1538 றைகம பண்டார இறந்தபின்னர் மாயாதுன்னை றைகம ராட்சியத்தை சீதாவாக்கையுடன் இணைத்துக்கொண்டு சீதாவாக்கையை பலப்படுத்தினான்.

8) 7ம் புவனேகபாகு தனக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை மகள் சமுத்திரா தேவிக்கும், வீதிய பண்டாராவுக்கும் பிறந்த பேரனான தர்மபாலனுக்கு அளிக்கவிரும்பினான்.

9) சிறுவனான தர்மபாலனுக்கு கல்வியும் மன்னனுக்குரிய பயிற்சியும் அளிக்கும் பொறுப்பு போர்த்துக்கேயரிடம் விடப்பட்டது.

10) 1543ல் தர்மபாலனின் சிலையொன்றை தூதுக்குழுவினரிடம் போர்த்துக்கல்லுக்கு அனுப்பப்பட்டது.

11) தூதுக்குழு திரும்பிவந்தபோது அவர்களுடன் மதகுருமார் ஐவரும் வந்து கோட்டை இராட்சியத்தில் கத்தோலிக்க மதவேலைகளை செய்ய ஆரம்பித்தனர்.

12) 7ம் புவனேகபாகு கத்தோலிக்க மதத்தை பரப்புவதையோ, மாயாதுன்னையை முற்றாக ஒழித்துக்கட்டுவதையோ விரும்பவில்லை.

13) போர்த்துக்கேயனுடைய நோக்கத்தை நிறைவேற்ற 7ம் புவனேகபாகு மறுத்தமையால் கீர்த்திஸ்ரீமேவன் மாளிகையின் மேல்மாடியில் வைத்து 1551ம் ஆண்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) 7ம் புவனேகபாகு இறந்தபின் தர்மபால குமாரன் அரசனானான். இவன் கோட்டை இராட்சியத்தின் ஆட்சியில் நேரடியாக தலையிட்டு கத்தோலிக்க மதத்தை பரப்ப முற்பட்டான்.

15) தர்மபாலன் கத்தோலிக்க மதத்தை பரப்புவதை விரும்பாத வீதிய பண்டார கத்தோலிக்க கோயில்களை அளித்து அம்மதம் பரவுவதை தடுத்தான்.

16) தர்மபாலன் 1557ல் கத்தோலிக்க மத ஞானஸ்தானத்தைப் பெற்றான்.

17) கோட்டையை ஒரு சிங்கள பௌத்த ராட்சியமாக ஏற்றுக்கொள்ளாத புத்த குருமார், பௌத்த பிரமுகர்கள் அங்கிருந்து வெளியேறி சீதாவாக்கையை அடைந்தனர்.

18) மக்கள் ஆதரவை இழந்த தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக செயற்பட்டான்.

19) 1562ல் போர்த்துக்கேயருக்கும் மாயாதுன்னை மன்னனுக்கும் இடையில் முல்லேரியா என்ற இடத்தில் முல்லேரியா போர் இடம் பெற்றது.

20) 1565ல் போர்த்துக்கேயரை கொழும்பு கோட்டைக்குள் சீதாவாக்கை மன்னர்கள் மட்டுப்படுத்தினார்கள்.

21) 1580ல் மாயாதுன்னை இறக்க மகன் டிக்கிரி பண்டாரா 1ம் இராஜசிங்கன் என்ற பெயருடன் மன்னனானான்.

22) 1582ல் 1ம் இராஜசிங்கன் மலையகத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டு கலியரட்ட பண்டாராவை வெளியேற்றிவிட்டு 1587ல் கொழும்பு கோட்டை தாக்குவதற்கென பெரும் படையை அனுப்ப அப்படைக்கும் போர்த்துக்கேயருக்கும் போர் பல மாதங்கள் நீடித்தது.

23) 1587ல் தர்மபாலனின் நன்கொடை உயிலின்மூலம் கோட்டை இராட்சியம் போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

24) 1597ல் தர்மபாலன் இறக்க தர்மபாலனின் நன்கொடை உயிலின் மூலம் கோட்டை இராட்சியம் போர்த்துக்கேயர் வசமானது.

25) 1598ம் ஆண்டு மல்வானை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு கோட்டை இராட்சியம் போர்த்துக்கேயரினால் கைப்பற்றப்பட்டது.

14. சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக் கட்டங்களைத் தருக.

1) 1521இல் இடம்பெற்ற விஜயபாகு கொலையினால் சீதாவாக்கை இராச்சியம் உதயமானது.

2) 1538ல் இறைகம இராச்சியம் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) புத்தகுருமார், பிரதானிகள், பொதுமக்கள் ஆகியோரின் ஆதரவு சீதாவாக்கைக்கு கிடைத்தமையால்.
4) போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றும் பொறுப்பை சீதாவாக்கை ஏற்றுக்கொண்டமை.
5) 1565இல் போர்த்துக்கேயரை கொழும்புக் கோட்டைக்குள் மட்டுப் படுத்தியமையால்.
6) மாயாதுன்னையின் மகனான டிக்கிரி பண்டார முல்லேரியா போரில் போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்தமையால்.
7) டிக்கிரி பண்டாரா 1582ல் மலையகத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டு கலியரட்ட பண்டாராவை வெளியேற்றியமை. இதுவே எழுச்சியின் உச்சக்கட்டமாகும்.

15. 1562இல் இடம்பெற்ற முல்லேரியாப் போரும் அதன் முக்கியத்துவத்தையும் தருக.
1) தர்மபாலனைத் தூண்டி சீதாவாக்கையை ஆக்கிரமிக்க போர்த்துக் கேயர் முனைந்தனர்.
2) போர்த்துக்கேயர் அல்பன்சோ பெரேரா லசர்த்தா தலைமையில் சீதாவாக்கையை கைப்பற்ற ஒரு படை சென்றது.
3) இதையறிந்த மாயாதுன்னை டிக்கிரி பண்டாரா தலைமையில் ஒரு பலம்மிக்க படையைப் போர்முனைக்கு அனுப்பிவைத்தான்.
4) முல்லேரியா என்ற இடத்தில் நேருக்கு நேர் இரு படைகளும் கடும்போர் புரிந்தனர்.
5) இப்போரில் போர்த்துக்கேயர் தோற்றனர். இது கீழைத்தேசத்தில் கிடைத்த முதலாவது தோல்வியாகும்.

இப்போரின் முக்கியத்துவம்

பலம் பொருந்திய போர்த்துக்கேயப் படையை மாயாதுன்னையின் மகன் டிக்கிரி பண்டாரா வென்றமை.

16. 1ம் இராஜசிங்கனின் போர்த்துக்கேயரை துரத்தும் முயற்சி ஏன் வெற்றி பெறவில்லை?

போர்த்துக்கேயருக்கு கோவாவிலிருந்து உதவி கிடைத்தமையினால் அதை தடுக்கக்கூடிய கடற்படை பலம் இல்லாமையினால் துரத்தும் முயற்சி வெற்றிபெறவில்லை.

17. முதலாம் இராஜசிங்கனின் ஆலோசகராக இருந்தவன் யார்?
அரிட்ட கீவெண்டு பெருமாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சீதாவாக்கை இராட்சியம் வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்களைத் தருக.

1) 1557இல் பலம்மிக்க இராச்சியமாக காணப்பட்டு 10 ஆண்டுகளில் வீழ்ச்சியடையும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. முதலாம் இராஜசிங்கன் மலையக பிரமுகரான வீரசுந்தர பண்டாரா என்பவனை பொறிக்கிடங்கில் வீழ்த்தி கொலைசெய்ததால் மலையக மக்களின் வெறுப்புக்கு உள்ளானான்.

2) வீர சுந்தர பண்டாராவின் மகனான கொணப்பு பண்டாரா தலைமை யில் மலையக இராச்சியம் எழுச்சி பெற்றமையால்.

3) போர்களினால் களைப்புற்ற முதலாம் இராஜசிங்கன் சைவசமயத்தை தழுவிக்கொண்டமையால்.

4) பௌத்த தலங்களை சைவமத குருமாருக்கு கையளித்தமை.

5) பௌத்த நூல்களுக்கு தீவைத்ததுடன் பௌத்த குருமாரை கொலை செய்தமையுரல்.

6) போர்கள் தொடர்ந்து இடம்பெற்றமையால் சீதாவாக்கையின் பொருளாதாரம் நலிவடைந்தமையால்.


7) முதலாம் இராஜசிங்கன் பலம்மிக்க இளவ்ரசர்களை கொலை செய்தமையாலும் பல இளவரசர்கள் போர்த்துக்கேயரிடம் தஞ்ச மடைந்தமையாலும்.

8) முதலாம் விமலதர்மசூரியனால் மலையகத்தில் 1ம் இராஜசிங்கன் தோற்கடிக்கப்பட்டு திரும்பி வருகையில் மூங்கிற் சிராய் குற்றி இறந்தான்.

9) முதலாம் இராஜசிங்கன் இறக்க அதன்பின் முடிக்குரிய இளவரசர்கள் எவருமில்லாமையினால சீதாவாக்கை இராட்சியம் மலையக அரசுடனும், கோட்டை அரசுடனும் இணைந்து வீழ்ச்சியடைந்தது.

## யாழ்ப்பாண இராச்சியம்

19. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரத்திற்கு வருகைதந்தபோது ஆட்சி செய்தவன் யார்?
ஆரியச் சக்கரவர்த்தியின் பரம்பரையைச் சேர்ந்த பரராஜசேகரன் ஆட்சி செய்தான்.



20. சங்கிலியன் மன்னனான விதத்தை விளக்குக.
1519இல் சங்கிலியன் என்ற இளவரசன் பரராஜசேகரனைக் கொன்றுவிட்டு ஆட்சிப் பீடம் ஏறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது இடம்பெற்ற நிகழ்வுகளை ஒழுங்காகத் தருக.

1) 1543ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு வந்து சேர்ந்தனர்.
2) பரராஜசேகரனின் மகன் போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்து ஆட்சியைக் கைப்பற்ற உதவிகோரியதுடன் கத்தோலிக்க மதத்தை பரப்பவும் கப்பம் வாங்க இடமளிக்கவும் உறுதியளித்தான்.
3) போர்த்துக்கேயர் எதிர்பார்த்த கோரிக்கைகளுக்கு சங்கிலியன் இணங்கியதால் பரராஜசேகரனின் மகனின் கோரிக்கையில் அக்கறை காட்டவில்லை.
4) சங்கிலிய அரசனுடன் ஒரு ஒப்பந்தம் செய்த போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் வேலையை ஆரம்பித்தனர்.
5) கத்தோலிக்க மதம் பரப்புவதற்கு எதிரான சைவசமய மதகுருமாரின் செல்வாக்குக் காரணமாக சங்கிலியன் அம்மதத்துக்கு எதிரான ஓர் இயக்கத்தை ஆரம்பித்தான்.
6) கத்தோலிக்க சமயத்தை தழுவியவர்கள் மீண்டும் சைவசமயத்தில் சேரவேண்டுமென கட்டாயப்படுத்தப்பட்டதுடன் அதை மீறியோருக்கு மரணதண்டனையும் வழங்கப்பட்டது.
7) சங்கிலியனின் போக்கை எதிர்த்த போர்த்துக்கேயர் 'கொன்ஸ்ரன்ரைன் பிறகன்சா' தலைமையில் படையை அனுப்ப சங்கிலியன் தென் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றான். அப்போது போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளைச் சூறையாடினர்.
8) போர்த்துக்கேயருடன் சமாதானமாக இருப்பது நல்லதெனக் கருதி சங்கிலியன் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டான்.
9) சங்கிலியன் கயவன் எனக் கண்ட மக்கள் அவனைத் துரத்திவிட்டு அவனது மகன் புவிராச பண்டாரம் என்பவனை அரசனாக்கினார்கள்.
10) அதன்பின் யாழ்ப்பாண இராச்சியத்திலே பல குழப்பங்கள் ஏற்பட்டன. அவற்றில் போர்த்துக்கேயர் தலையிட்டனர்.
11) இந்தச் சூழ்நிலையில் புவிராச பண்டாரம் 1582இல் பரராஜசேகரன் என்ற பெயரில் அரசனானான்.
12) இம்மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்ததுடன் மன்னன் கோட்டையைக் கைப்பற்றவும் பள்ளிக் கோட்டை முஸ்லீம் மன்னனின் உதவியைப் பெறவும் முயற்சித்தான்.
13) இதனை அறிந்த போர்த்துக்கேயர் கோவாவிலிருந்து மென்டொன்சா தளபதியின் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு படை அனுப்பி வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) அப்படை 1591இல் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வரை சென்று இந்துக் கோயில்களை அழித்ததுடன் நல்லூர் நகரையும் கொள்ளையடித்து பரராஜசேகரனையும் கொலைசெய்தது.
15) யாழ்ப்பாண மக்கள் 1591இல் நல்லூரில் கையொப்பமிட்ட நல்லூர் ஒப்பந்தத்தின் பிரகாரம் போர்த்துக்கேய மன்னரை தமது மன்னராக ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தனர்.
16) போர்த்துக்கேயர் பெரியபிள்ளையின் புதல்வரான எதிர்மன்னசிங்கன் என்பவனை போர்த்துக்கேயரின் கீழ் செயற்படும் ஒரு மன்னனாக நியமனம் செய்தனர்.
17) இம்மன்னன் போர்த்துக்கேயரிடம் பெருமளவு பணிந்துசெல்லும் ஒரு கொள்கையை பின்பற்றியபோதிலும் இந்துக் கலாசாரம் களங்கப்படுவது குறித்து கடும் எதிர்ப்பு உணர்வையும் சந்தித்தான்.
18) 1615ல் எதிர்மன்ன சிங்கன் மரணித்த அடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தில் மீண்டும் குழப்பநிலை தோன்றியது.
19) மீண்டும் ஒரு முறை சங்கிலியன் என்பவன் தற்காலிகமாக யாழ்ப்பாணத்தின் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தான்.
20) ஒலிபேரா என்ற இராணுவத் தலைவரின்கீழ் 1619ல் படை அனுப்பப்பட்டது.
21) 1621ல் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றி ஒலிபேரா என்பவனை ஆளுனராக நியமித்தனர். அதனையடுத்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழராட்சி முடிவுக்கு வந்தது.

22. யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி பற்றி நாம் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?

1) யாழ்ப்பாண வைபவமாலை
2) கைலாய மாலை
3) தக்கிண கைலாச புராணம்
4) வையாபாடல்
5) இபன் பதூதா, மொறாக்கோ நாட்டு யாத்திரியர்களின் குறிப்புக் களிலிருந்து.

## வன்னியர்கள்

23. வன்னிய இராச்சியம் பற்றி விளக்குக.

யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்றிருந்த காலத்தில் அனுராத புரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தின் வன்னியர்கள் என்ற பெயரில் சுதந்திரமான பல ஆட்சியாளர்கள் ஆட்சிசெய்ததிலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வன்னியர்களின் ஆட்சி தொடர்பான முக்கியமான தகவல்களைத் தருக.

1) வரலாற்று மூலாதாரங்களின் 18 வன்னிப் பிரிவுகள் இருந்ததாகவும் சில சந்தர்ப்பங்களில் 364 வன்னிப் பிரிவுகள் இருந்துவந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
2) இன்றைய வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரதேசத்திலும் இந்த வன்னியர்களின் ஆட்சி இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.
3) வன்னியர்கள் நுவரகலாவிய, தமன்கடுவ, கொட்டியாரம், பாணமைப்பற்று, ஊவா, வெல்லஸ்ஸ போன்ற பிரதேசங்களில் சுதந்திரமாக செயற்பட்டு வந்தன.
4) யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சி இடம்பெற்ற காலத்தில் வன்னியர்கள் பலம் பொருந்தியவர்களாகவும் பண்டார வன்னியர்கள் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது.
5) பாரிய பிரதேசங்களை "மகாவன்னி" என்றும் சிறிய அளவிலான பிரதேசத்தை "சிறுவன்னி" என்றும் அழைக்கப்பட்டது.

## போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள்

25. கண்டி இராச்சியத்தின் மறுபெயர்களைத் தருக.

மஹா நுவர, கந்தஉடரட்ட, செங்கடகல, மலையகம், பஞ்சநாடு, ஸ்ரீவர்ணபுர.

26. போர்த்துக்கேயர் கரையோரத்தை ஆட்சிசெய்தபோது மலையகத்தை ஆண்ட முதல் மூன்று மன்னர்களையும் தருக.

சேனாசம்மந்த விக்கிரமபாகு - 1469 - 1511
ஜெயவீர விக்கிரமபாகு - 1511 - 1552
கலிய ரட்டபண்டார - 1552 - 1582

27. முதலாம் இராஜசிங்கனின் மலையகம் மீதான படையெடுப்பை விளக்குக.

சீதாவாக்கையை ஆட்சிசெய்துகொண்டிருந்த 1ம் இராஜசிங்கன் 1582இல் மலையகத்தின்மீது படையெடுப்பை மேற்கொண்டபோது கலியரட்ட பண்டாராவும் மகளான குசுமாசனதேவியையும், மருமகன் யமசிங்க பண்டாராவும் பாதுகாப்புத்தேடி போர்த்துக்கேயரிடம் சரணடைந்தனர்.

28. கணேதன்ன என்னும் இடத்தில் இடம்பெற்ற யுத்தத்தை விளக்குக.

கொணப்பு பண்டாரவுக்கும் முதலாம் இராஜசிங்கனுக்கும் இடையில் கணேதன்ன என்னும் இடத்தில் இடம்பெற்ற யுத்ததே இதுவாகும். இவ் யுத்தத்தை 1ம் இராஜசிங்கன் தோற்கடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. மலையகத்தை கைப்பற்ற போர்த்துக்கேயர் சரணடைந்தவர்களை எவ்வாறு பயன்படுத்த முற்பட்டனர்.

குசுமாசனதேவிக்கு தொனாக்கதரினா எனவும் யமசிங்கவிற்கு தொன்பிலிப் எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கத்தோலிக்க மத ஞானஸ்தானம் வழங்கப்பட்டு.

30. முதலாம் விமலதர்மசூரியன் மன்னான விதத்தை விளக்குக.

போர்த்துக்கேயருடைய பாதுகாப்பிலிருந்து வீரசுந்தர பண்டாராவின் மகனான கொணப்பு பண்டாரா (தொன்யுவன்) தலைமையில் யமசிங்க (தொன் பிலிப்) மலையகத்திற்கு அனுப்பி 1ம் இராஜசிங்கனுடன் போர்புரிந்து அவனை வெளியேற்றிவிட்டு தொன் பிலிப்பை மன்னனாக்கிவிட்டு சில நாட்களின் பின் தொன்பிலிப்பை தந்திரமாக கொலைசெய்துவிட்டு முதலாம் விமலதர்மசூரியன் என்ற பெயருடன் மன்னனாக முடிசூடிக்கொண்டான்.

31. முதலாம் விமலதர்மசூரியன் மலையக மக்களின் ஆதரவினை எவ்வாறு பெற்றுக்கொண்டான்.

1. கத்தோலிக்க மதத்தவனான இவன் பௌத்தமதத்தை சேர்ந்தமையால்
2. மலையகத்தின் உரிமை உரித்தான தொனாக் கதரினாவை தனது இளவரசி ஆக்கிக்கொண்டமையால்.
3. 1594இல் தந்துரே என்னும் இடத்தில் போர்த்துக்கேயப் படையை வெற்றிகொண்டு தனது பல வலிமையை நிருபித்தமையால்.

32. தந்துரே யுத்தத்தை விளக்குக.

முதலாம் விமலதர்மசூரியன் மன்னனாகிவிட்டான் என ஆத்திரம் கொண்ட போர்த்துக்கேயர் பேரோல் லோபேஸ்டி சூசா என்ற தளபதியின் தலைமையில் மலையகத்திற்கு படை ஒன்று அனுப்பப்பட்டது. அப்படை தொனா கதரினாவை அரசியாக பிரகடனம் செய்த பின் 1ம் விமலதர்ம சூரியனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் தந்துரேயில் இடம்பெற்ற யுத்தமே இதுவாகும்.

இப்போரில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்ததுடன் தொனாகதரினாவை முதலாம் விமலதர்மசூரியன் மணம்புரிந்து தனது ஆட்சி உரிமையை உறுதிப்படுத்திக்கொண்டான்.

33. முதலாம் விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தில் மேற்கொண்ட சேவை களைத் தருக.

1. கண்டி இராச்சியத்தை ஒரு சுதந்திரமான இராச்சியமாக நிறுவிய பெருமை இம்மன்னனையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஐரோப்பிய நாட்டவரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரை எதிர்த்துநின்று மலையகம் தனது சுதந்திரத்தை பாதுகாக்க காரணமானான்.
3. சப்ரகமுவ மாகாணத்தில் தெல்கமுவ விகாரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனித பற்சின்னம் கண்டிக்கு எடுத்துவரப்பட்டு தலதாமாளிகையில் வைத்தான்.
4. தனது பொறுப்பில் பற்சின்னத்தை கொண்டுவந்து ஆட்சியை மேலும் உறுதிப்படுத்தினான்.
5. கடலாதெனிய, லங்காதிலக விகாரைகள் இம்மன்னனால் புனரமைக்கப்பட்டன.
6. பர்மாவிலிருந்து புத்தபிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கினை நடாத்தினான்.
7. தனது இராச்சியத்தின் பொருளாதார நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டினான்.
8. பாழடைந்துபோன வயல்கள் அனைத்திலும் சாகுபடியை மேற்கொண்டு நெல் உற்பத்தியை பெருக்குவதற்கு விவசாயிகளைத் தூண்டினான்.
9. வலப்பன, கொத்மலை ஆகிய இடங்களில் உலோகக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு போர்க்கருவிகள் உற்பத்தி செய்ய ஆதரவு வழங்கினான்.
10. இராச்சியத்தின் பாதுகாப்புக்கென இந்தியாவிலிருந்து வடகர் இன கூலிப்படையினர் அழைத்துவரப்பட்டனர்.

34. முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்த ஒல்லாந்த தூதுக்குழுக்களைத் தருக.

1) ஸ்பில்பேஜன் 2) சீ போல்ட் டி வாட்

35. தொன் ஜொரனிமோ டி அசவிடோ தலைமையில் போர்த்துக்கேயர் படையை அனுப்பியது ஏன்?

ஒல்லாந்த தூதுக்குழுக்கள் நாங்கள் நாட்டை ஆக்கிரமிக்க மாட்டோம் என கூறிக்கொண்டு சீபோட் டி வாட் போர்த்துக்கேயருடைய கப்பலைக் கைப்பற்றிவிட்டு ஒப்படைக்க மறுத்தான். அதனால் ஆத்திரம் கொண்ட மன்னன் சீபோட் டி வாட்டை சுட்டுக்கொலை செய்தான்.

சீ போட் டி வாட் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது ஒல்லாந்தருக்கும் மலையக மன்னனுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏன் ஏற்படவில்லை என்ற சந்தேகத்தில் மலையக மன்னன் மீது ஆத்திரம் கொண்ட போர்த்துக்கேயர் இப்படையை அனுப்பினார். இப்படைக்கும் 1ம் விமலதர்மசூரியனுக்கும் இடையில் 1602ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன என்ற இடத்தில் சண்டை இடம்பெற்றது. இப்போரில் அசவிடோ படுதோல்வியடைந்தான்.

36. முதலாம் விமலதர்மசூரியனுக்குப் பின் ஆட்சி கைமாறிய விதத்தை விளக்குக.

1ம் விமலதர்மசூரியனின் ஒருவகைச் சகோதரனான செனரத் ஆட்சிப்பீடம் ஏறி குசுமாசனதேவியை மனைவியாக்கிக் கொண்டு கண்டி இராச்சியத்தை மேலும் கிழக்கு நோக்கி விரிவுபடுத்தி ஆட்சி செய்தான்.

37. செனரத்தின் ஆட்சிக்கால நிர்வாகப் பிரிவுகளைத் தருக.

1) மூன்று கோறளை
2) நான்கு கோறளை
3) ஏழு கோறளை
4) சப்பிரகமுவாப் பிரதேசம்
5) திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பிரதேசம்.

38. செனரத்தின் மூன்று புதல்வர்களையும் தருக.

1) விஜயபாலன்
2) குமாரசிங்கன்
3) இராஜசிங்கன்

39. இரண்டாம் இராஜசிங்கன் மன்னனான விதத்தை விளக்குக.

செனரத்தின் மகனான இராஜசிங்கனிடம் செங்கடகல பிரதேசத்தை ஒப்படைக்க பின் இரு சகோதரர்களையும் கட்டுப்படுத்தி மலையகம் முழுவதற்கும் மஹா அஸ்தான என அழைக்கப்பட்ட இராஜசிங்கன் இரண்டாம் இராஜசிங்கன் என்ற பெயரில் முடிசூடிக்கொண்டான்.

40. மலையகத்தை ஆட்சிசெய்த மன்னர்களையும் அவர்களின் ஆட்சிக் காலத்தையும் அட்டவணைப்படுத்துக.

| மலையக மன்னர்கள் | ஆட்சிக்காலம் | கரையோரத்தை ஆட்சி செய்த அன்னியர்கள் |
|---|---|---|
| **சிங்கள அரச வம்சம்** | | |
| சேனா சம்மந்த விக்கிரமபாகு | கி.பி 1469 - 1511 | போர்த்துக்கேயர் |
| ஜயவீர விக்கிரமபாகு | கி.பி 1511 - 1552 | போர்த்துக்கேயர் |
| கரவியட்ட பண்டார | கி.பி 1552 - 1582 | போர்த்துக்கேயர் |
| முதலாம் இராஜசிங்கன் | கி.பி 1582 - 1591 | போர்த்துக்கேயர் |
| முதலாம் விமலதர்மசூரியன் | கி.பி 1591 - 1604 | போர்த்துக்கேயர் |
| செனரத் | கி.பி 1604 - 1635 | போர்த்துக்கேயர் |
| இரண்டாம் இராஜசிங்கன் | கி.பி 1635 - 1687 | போர்த்துக்கேயர், ஒல்லாந்தர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இரண்டாம் விமலதர்மசூரியன் | கி.பி 1687 - 1707 | ஒல்லாந்தர் |
| ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திரசிங்க | கி.பி 1707 - 1739 | ஒல்லாந்தர் |
| **நாயக்க அரச வம்சம்** | | |
| ஸ்ரீ விஜயராஜசிங்கன் | கி.பி 1739 - 1747 | ஒல்லாந்தர் |
| கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் | கி.பி 1747 - 1782 | ஒல்லாந்தர் |
| இராஜாதி இராஜசிங்கன் | கி.பி 1782 - 1798 | ஒல்லாந்தர், ஆங்கிலேயர் |
| ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் | கி.பி 1798 - 1815 | ஆங்கிலேயர் |

41. சிங்கள அரசர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தங்களை அட்டவணைப்படுத்துக.

| இடங்கள் | ஆண்டு | தளபதிகள் | தலைமை வகித்த மன்னர்கள் |
|---|---|---|---|
| முல்லேரியா | 1562 | பெரேரா வசர்த்தா | மாயாதுன்னை 1ம் இராஜசிங்கன் |
| தந்துரே | 1594 | பேரோ லோபேஸ்தி சௌசா | 1ம் விமலதர்மசூரியன் |
| பலன | 1602 | தொன் ஜெரனிமோ அசவேது | 1ம் விமலதர்மசூரியன் |
| ரந்தெனிகல | 1630 | கொண்ஸ்தைன் தீனுதசா | செனரத் 2ம் இராஜசிங்கன் |
| கண்ணொருவ | 1638 | தியோகுத மெலோ கஸ்த்ரோ | 2ம் இராஜசிங்கன் |

அனைத்து யுத்தங்களிலும் போர்த்துக்கேயர் தோல்வியைத் தழுவிக் கொண்டனர்.

42. இரண்டாம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்து தளபதி "வெஸ்டர் வோல்ட்" க்கும் இடையில் 1638ல் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வாசகங்களைத் தருக.

1. போர்த்துக்கேயரை கரையோரப் பிரதேசத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். அதற்கு ஏற்படும் யுத்தச் செலவை மலையக மன்னன் கொடுக்கவேண்டும்.
2. செலவுகள் கொடுத்து தீர்க்கப்பட்ட பின்னர் கோட்டைகளை மன்னனிடம் ஒப்படைக்க வேண்டும்.
3. துறைமுகங்களையும் ஏகபோக வர்த்தக உரிமைகளையும் ஒல்லாநதரிடம் ஒப்படைக்க வேண்டும்.
4. கோட்டைகளிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றிய பின்னர் மலையக மன்னன் விரும்பினால் மட்டும் ஒல்லாந்தர் வைத்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. இலங்கையின் கரையோரத்தை ஒல்லாந்தர் கைப்பற்றிய விதத்தினை விளக்குக.

1. 1639ம் ஆண்டு திருகோணமலை, மட்டக்களப்பு கோட்டைகளை கைப்பற்றி ஒப்படைத்தனர்.
2. 1640 நீர்கொழும்பு, காலி ஆகியவற்றின் கோட்டைகளை கைப்பற்றி விட்டு ஒப்படைக்க மறுத்தனர்.
3. ஐரோப்பாவில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நட்புறவு நிலவியதால் 1642 - 1650 இற்கு இடைப்பட்ட காலத்தில் போர் இடம்பெறவில்லை.
4. 1652ல் களுத்துறை, அகுருவாகொட்ட ஆகிய இடங்களிலிருந்து கோட்டைகளை ஒல்லாந்தர் கைப்பற்றினார்.
5. 1656 ல் கொழும்புக் கோட்டையை கைப்பற்றினார்.
6. 1658 ல் மன்னார், யாழ்ப்பாணக் கோட்டைகளை ஒல்லாந்தர் கைப்பற்றி போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

44. "இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்கியதைப் போல" என்ற பழமொழியுடன் தொடர்புடைய மன்னன் யார்? அம்மன்னன் தொடர்புபடக் காரணம் யாது?

2ம் இராஜசிங்கன்

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமானால் அவர்களுக்கு இணையான வல்லமையை கொண்டிருக்க வேறு இனத்தின் உதவி பெறவேண்டும் என்பதனை இரண்டாம் இராஜசிங்கன் அறிந்திருந்தமையாலும் போர்த்துக்கேயரை வெளியேற்றிவிட்டு ஒல்லாந்தரை வரவழைத்தமையாலும் இப்பழமொழியுடன் தொடர்புபடுகிறான்.

45. இரண்டாம் இராஜசிங்கன் மலையக வரலாற்றில் சிறந்த மன்னனாக கருதப்படக் காரணங்களைத் தருக.

1. இம்மன்னன் போர்த்துக்கேயருக்கு இந்நாட்டில் எந்தவிதமான உரிமையும் இல்லை என பகிரங்கமாக கூறினான்.
2. தனது தந்தையுடன் சேர்ந்து ரத்தெனிகல என்னுமிடத்தில் 1630 இல் போர்த்துக்கேயருக்கு எதிராக போராடி வெற்றிபெற்றமையால்
3. 1638இல் போர்த்துக்கேயர் மீண்டும் ஒருமுறை ஒரு படையெடுப்பை மேற்கொண்டபோது கண்ணொருவ என்னும் இடத்தில் கடும்போர் புரிந்து வெற்றிபெற்றமையால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒல்லாந்தருடன் நட்புறவு கொண்டதுடன் அவர்களின் ஆக்கிரமிப்பு கொள்கைகளுக்கு எதிராக போராடியமையால்.

## ஒல்லாந்தர் ஆட்சி (1658 - 1796)

46. போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் கீழைத்தேச பீடங்கள் எங்கு அமைந்திருந்தது.

போர்த்துக்கேயர் - கோவா ஒல்லாந்தர் - ஜாவா

47. 2ம் இராஜசிங்கனுக்குப் பின் மன்னனான மகன் 2ம் விமலதர்மசூரியன் ஆற்றிய சேவைகளை தருக.

1. மலையக மக்களை அமைதியான முறையில் ஆட்சிசெய்தான்.
2. ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டான்.
3. சீனா, சீயம போன்ற நாடுகளிலிருந்து புத்தபிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கை மேற்கொண்டான்.
4. தலதா மாளிகையினை மும்மாடிக் கட்டடமாக அமைத்து பௌத்த மத வளர்ச்சிக்கு தொண்டாற்றினான்.

48. மலையக இராச்சியம் நாயக்க வம்சத்திடம் கைமாறிய விதத்தை விளக்குக.

வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் மன்னரின் மரணத்தின்பின் அரசுரிமையைப் பெறுவதற்கு சிங்கள இளவரசர்கள் எவரும் இல்லாமையால் மனைவியின் சகோதரன் ஆட்சிசெய்வதற்கு சட்டம் இடங்கொடுத்தது. அதன்பிரகாரம் மனைவி நாயக்க வம்சத்து பெண்ணாக இருந்தமையால் சகோதரன் ஸ்ரீ விஜயராஜசிங்கன் ஆட்சியை பொறுப்பேற்றான். இவனே நாயக்க வம்சத்து முதல் மன்னனாவான்.

49. ஸ்ரீ விஜயராஜசிங்க மன்னனுக்குப்பின் மன்னனானவன் யார்?

மனைவியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்

50. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசம் எவ்வமைப்பால் நிர்வகிக்கப்பட்டது?

ஒல்லாந்து கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் நாயக்க வம்சத்து மன்னனாக இருந்தபோதிலும் இலங்கை வரலாற்றில் சிறந்த மன்னனாக கருதப்பட்டமைக்கான காரணங்களைத் தருக.

1. மிக சிறுவயதிலே சிம்மாசனம் ஏறிய மன்னன் என்பதனால்.
2. நாயக்க வம்சத்து மன்னனாக இருந்தபோதும் பௌத்த சமயத்தின் மேம்பாட்டுக்கு அளப்பெரிய பணிகளை ஆற்றியிருந்தமையால்.
3. பெருந்தொகையான விகாரைகளை புனரமைப்பு செய்தமையால்.
4. வலிவிட்ட சிறி சரணங்கர தேரரின் வழிகாட்டுதலின்கீழ் புத்த சாசனத்தின் வளர்ச்சிக்கு பாரியளவிலான பங்களிப்பை வழங்கி யிருந்தமையால்.
5. 1762 ல் ஜோன் பைபஸ் என்ற தூதுக்குழுவையும் 1782ல் கியூபொயுட் பிரித்தானிய தூதுக்குழுக்களை சந்தித்தும் அவர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு ஆதரவு வழங்காமையால்.
6. மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் அளப்பெரிய சேவைகளை செய்தான்.
7. வருடாந்தம் தலதாப் பெரகராவை நடாத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டமையால்.

52. இலங்கைக்கு வந்த அன்னியர்களையும் அவர்கள் சார்பான தூதுக் குழுக்களையும் தருக.

| அன்னியர்கள் | தூதுக்குழுவினர் |
|---|---|
| போர்த்துக்கேயர் | வோறன்சோ டீ அல்மெய்டா |
| ஒல்லாந்தர் | ஸ்பில் பேஜன்ட், சீபேர்ட்டீ வாட் |
| பிரித்தானியர் | ஜோன்பைபஸ், கியுபொயிட் |


53. 1766ம் ஆண்டு விலன் பல்க் என்ற ஒல்லாந்த தேசாதிபதிக்கும் கீரத்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வாசகங்களைத் தருக.

1. கொழும்பு, மாத்தறை, காலி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்கள் ஒல்லாந்தருக்கு உரித்தாக வேண்டும்.
2. இலங்கையின் கடற்கரையிலிருந்து 1 மைல் பிரதேசம் ஒல்லாந்தருக்கு உரித்தாக வேண்டும்.
3. கண்டி இராச்சியத்தின் வர்த்தகம் கறுவா வர்த்தகம் ஒல்லாந்தருக்கு உரித்தாக வேண்டும்.
4. கரையோரப் பிரதேசத்தில் உப்பளங்கள் கண்டி இராச்சியத்துக்கு உரித்தானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கரையோரப் பிரதேசத்தை ஒல்லாந்தரிடம் ஒப்படைப்பதால் ஏற்படும் நட்டத்துக்கு ஒல்லாந்தர் பணம் செலுத்தவேண்டும்.

ஒல்லாந்தரது ஆட்சிப் பரம்பல்




54. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் புனரமைத்த விகாரைகளைத் தருக.

தொட்டகமுவ விகாரை, முல்கிரிகல விகாரை, கசாகல விகாரை, குருநாகல் அத்கந்த விகாரை, ரிதி விகாரை, தம்புள்ள விகாரை போன்றவை.

55. 1766ம் ஆண்டு ஒப்பந்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளைத் தருக.

1. இவ் ஒப்பந்தம் கண்டி இராச்சியத்தை பொறுத்தவரை பிரதிகூலம் ஆனது ஆகும்.
2. கரையோர பிரதேசம் அனைத்தும் ஒல்லாந்தருக்கு உரித்தாக வழிவகுத்தது.
3. கண்டி இராச்சியம் ஒல்லாந்தர் பிரதேசங்களுக்கு இடையில் சிக்குண்டு தவிக்க வழிவகுத்தது.
4. இவ் ஒப்பந்தத்தினால் ஒல்லாந்தர்களை முறியடிப்பதில் கண்டி மன்னர்களுக்கு பல சிரமங்களை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானியர் ஆட்சி (1796 - 1948)

56. பிரித்தானியர் கரையோரப் பிரதேசத்தை கைப்பற்றிய விதத்தை விளக்குக.

பிரித்தானியாவும் பிரான்சும் கீழைத்தேசங்களை கைப்பற்றுவதில் போட்டி போட்டு செயற்பட்டுக் கொண்டிருந்தவேளையில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஒல்லாந்தர் ஆட்சிசெய்து கொண்டிருந்தனர். அதனால் பிரான்சியர் ஒல்லாந்து மீது படையெடுப்பை மேற்கொண்டனர். அப்படையெடுப்புக்கு பயந்த இளவரசன் வில்லியம் பிரித்தானியாவிடம் சரணடைந்தான். அப்போது பிரான்சில் பஸ்ரில் சிறைச்சாலை உடைக்கப்பட்டு பிரான்சியப் புரட்சி 1789ல் இடம்பெற்றது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பிரித்தானியர் கியு மாளிகையில் தங்கிநின்ற இளவரசன் வில்லியத்திடமிருந்து கடிதத்தைப் பெற்று ஒல்லாந்தரின் ஆளுனரான பன் எங்கள் பெக் என்பவனிடம் ஒப்படைத்தபோது கரையோரப் பிரதேசத்தை ஒப்படைக்க மறுத்தான். ஆகையினால் திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய கோட்டைகளை கைப்பற்ற அதன்பின் 1796ம் ஆண்டு இலங்கையின் கரையோர பிரதேசத்தை கைப்பற்றி 1948ம் ஆண்டுவரை ஆட்சிசெய்தனர் பிரித்தானியர்.

57. பிரித்தானியர் கரையோரத்தை கைப்பற்றிய ஆண்டு, பிரித்தானிய முடிக்குரிய நாடாக பிரகடனம் செய்த ஆண்டு, பிரித்தானியர் மலையகத்தை கைப்பற்றிய ஆண்டுகளை தருக.

1. 1796 2. 1802 3. 1815

58. பிரித்தானியர் கரையோரத்தை கைப்பற்றியபோது மலையகத்தை ஆண்ட மன்னன் யார்?

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் இளைய சகோதரனான ராஜாதி ராஜசிங்கன்

59. மலையகத்தை ஆண்ட இறுதி மன்னன் யார்? அவன் மன்னனான விதத்தினை விளக்குக.

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்

1798ல் ராஜாதி ராஜசிங்க மன்னன் இறக்க மலையக இராச்சியம் முத்துசாமி என்பவனுக்கே உரித்தானதாக காணப்பட்டது. ஆனால் முதலாம் அதிகார பதவியை வகித்துவந்த பிலிமத்தலாவ தனது அதிகாரத்தை பயன்படுத்தி கன்னுசாமி என்பவருக்கு வழங்க அவரே ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்ற பெயருடன் மன்னனானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. இலங்கையின் கரையோரத்தை பிரித்தானியர் ஆட்சிசெய்தபோது வருகை தந்த ஆளுனர்களைத் தருக.

| | |
|---|---|
| பிரட்றிக் நோத் | 1798 - 1805 |
| தோமஸ் மெயிற்லன்ட் | 1805 - 1812 |
| றொபேட் பிறவுன்றிக் | 1812 - 1820 |

61. ஆங்கிலேயரிடம் தஞ்சம்புகுந்த பிரதானிகளைத் தருக.
எஹலேபொல, மொல்லிக்கொட

62. போர்த்துக்கேயரினாலும் ஒல்லாந்தராலும் மலையகத்தை கைப்பற்ற முடியாது போனமைக்கான காரணங்களைத் தருக.

1. மலையகம் வனஅரண், நீர் அரண், மலை அரண் ஆகிய இயற்கை அரண்களை கொண்டமைந்த பிரதேசமாக காணப்பட்டமையால்.
2. மலையக மக்கள் மன்னனுக்கு பூரண ஆதரவினை வழங்கியமையால்.
3. மலையக மன்னர்களிடையே ஒற்றுமை காணப்பட்டமையால்.
4. மலையகப் படைவீரர் கொரில்லா யுத்த முறையை பின்பற்றியமையால்.
5. மலையகத்தின் புவியியல் அமைப்பை நன்கு விளங்கிக் கொள்ளாமையால்.

63. மன்னராட்சி மலையகத்தில் முடிவுக்கு வந்த விதத்தை விளக்குக.
1815ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தபோது மன்னன் மெதமகாநுவரவிற்கு சென்று மறைந்திருந்தான். அதன்பின் பிரித்தானியப்படை (ஆங்கிலேயர்) மெதமகாநுவரவிற்கு சென்றதும் பிரதானி மொல்லிக்கொட என்பவன் மன்னனையும் அவனுடைய மனைவியையும் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான். அதனை அடுத்து மலையகத்தின மன்னராட்சி முடிவுக்கு வந்தது.

64. பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிகள் கலகங்களின் ஆண்டுகளைத் தருக.

1. 1797 கிளர்ச்சி
2. 1818 கலகம்
3. 1848 கலகம்

65. மலையக இராச்சியம் எந்த ஆளுனரின் காலத்தில் பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டது.
றொபேட் பிறவுன்றி மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் (1812 - 1820)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. 1815 மார்ச் மாதம் 02ம் திகதி மகுல்மடுவ மண்டபத்தில் (கண்டி உடன்படிக்கை) கூறப்பட்ட வாசகங்களைத் தருக.

1. இதுவரை காலம் கண்டியை ஆட்சிசெய்த ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கன் சிம்மாசன உரிமையை இழந்துவிட்டான்.
2. இன்றிலிருந்து மலையகத்தை பிரித்தானியர்களே ஆட்சிசெய்வார்கள்.
3. மலையகத்தின் பாரம்பரிய நிர்வாகமுறை தொடர்ந்தும் பின்பற்றப் படும் எனக் கூறப்பட்டது.
4. பௌத்த மதத்திற்கோ அதன் வழிபாட்டு முறைகளுக்கோ எந்தவித குறுக்கீடும் செய்யமாட்டோம் என உறுதியளிக்கப்பட்டது.
5. பௌத்த குருமார்களுக்கும் பொது இடங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

## இலங்கையில் அன்னியர்களின் செல்வாக்குகள்

67. போர்த்துக்கேயரின் செல்வாக்கை இன்றும் நமது சமூகத்தில் காண முடிகிறது. உதாரணம் தருக.

1. றோமன் கத்தோலிக்க சமயம் அறிமுகமாகியமை.
2. தேவாலயங்களுக்கு அருகில் சமயப் பாடசாலைகள் கட்டப்பட்டமை.
3. போர்த்துக்கேயப் பெயர்கள் இன்றும் காணமுடிகிறது.
   உதாரணம் : சில்வா, பெரேரா, பெர்னான்டோ, தொன்யுவன், பொன்சேகா, அல்விஸ், சீமன், லூசியா, கொஸ்டா
4. போர்த்துக்கேய வார்த்தைகள் சிங்கள மொழியில் சேர்ந்தமை.
   உதாரணம் : கோப்பை, கனாப்பு, கமிசை, களிசான், பொத்தான், அச்சாறு, பாதிலி, குருசு.
5. திருமணம் சட்டபூர்வமான நிலைக்கு கொண்டுவந்தார்.
6. பைலா, கப்பிரிஞ்ஞா போன்ற சங்கீத முறைகளை அறிமுகம் செய்தனர்.
7. பெயர்களுக்கு முன்னால் வரும் தொன், தொனா எனவும் பின்னால் "சிங்கோ" என வழங்கும் முறையை அறிமுகப்படுத்தினார்.
8. விவாகத்தின்பின் பெண்கள் கணவன் பெயரை தாங்கும் முறையை அறிமுகப்படுத்தினார்.
9. போர்த்துக்கேயரின் ஆடை அமைப்பு அலங்காரம் அறிமுகமாகியது.
   உதாரணம் : சட்டை, பாவாடை, சேட், தொப்பி, கவுண், காற் சட்டை.
10. போர்த்துக்கேயரின் பரம்பரையினர் புத்தளம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இன்று வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. ஒல்லாந்தர் வருகையினால் ஏற்பட்ட செல்வாக்குகளைத் தருக.

1. புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதம் அறிமுகமாகியது.
2. றோமன் டச்சுச் சட்டம் அறிமுகமாகியது.
3. தேச வழமை என்ற தமிழர் சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டமை.
4. பறங்கியர் என்ற இனம் இலங்கை சமூகத்தில் உருவாகியமை.
5. டச்சுக்காரரின் கட்டடக்கலை இந்நாட்டு கலாசாரத்தின் அங்கமாக காணப்படுகிறது.
6. இந்நாட்டிற்கு அச்சுக்கலையை அறிமுகம் செய்தனர்.
7. மொறட்டுவையில் மரத் தளபாடக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்தனர்.
8. சிங்கள மொழிக்குள் புகுந்துள்ள டச்சுச் சொற்கள்
உதாரணம் : இஸ்தோப்பு, பராதய, ஒரலோசுவ, பந்தேசிவ, பூதல், வெந்தேகி, கொந்தேசி, அத்வகாத், கந்தோரு, உலாந்தா போன்ற சொற்கள்.
9. கோப்பி வீட்டுத்தோட்டப் பயிராக ஆரம்பமாகியது.
10. சிங்கள கலாசாரம் பாதிப்படைந்தது.
11. லாந்ராட், சிவில் ராட், றாட்வான் ஜஸ்ரிஸ் எனப்படும் நீதியரசர் முறை உருவானது.

69. இலங்கையில் பிரித்தானியர்களின் செல்வாக்குகளைத் தருக.

1. போக்குவரத்து நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள், மின்சாரம், செய்திப் பரிமாற்ற முறைகள் விரிவடைந்தன.
2. நீர்ப்பாசனம் புனரமைப்பு, விவசாயக் குடியேற்றம் நிறுவுதல் என்பன வளர்ச்சியடைந்தது.
3. சர்வதேச மொழியான ஆங்கிலமொழியை கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.
4. பெருந்தோட்டப் பயிர்கள் வளர்ச்சியடைய வழிகோலினர்.
5. மலேரியா ஒழிப்பு இயக்கத்தினை ஆரம்பித்து மரண எண்ணிக்கையை குறைத்தனர்.
6. ஒழுங்கமைக்கப்பட்ட நீதித்துறை உருவானது.
7. உள்நாட்டு விவசாயம் வீழ்ச்சியடைய காரணமானார்.
8. சம்பளத்திற்கு வேலைசெய்யும் ஒரு கூட்டத்தினரை உருவாக்கியது.
9. அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படக் காரணமானார்.
10. மேலைநாட்டு ஆடை அணிகள், உணவு பானங்கள், பழக்க வழக்கம் என்பன எமது கலாசாரத்தில் சேர்ந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 10

# கைத்தொழிற் புரட்சி

1. கைத்தொழிற் புரட்சி என்பதனை விளக்குக.

மனிதன் தனது இரு கைகளின் சக்திக்கு பதிலாக இயந்திர சாதனங்களை பயன்படுத்தி பொருட்களை அதிகமாகவும், விரைவாகவும் உற்பத்திசெய்யும் முறையில் ஏற்பட்ட மாற்றமே கைத்தொழிற் புரட்சி ஆகும்.

2. கைத்தொழிற் புரட்சி வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குக.

1760 - 1830 காலப்பகுதிகளில் கைத்தொழிலிலும் விவசாயத்திலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்தது. இதனை ஆரம்பத்தில் தொழிற்புரட்சி என அழைக்கப்பட்டது. பின்னர் அப்புரட்சி சமூக கட்டமைப்பை அடியோடு மாற்றிவிட்டது. அதனை உணர்த்தவே கைத்தொழிற் புரட்சி என வளர்ச்சியடைந்தது.

3. கைத்தொழிற் புரட்சி முதன்முதல் எங்கே ஏற்பட்டது.

இங்கிலாந்து அல்லது பிரித்தானியா அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது பிரிட்டன் அல்லது U.K. (லண்டன் இந்நாட்டின் தலை நகரமாகும்)



4. இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தையும், சமுதாய மாற்றங்களையும் கைத்தொழிற் புரட்சி என அழைத்தவர் யார்?

ஆர்னோல்ட் டொயின்பி

5. கைத்தொழிற் புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட ஏதுவான காரணங்களைத் தருக.

பொருளாதார காரணங்கள் :

1. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தின்மூலம் பெருமளவு மூலதனத்தை சம்பாதிக்க முடிந்தமையால், பிரித்தானியர் அதிகளவிலான கீழைத்தேசங்களை கைப்பற்றி அப்பிரதேசத்திலிருந்து தமக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெற்று கைத்தொழில் முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்து அக்கைத்தொழில் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்து மிதமிஞ்சிய மூலதனத்தை சம்பாதித்துக் கொண்டமையால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இங்கிலாந்தில் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
   1) வருடம் முழுவதும் நிலத்தை பயிர்செய்கைக்கு உட்படுத்தப் படும் சுழற்சி முறை பயிர்ச்செய்கை.
   2) சிறு நிலச்சுவாந்தர்கள் காணிகளை இழந்து திறந்த வயல் முறை நடைமுறைக்கு வந்தமை.
   3) வரிசையாக நாற்று நடும் முறையை ஜித்றோட்டல் என்பவர் அறிமுகப்படுத்தியமை.
   4) மாமிசத்தை அதிகமாக உண்ணும் முறை - டேக்வல்.
   5) விவசாய இயந்திர சாதனங்களும் கருவிகளும் பயன்படுத்தப் பட்டமை.

3. கைத்தொழிற் புரட்சிக்கு தேவையான வளங்கள் இங்கிலாந்தில் இருந்தமையால்.
   1) நிலக்கரிப் படிவுகளும் இரும்பும் தாராளமாக கிடைக்கப் பெற்றமையால்.
   2) வங்கித்தொழில் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டமையால்
   3) நீண்ட கடற்கரையும் கப்பல் செல்லக்கூடிய நதிக்கரைகளும் காணப்பட்டமை.
   4) இங்கிலாந்தின் பொருளாதாரக் கொள்கை சாதகமாக காணப்பட்டமை.

      இங்கிலாந்தில் முதலாளித்துவ பொருளாதாரத்தை ஊக்கு விக்கக்கூடிய பொருளாதாரக் கொள்கை காணப்பட்டமை யால்.

      உதாரணம் : அடம்ஸிமித் எழுதிய 'தேசங்களின் செல்வம்'

**சமூகக் காரணங்கள்**

1) இங்கிலாந்தின் சனத்தொகை துரிதமாக அதிகரித்தமை.

   சனத்தொகை துரிதமாக அதிகரித்தமையால் அவ்வதிகரிப்புக்கு ஏற்ப பொருட்களுக்கான கேள்வியும் அதிகரித்தது. அதனால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருந்தது.

2) அறிவுத்துறை விஞ்ஞானத்துறையின் வளர்ச்சிகள் 15ம், 16ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட விஞ்ஞான மறுமலர்ச்சியினால் புதிய இயந்திர சாதனங்களை கண்டுபிடிக்க முடிந்தது.

3) நிலமானிய சமூக முறை ஒழிக்கப்பட்டமை.

   17ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தினால் நிலமானிய சமூக முறை ஒழிக்கப்பட்டு குடியானவர்கள் விடுதலை பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) இங்கிலாந்தில் உறுதியான அரசியல் நிலை தோன்றியமை.
1688ம் ஆண்டு இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆங்கிலப்புரட்சியின் பின் உறுதியான அரசியல் நிலைமை தோன்றியது.

6. கைத்தொழிற் புரட்சி எந்தெந்த துறைகளில் ஏற்பட்டது.
1) புடவைக் கைத்தொழில்
2) நிலக்கரிக் கைத்தொழில்
3) இரும்புக் கைத்தொழில்

7. கைத்தொழிற் புரட்சியின்போது நெசவுக் கைத்தொழிலில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

குடிசைக் கைத்தொழிலாக இருந்த புடவைக் கைத்தொழில் இங்கிலாந்தில் ஏற்பட்ட துரிதமான சனத்தொகை அதிகரிப்பால் அதற்கான கேள்வி அதிகரித்த போதிலும் உற்பத்தியை அதிகரிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக உற்பத்தி, உற்பத்தித்திறன் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது.

8. புடவைக் கைத்தொழிலில் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களையும் கண்டுபிடித்தவர் ஆண்டு என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

| ஆண்டு | இயந்திரம் | கண்டுபிடித்தவர் |
|---|---|---|
| 1733 | ஜோன் கே | நூனாளி (நெசவு நாடா) |
| 1767 | ஜேம்ஸ் ஹாக்கிறீவ்ஸ் | ஜெனி (நூல் நூற்றல்) |
| 1769 | றிச்சாற்ட் ஆக்ரைட் | நீர்ச்சட்டம் |
| 1779 | சாமுவேல் குறொம்ரன் | மீயுல் இயந்திரம் |
| 1784 | எட்மன்ட் காட்றைட் | நீராவி விசைத்தறி (இயந்திரத்தறி) |

9. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
1846 ஆண்டு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த எரியாஸ் ஹோவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

10. இரும்புக் கைத்தொழிலின் புரட்சிக்கு பங்களிப்புச் செய்த கண்டுபிடிப்புக் களைத் தருக.
1. 1730ல் ஆபிரகாம் டாபி நிலக்கரியை உபயோகித்து இரும்புத்தாது உருக்குதலை கண்டுபிடித்தார்.
2. 1740ல் பெஞ்ஜமின் அன்டர்சன் குறிசி முறையை அறிமுகம் செய்தார்.
3. 1782ல் ஹென்றி ஹோட் வார்புமூலம் இரும்பு செய்யும் புதிய முறையை கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. நிலக்கரிக் கைத்தொழிலின் புரட்சிக்கு பங்களிப்புச் செய்த கண்டுபிடிப்புக் களைத் தருக.
   1. 1735 நிவ்கோமன் நீராவியினால் நீர் இறைக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்தார். 1736ல் ஜேம்ஸ் வாட்டரினால் மேலும் விருத்தி செய்யப்பட்டது.
   2. 1812ல் ஹம்றிடேவி என்பவர் பாதுகாப்பு விளக்கை கண்டுபிடித்தார்.

12. கைத்தொழிற் புரட்சியில் செய்தித்தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்களை தருக.
   1. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் கிரகம்பெல் என்பவர் 1876இல் தொலைபேசியை கண்டுபிடித்தார்.
   2. இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோணி என்பவர் 1895ல் வானொலியை கண்டுபிடித்தார்.

13. கைத்தொழிற் புரட்சியின்போது போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தருக.
   1. 1814ல் ஸ்ரிவின்சன்ஸ் கண்டுபிடித்த புகையிரத இயந்திரத்தோடு முன்னேற்றம் ஏற்பட்டது.
   2. ஜேம்ஸ் வாட்டினாற் கடற்கப்பல், கடல் இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டு 1850ல் போக்குவரத்துத்துறையில் பிரபல்யம் பெற்றது.
   3. டெம்லர் என்பவரால் 1885ல் மோட்டார் வாகனம் உற்பத்தி செய்யப் பட்டமை.
   4. 1903ல் றையிட் சகோதரர்களால் விமானம் கண்டுபிடிக்கப்பட்டமை.
   5. உலங்கு வானூர்தி, பஸ், லொறி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை யால்.
   6. 1811 ஜோன் மக்கடம் என்பவர் புதிய பாதைகள் அமைப்பதனை கண்டுபிடித்தமை.
   7. கால்வாய் போக்குவரத்தும் முக்கியம் பெற்றது.
      உதாரணம் : இலிவப்பூல், மன்செஸ்டர் கால்வாய்

14. கைத்தொழிற் புரட்சியின் அனுகூலமான விளைவுகளை தருக.
   1. பொருட்களின் உற்பத்தி பன்மடங்காக அதிகரிக்க வழிவகுத்தது.
   2. பொருட்கள் விரைவாக உற்பத்தி செய்யப்பட்டன.
   3. உற்பத்திப் பொருட்களின் உயர் தரம், ஒரே தன்மை கொண்டவை யாக காணப்பட்டமை.
   4. சர்வதேச வர்த்தகம் விரிவடைந்தமை.
   5. சர்வதேச உறவுகள் விருத்தியடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கைத்தொழில் விருத்தியினால் வங்கி, காப்புறுதி, நிதித் தாபனம் என்பன வளர்ச்சியடைந்தமை.
7. தொழிலாளர்களின் நலன்களை பேணுவதற்காக தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டமை.
8. போக்குவரத்து விருத்தியினால் உலகமக்களின் தொடர்பும் வாழ்க்கைத் தரமும் உயர்வடைந்தமை.
9. தொடர்பாடலில் ஏற்பட்ட விருத்தியினால் உலகம் கிராமமாக சுருங்க வழிவகுத்தது.

16. கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட பிரதிகூலமான விளைவுகளைத் தருக.
1. வேலையில்லாப் பிரச்சினை உருவாகியது.
2. சூழல் மாசடைய வழிவகுத்தது.
3. தொழிலாளர் வர்க்கமும் மத்தியதர வர்க்கமும் தோன்றியமை.
4. மக்களின் கைத்திறன் சிந்தனைத்திறன் வீழ்ச்சியடைந்தது.
5. குடியேற்றம் ஸ்தாபிக்கப்பட்டு குடியேற்றங்களின் வளங்கள் சுரண்டப்பட்டமையால் அந்நாடுகள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கியமை.

17. கைத்தொழிற் புரட்சி குடியேற்ற வாதம் விரிவடைவதற்கு ஏதுவான காரணத்தைத் தருக.
1. கைத்தொழிற்புரட்சியினால் இயந்திர சாதனங்களின் பாவனை அதிகரித்து வர்த்தகப் பொருட்களின் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்தமை அவற்றை சந்தைப்படுத்த.
2. கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெறுவதற்கு குடியேற்றங்களை ஸ்தாபிப்பது சிறந்த வழியாக காணப்பட்டது.
3. முடிவுப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய சந்தைகளை பெறுவதற்கு குடியேற்றங்களை ஸ்தாபித்தல் சிறந்த வழியாக காணப்பட்டது.
4. இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளப் பட்டமையால் வேலையில்லாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களை குடியேற்றங்களில் குடியமர்த்துவதற்கு.
5. புதிய முதலீடுகளை மேற்கொள்ளப்பட்டமையினால் குடியேற்றங்கள் விரிவடைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கைத்தொழிற் புரட்சி சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்த விதத்தினை தெளிவாக விளக்குக.

1. கைத்தொழில் புரட்சியில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக உற்பத்தி பன்மடங்காக அதிகரித்தது. ஆகையினால் அம்மிகை உற்பத்தி களை ஏற்றுமதி செய்தமையால் சர்வதேச வர்த்தகம் வளர்ச்சி யடைந்தது.
2. கைத்தொழில் புரட்சியில் ஏற்பட்ட விருத்தியினால் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அதிகளவிலான கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்தது. அவற்றிற்கு தேவையான மூலப்பொருட்களை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டமையால் சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது.
3. சர்வதேச வர்த்தகத்திற்கு போக்குவரத்துச் சாதனங்கள், தொடர் பாடல் சாதனங்கள் அவசியமானதாகும். அவை கைத்தொழில் புரட்சியில் ஏற்பட்ட வளர்ச்சியினால் கண்டுபிடிக்கப்பட்டமையால் சர்வதேச வர்த்தகத்தின் விருத்திக்கு கைத்தொழில் புரட்சி பங்களிப்பு செய்துள்ளது எனலாம்.

19. கைத்தொழில் புரட்சி என்பது முடிவில்லாத செயல்முறையாகும். இதனை விளக்குக.

1. 1876இல் அலெக்சாண்டர் கிரகம்பெல் என்பவரினால் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ரெலக்ஸ், பக்ஸ், ஈமெயில், இன்ரநெற், மொபைல் என பல்வேறுபட்ட நவீன தொடர் பாடல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு முடிவில்லாது செயற்படுகிறது.
2. 1903இல் றையிட் சகோதரர்களினால் விமானம் கண்டுபிடிக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து பாரிய பயணிகள் விமானங்கள், சரக்கு விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் மிறாஜ், மிக் கிபிர் என யுத்த விமானங்கள் பல்வேறுபட்ட வடிவங்களில் நவீன முறை களில் உற்பத்தி செய்யப்பட்டு முடிவில்லாது செயற்படுகிறது.
3. ஆரம்ப காலத்தில் குறித்த ஒருசில வைத்திய உபகரணங்களுடன் ஆரம்பமான வைத்தியத்துறை இன்று X - Ray, E.C.G. ஸ்கானிங், லேசர் முறைகளை பயன்படுத்தும் அளவிற்கு வைத்தியத்துறை வளர்ச்சி கண்டுள்ளது. எனவே முடிவில்லாது செயற்படுகிறது எனலாம்.
4. ஏட்டுக் கல்வியுடன் ஆரம்பமான கல்விமுறை இன்று பல்லூடகக் கருவி, கணனி, மேலெறிகைக் கருவி என்பவற்றை பயன்படுத்தும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. எனவே கைத்தொழில் புரட்சி முடிவில்லாத செயல் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் புதிய அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி

1. மனித உரிமையை வென்றெடுப்பதற்காக முதன்முதல் இடம்பெற்ற ஒப்பந்தம் எது?
   மக்னா காட்டா (மகாபட்டயம்)
   1215ம் ஆண்டு இங்கிலாந்து தேம்ஸ் நதியிலுள்ள றனிமீட் தீவில் இடம்பெற்ற ஒப்பந்தம்.

2. மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக இடம்பெற்ற முக்கியமான புரட்சிகளைத் தருக.

| | | |
|---|---|---|
| ஆங்கிலப் புரட்சி | - | 1688 |
| அமெரிக்க சுதந்திரப் போராட்டம் | - | 1776 |
| பிரான்சியப் புரட்சி | - | 1789 |
| இரசியப் புரட்சி | - | 1917 |

## பிரான்சியப் புரட்சி

3. பிரான்சியப் புரட்சி தொடர்பான முக்கிய தகவல்களைத் தருக.
   1. மன்னனை முதல்வராக கொண்ட நிலமானிய சமூக அமைப்பு பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் பிரான்ஸில் நிலவியது.
   2. பிரபுக்கள், சமய குருமார், சாதாரண மக்கள் என்ற மூன்று படிநிலைகளை கொண்டிருந்த முடியாட்சி நிலவியது.
   3. அரச உரிமை, இறைவனின் வரத்தின்மூலம் கிடைத்துள்ளது என மன்னர்கள் கருதினார்கள்.
   4. சட்டம் வகுத்தல், செயற்படுத்தல், இறுதித் தீர்ப்பு வழங்கல் ஆகிய அதிகாரங்கள் எல்லாம் மன்னனிடம் இருந்தன.
   5. 14ம் லூயி மன்னன் "நானே இராச்சியம்" என்றான்.
   6. மன்னருக்கு எதிரானவர் என கருதப்பட்டோர் கைது செய்யப்பட்டு "பஸ்ரில்" என்ற சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டனர்.
   7. மன்னனிடம் இருந்த எல்லையற்ற அதிகாரங்கள் பற்றி பிரான்ஸிய மக்கள் பெரும் ஆத்திரம் கொண்டனர். அந்த அதிகாரத்தின் ஒரு சின்னமாக பஸ்ரில் கருதப்பட்டமையால் பிரான்ஸியப் புரட்சியின் ஆரம்பத்திலேயே அச்சிறைச்சாலை தாக்கப்பட்டது.
   8. மன்னரின் இன்பலோக சுகபோக வாழ்க்கையை மக்கள் வெறுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பிரான்ஸின் சனத்தொகையில் 4%மானோர் பிரபுக்களும் சமய குருமார்களும் ஆகும்.
10. 13ம், 14ம் லூயி மன்னன் காலத்தில் இவர்களது இராணுவ நீதித்துறை அரசியல் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மத்திய அரசிடம் வழங்கப்பட்டது.
11. பிரெஞ்சு சமுதாயத்திலே 3வது படியில் விவசாயிகள் தொழிலாளர்கள் போன்ற மத்திய வகுப்பினர் இருந்தார்கள். இவர்கள் சனத்தொகையில் 92%மானோர் ஆகும்.
12. இவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தார்கள். அரசாங்கத்துக்கும், பிரபுக்களுக்கும், தேவாலயங்களுக்கும் அதிக வரி இவர்கள் செலுத்தினார்கள். காணி வரியும் 'றஜித்' என்ற தேவாலய வரியும் கொடுமையான வரிகளாகும். விவசாயிகள் வருமானத்தில் 60% வரியாக செலுத்தினார்கள்.
13. வர்த்தகம், கைத்தொழில் ஆகியன விருத்தியுற்றதால் மத்திய வகுப்பினர் செல்வந்தர்கள் ஆயினார்கள்.
14. முயற்சியாளர், எழுத்தாளர், சிந்தனையாளர், பொறியியல் அறிஞர், சட்ட அறிஞர் ஆகியோர் மத்திய வகுப்பில் தோன்றினார்கள்.
15. வர்த்தகம் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்தது.

4. பிரான்ஸிய புரட்சியின் முக்கியமான தொனிப்பொருட்களை தருக.
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

5. பிரான்சிய புரட்சி ஏற்பட காரணமான தத்துவஞானிகளையும் சிந்தனையாளர்களையும் தருக.
மொன்டெஸ்கியு (Montesquieu) (1689 - 1755)
வோல் ரயர் (Voltaire) (1694 - 1778)
ரூசோ (Rousseav) (1712 - 1778)

6. மொன்டெஸ்கியூவின் கருத்துக்களை தருக.
i. இங்கிலாந்தில் இருந்து வந்த அரசியல் முறையை பெரிதும் பாராட்டினார்.
ii. மொன்டெஸ்கியூ "சட்டத்தின் சாரம்" (The spirit of Law) என்ற நூலில் வலு வேறாக்கல் கோட்பாட்டை முன்வைத்து இருந்தார்.
iii. ஒரு நாட்டின் சட்டவாக்க துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளும் தனித்தனியாக இயங்கவேண்டுமெனவும் இவை ஒன்றையொன்று கண்காணிப்பதன் மூலம் சர்வாதிகார முறை தோற்றம் பெறுவதை தடுக்கமுடியும் எனவும் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. அக்கால பிரான்ஸிற்கு இத்தகைய ஒரு ஆட்சிமுறை தேவைப் படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

7. வோல் ரயர் கூறிய கருத்துக்களை தருக.
   i. இவர் ஒரு வரலாற்றாசிரியராகவும், கவிஞராகவும், தத்துவ ஞானி யாகவும் நாடக எழுத்தாளராகவும் முழு ஐரோப்பாவிலும் புகழ் பெற்று இருந்தார்.
   ii. சலுகை படைத்த சமூக வர்க்கத்தினருக்கு எதிராக தனது கருத்துக்களை வெளியிட்டார்.
   iii. நீங்கள் அனுபவித்துவரும் சலுகைகளை மற்றவர்கள் அனுபவிப் பதற்கு இடமளியுங்கள்:
   iv. கருத்துக்களை எடுத்துக்கூறும் உரிமை எல்லா மனிதர்களுக்கும் உண்டு எனவும் மாறான கருத்துக்களை மற்றவர் கூறினாலும் செவிசாய்க்க வேண்டும் என இவர் கூறினார்.
   v. கருத்து சுதந்திரத்திற்கு தடையாக இருந்துவந்த றோமன் கத்தோலிக்க திருச்சபையை கண்டித்தார்.
   vi. "ஒரு தேசம் சிந்திக்க தொடங்கிவிடுமேயானால் அதன் வளர்ச்சியின் வேகத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது" என கூறினார்.
   vii. "நூறு எலிகளால் ஆளப்படுவதை விட ஒரு சிங்கத்தால் ஆளப் படுவது சிறந்தது"

8. ருசோ கூறிய கருத்துக்கள் எவை?
   i. மன்னன் கடவுளின் வரம் பெற்றவன் என்ற கருத்தை முற்றாக நிராகரித்தார். மன்னனை கடவுளே நியமனம் செய்கிறான். மன்னனை எதிர்ப்பது கடவுளை எதிர்ப்பது ஆகும் என்றவகையில் நிலவிவந்த கருத்தை அவர் கடுமையாக விமர்சித்தார்.
   ii. மக்களின் தீர்மானத்தின்மூலமே அரசாங்கம் உருவானது என்ற "சமுதாய ஒப்பந்தம்" என்னும் கோட்பாட்டை உருவாக்கினார்.
   iii. மன்னன் மக்களின் நலன்களை நிறைவேற்றவேண்டும். தவறினால் அவனை பதவியிலிருந்து நீக்கும் உரிமை மக்களுக்கே உண்டு என வலியுறுத்தினார்.
   iv. இவரின் கருத்துக்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் பிரான்ஸிய புரட்சியின் தொனிப்பொருட்களை விளக்கு கின்றது.
   v. "மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான். அவன் எங்கும் அடிமைச் சங்கிலிகளினால் கட்டுண்டு கிடக்கிறான்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பிரான்ஸிய புரட்சிக்கான உடனடி காரணங்களை தருக.

   i. பிரெஞ்சு அரசாங்கம் எதிர்நோக்கி இருந்த பொருளாதார நெருக்கடியினால் உண்டான இக்கட்டான நிலைமை.

   ii. பிரெஞ்சு சமூகத்தின் கூறுகள் சமூக அமைப்பினை வெறுத்தமை. பிரெஞ்சு புரட்சிக்கு முக்கியமான காரணமாகும்.

   iii. பொருளாதார நெருக்கடிக்கு பரிகாரம் காண 16ம் லூயி மன்னன் 175 ஆண்டுகளாக கூட்டப்படாது இருந்த "இஸ்ரேட் ஜெனரல்" என்ற பாராளுமன்றத்தை கூட்டினான்.

   iv. வாக்குரிமையை பயன்படுத்துவது பற்றி கருத்து முரண்பாடு ஏற்பட்டதால் மக்கள் பிரதிநிதிகளை அக்கழகத்தைவிட்டு வெளியேறி பிரான்ஸிற்கு புதிய யாப்பு ஒன்றை வகுப்பதற்காக அருகில் இருந்த ரெனிஸ் விளையாட்டு மைதானத்தில் கூடினார்கள்.

   v. ஆயுதம் தாங்கிய மக்கள் 1789 யூலை மாதம் 14இல் பஸ்ரில் சிறைச்சாலையை தாக்கி அங்கு சிறையிருந்த அனைவரையும் விடுதலை செய்தனர். அதன் பின்னர் முடியாட்சி சார்பானவருக்கும் புரட்சிக்காரருக்கும் இடையில் போர் மூண்டது.

   vi. புரட்சிக்காரர் மனித உரிமைகள் பற்றி செய்த பிரகடனம் புரட்சியின் ஒரு முக்கியமான கட்டத்தைக் குறித்தது. இந்த பிரகடனம் அந்த ஆண்டிலேயே புரட்சிக்காரர் அமைத்த யாப்பின் பாயிரமாக அமைந்தது.

10. டெனிஸ் மைதானத்தின் சத்தியப் பிரமாணம் தோன்றிய விதத்தை விளக்குக.

   i. பிரபுக்கள், மதகுருமார், சாதாரண மக்கள் ஆகிய பிரதிநிதிகளைக் கொண்ட சபையாகும். இச்சபை தமது அதிகாரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என பிரபுக்களும் மதகுருமாரும் மன்னனிடம் எடுத்துகூறி புறம்பான கூட்டம் நடாத்தப்பட வேண்டும் என எடுத்து கூறினார்கள்.

   ii. இச் சபையில் 1000 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் 600 பேர் மூன்றாம் வகுப்பினராவார்.

   iii. 1789 மே 5ம் திகதி இஸ்ரேட் ஜெனரளின் கூட்டம் "வேர்சேல்ஸ்" மாளிகையில் நடாத்தப்பட்டது.

   iv. பிரபுக்களும் மதகுருமாருமே சம்பிரதாயபூர்வமான மரியாதைகளுடன் மன்னனை வரவேற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. 3ம் வகுப்பினை சேர்ந்த பிரதிநிதிகளை இரண்டு மணித்தியாலம் கூட்டம் இடம்பெறும் மண்டபத்தினுள் நுழையவிடாது வெளியில் நிறுத்தி வைக்குமாறு மன்னன் கட்டளையிட்டு இருந்தான்.

vi. அதனால் ஏற்பட்ட மோதல்களை அடுத்து மூன்றாம் வகுப்பை சேர்ந்தவர்கள் "மிராபோ" என்பவனின் தலைமையில் அருகிலிருந்த டெனிஸ் மைதானத்தில் கூடினார்கள்.

vii. ஒரு நிலையான அரசாங்கத்தினை ஸ்தாபித்துக்கொண்ட பின்னரே தாம் அந்த இடத்திலிருந்து அகன்று செல்வதாக அவர்கள் உறுதி யளித்தனர். இதுவே ரெனிஸ் மைதானத்தின் சத்தியப்பிரமாணம் என சரித்திரத்தில் இடம்பெறுகிறது.

11. 1791ம் ஆண்டு மனித உரிமை பிரகடனத்தில் கூறப்பட்ட முக்கியமான வாசகங்களை தருக.

i. ஒவ்வொரு மனிதனும் ஒரு சுதந்திர மனிதனாக பிறக்கிறான்.

ii. சமூகத்தில் வாழும் அனைவருக்கும் சமமான விதத்தில் உரிமைகள் கிடைக்கவேண்டும்.

iii. சட்டதிட்டங்கள் வகுப்பதில் பங்குபற்றும் உரிமை மக்களுக்கு உண்டு.

iv. சட்டம் ஒன்றின்கீழ் மட்டுமே ஒருவர் கைது செய்யப்பட வேண்டும். வேறு விதங்களில் எவரையும் கைது செய்யக்கூடாது.

v. அனைத்து பிரஜைகளுக்கும் தனது கருத்தை கூறும் சுதந்திரம் உண்டு.

vi. ஒவ்வொருவருக்கும் தான் விரும்பிய சமயத்தை பின்பற்றும் சுதந்திரம் இருக்கவேண்டும்.

12. 1791ம் ஆண்டு மனித உரிமை பிரகடனத்துக்கும் 16ம் லூயி மன்னருக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

i. 1791ம் ஆண்டு மனித உரிமை பிரகடனத்தினை ஏற்றுக்கொள்ள விரும்பாத 16ம் லூயி பாரிஸிலிருந்து தப்பி ஓடினான்.

ii. மன்னன் தமக்கெதிராய் படை திரட்டுவான் என்று பயந்த புரட்சிக் காரர் "றொவெஸ்பியர்" டான்ரன் உள்ளிட்ட புரட்சிவாதிகள் 1793 ஜனவரி 21ம் திகதி இம்மன்னனை பிடித்து கொலைசெய்தனர்.

iii. இதனால் அச்சம் கொண்ட ஏனைய ஐரோப்பிய நாடுகள் பிரான்ஸிற்கு எதிராக கிளம்பியதால் புரட்சி ஐரோப்பிய போராக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரான்ஸிய புரட்சியின் விளைவுகளை தருக.
   i. 1791ம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனம் அமைத்து காலங்களுக்கும் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய ஓர் ஆவணமாக பிரசித்தி பெற்றமை.
   ii. மானியமுறை பொருளாதார அமைப்பு முற்றிலும் வீழ்ச்சி கண்டமை.
   iii. ஒரு முதலாளித்துவ பொருளாதார அமைப்பு உருவாகியமை.
   iv. சிறுகாணிச் சொந்தக்காரர்களான விவசாயிகள் வர்க்கம் ஒன்று தோன்றியமை.
   v. அரசியல் உரிமைகள் மற்றும் நிர்வாக உரிமைகள் என்பற்றை பெற்ற ஒரு மத்திய வர்க்கம் தோன்றியமை.
   vi. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய எண்ணக்கருக்களை அடிப்படையாக கொண்ட சமூகம் உருவாகியது.
   vii. மன்னர் ஆட்சி நிலவிவந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது.
   viii. பொருளாதார, சமூக, சமய நிறுவனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.
   ix. பூர்பன் வம்சத்தினர் அனுபவித்த எதேச்சதிகாரம்/ சர்வாதிகாரம், தெய்வீக உரிமை, பழமை வாதம், மானிய முறை உரிமை எல்லாவற்றையும் பிரான்ஸிய புரட்சி நிராகரித்தது.

## இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கம்

14. இத்தாலியின் புவியியல் அமைப்பை விளக்குக.
   1. இத்தாலி மிகப்பெரிய தீபகற்பம் ஆகும்.
   2. அல்ப்ஸ் மலைத்தொடர் அதன் வட எல்லையாக உள்ளது.
   3. அல்ப்ஸ் மலைத்தொடரில் உற்பத்தியாகும் போ நதி இத்தாலியின் மிக நீளமான நதி ஆகும்.
   4. 19ம் நூற்றாண்டின்போது இத்தாலி ஒரு நாடாக இருந்துவரவில்லை. ஆனால் ஒரு பூகோள பிரதேசமாக மட்டும் இருந்துவந்தது.

15. 19ம் நூற்றாண்டுவரை இத்தாலி நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது இருந்தமைக்கான காரணங்களைத் தருக.
   1. வெவ்வேறு பிரதேசங்கள் வெவ்வேறு வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்தமை.
      i. நேபிள்ஸ், சிசிலித்தீவுகள் - பிரான்சிய பூபன் வம்சம்
      ii. மத்திய இத்தாலி - பாப்பாண்டவரின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. பர்மா, டஸ்கனி, மொடனா வெனிசியா, லொம்பாடி - ஆஸ்த்திரியா வம்சம்

iv. பியட்மன், சாழனியாத்தீவு - சவோய் அரசவம்சம்

v. பல பிரதேசங்கள் - இத்தாலிய பிரதானிகள்

2. பாப்பரசன் கொண்டிருந்த அதிகாரம் இத்தாலியை ஒற்றுமைப் படுத்தும் இயக்கத்திற்கு பெரும் தடையாக இருந்தது.

3. 19ம் நூற்றாண்டுவரையில் இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வுகள் தோன்றவில்லை.

16. இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்தில் முன்னோடியாக இருந்தவர் களைத் தருக.

1. நெப்போலியன் பொனபாட்
2. ஜோசேப் மசினி
3. கவுண்ட் கவூர்
4. கரிபால்டி

17. இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதில் நெப்போலியன் பொனபாட் மேற் கொண்ட ஆரம்ப நடவடிக்கைகளைத் தருக.

1. 1796இல் பிரான்சின் வெளிநாட்டு ஆதிக்கத்தை தன் கைகளில் எடுத்த நெப்போலியன் பொனபாட் இத்தாலியின் பல பிரதேசங்களை ஆக்கிரமித்து அவற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.
2. 1797 இல் வட இத்தாலியையும், 1807 இல் பாப்பரசனின் கீழிருந்து வந்த பிரதேசங்களையும், 1809 இல் நேபிள்ஸ் சிசிலிப் பிரதேசங் களையும் கைப்பற்றினான்.
3. பிராந்திய அரசுகளின் எண்ணிக்கை இரண்டாகக் குறைத்தான்.

18. இத்தாலியின் நிர்வாக நடவடிக்கைகளை சீர்திருத்துவதற்கு நெப்போலியன் பொனபாட் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.

1. இத்தாலியில் அமுல்செய்யப்பட்டு வந்த மிகக் கொடுமையான நீதி முறையை இரத்துச்செய்தமை.
2. நெப்போலியன் சட்டத் தொகுப்பினை இத்தாலி எங்கும் செயற் படுத்தியமை.
3. ஒரேவிதமான அளவு முறை ஒன்றை அமுலாக்கியமை.
4. ஆற்றலும் தகுதியும் கொண்டிருப்பவர்களுக்கு பதவிகள் வழங்கியமை.
5. நெப்போலியன் கி.பி. 1815இல் தோற்கடிக்கப்பட்டான்.
6. வியன்னா உடன்பாட்டின் மூலம் அவன் முன்னெடுத்த சீர்திருத்தங்கள் வலுவிழந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இத்தாலி மக்களிடையே ஒரு தேசிய உணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டிருந்தான்.

19. லியன்னா உடன்பாட்டின் மூலம் இத்தாலி பிரிவடைந்த விதத்தை விளக்குக.
   1. நேபிள்ஸ், சிசிலிப் பிரதேசம் பிரான்சிய பூபன் அரச வம்சத்துக்கு வழங்கப்பட்டது.
   2. மத்திய இத்தாலி பாப்பரசருக்கு வழங்கப்பட்டது.
   3. பர்மா, மொடனா, டங்கனி ஆகிய பிரதேசம் ஆஸ்த்திரியாக்கு வழங்கப்பட்டது.
   4. லொம்பாடி, வெனிஸியா பிரதேசங்கள் ஆஸ்த்திரிய ஹப்ஸ்பேர்க் அரச வம்சத்துக்கு வழங்கப்பட்டது.
   5. பியட்மன்ட் சாடினியா பிரதேசம் சாடினிய அரசனுக்கு வழங்கப்பட்டது.

20. வியன்னா உடன்பாட்டின்பின் காணப்பட்ட இயல்புகளைத் தருக.
   1. ஆஸ்திரியாவின் விருப்பத்தின் பிரகாரமே இத்தாலியில் ஆட்சி இடம்பெற்றது.
   2. இத்தாலியின் செல்வத்திலிருந்து பிரான்சும், ஆஸ்திரியாவும் பெருமளவு பயனடைந்தன.
   3. பாப்பரசர் மீண்டும் ஒடுக்குமுறை இயல்புடன் கூடிய நீதி முறையை செயற்படுத்தினார்.
   4. 1815 இல் ஜோசப் மசினி கூறினார் "எமக்குத் தேசியக்கொடி இல்லை. ஐரோப்பிய நாடுகளிடையே ஓர் அரசியல் அந்தஸ்தையோ பெயரையோ நாங்கள் கொண்டிருக்கவில்லை".
   5. இத்தாலியின் அனைத்து அரசுகளிலும் எதேச்சதிகார ஆட்சி இடம்பெற்றது.
   6. மக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு தடை விதிக்கப்பட்டது.
   7. ஜோசெப் மசினி, கவுண்ட் கவூர், கரிபால்டி ஆகிய மூவரும் முன்னணிப் பாத்திரத்தை வகித்தனர்.

21. மூவரிடமும் காணப்பட்ட தனித்துவமான திறமைகளைத் தருக.
   1. ஜோசெப் மசினி - தேசிய உணர்வூட்டும் முறைகள்
   2. கவுண்ட் கவூர் - மக்களுக்குத் தலைமைத்துவம் வழங்கினார்.
   3. கரிபால்டி - போர்க்களத்தை நெறிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஜோசப் மசினி இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்தை வழிநடத்தி யதையும் ஏற்பட்ட நிகழ்வுகளையும் தருக.

1. மசினி 1815இல் இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்தை ஆரம்பித்தார்.
2. நெப்போலியனால் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளை முடியுமானவரையில் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர் முயற்சித்தார்.
3. எதேச்சதிகார ஆட்சி முறைகளுக்கு எதிராக முதலில் செயற்பட்ட அமைப்பு காபனாரி என இனங்கண்டார்.
4. இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிக்கு ஆஸ்திரியா கடும் எதிர்ப்பை தெரிவித்தது. ஆஸ்திரியாவின் அதிகாரத்தை நீக்காமல் இத்தாலியின் சுதந்திரத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது எனவும் இதனை காபனாரி அமைப்பினால் மட்டும் செய்யமுடியாது எனவும் கூறினார்.
5. மசினி இத்தாலி இளைஞர் சங்க என்ற அமைப்பை ஸ்தாபித்தார்.
6. "ஐக்கிய சுதந்திரம்" என்பதே இவ்வமைப்பின் சுலோகமாகும்.
7. மசினியின் மனம் தளராத முயற்சியினால் இச்சங்கம் வெகு விரைவாக பிரபல்யம் அடைந்தது.
8. பிரான்ஸ் மசினியை அங்கிருந்து நாடுகடத்தியது.
9. 1833 இல் மசினி சார்ள்ஸ் அல்பர்ட் மன்னனுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்து அப்போரில் தோல்வி அடைந்து இங்கிலாந்துக்கு நாடு கடத்தப்பட்டது.

23. காபனாரி அமைப்பின் செயற்பாடுகளைத் தருக.

1. காபனாரி அமைப்பினர் 1820 இல் மேர்டி சன்ட் என்ற மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த அமைப்பாகும்.
2. 1812இல் தமக்கு நெப்போலியன் வழங்கிய உரிமைகளை மீண்டும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.
3. இதனைச் செய்வதாக வாக்குறுதி அளித்தான் நெபிள்சன்.
4. 2ஆவது பேர்டினன் வியன்னா உடன்பாட்டை மீண்டும் அமுல் செய்வதற்கு முயற்சித்தார்.
5. மெட்டர்னிக் ஆஸ்திரிய படைப்பலத்தைப் பயன்படுத்தி 1821இல் காபனாரி அமைப்பை அடக்கினான்.
6. 1821இல் பீட்மண்ட் அரசுடன் நடாத்தப்பட்ட சண்டையில் காபனாரி அமைப்பு தோல்வி கண்டது.
7. இதனையடுத்து இத்தாலியின் நிலை முன்னரிலும் பார்க்க மோச மடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இங்கிலாந்திற்கு நாடு கடத்தப்பட்ட மசினி எவ்வாறான கருத்துக்களை முன்வைத்தார்?


   1. இத்தாலியை மன்னராட்சியின்கீழ் ஒருபோதும் ஒற்றுமைப்பபடுத்த முடியாது.
   2. ஒரு கூட்டாட்சி மூலமே இத்தாலியை ஒற்றுமைப்படுத்த வேண்டும்.
   3. இங்கிலாந்தில் இருந்தவாறே தனது எண்ணத்தை இளைஞர் சங்கத்துக்கூடாக செயற்படுத்தினார்.

25. மசினி இங்கிலாந்துக்கு கடத்தப்பட்டபோது இத்தாலியை ஒற்றுமைப் படுத்துவதில் செயற்பட்டவர் யார்?
ஜியோ பேர்டின்

26. ஜியோ பேர்டின் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.

   1. இரண்டாம் பயஸ் பாப்பரசரின் உதவியுடன் தனது முயற்சியை மேற்கொண்டார்.
   2. உரோமாபுரியில் ஒரு சில தாராளவாத சீர்திருத்தங்களையும் அறிமுகப்படுத்தி இருந்தார்.

27. இத்தாலி ஒன்றிணையமுன் காணப்பட்ட பிரிவுகள்.




28. இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதற்காக இடம்பெற்ற ஏனைய நிகழ்வுகளை தருக.

   i. 1848இல் பியட்மன் மக்கள் ஜியோபேர்டின் படைகளை தோற்கடித்தனர்.
   ii. 1812 இல் நெப்போலியனால் செய்யப்பட்ட உடன்பாடு இப்போது பலாத்காரமான முறையில் அமுல் செய்யப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. 1848 இல் பியட்மண்ட் அரசிற்கு ஓர் அரசியல் திட்டத்தை சார்ல்ஸ் அல்பர்ட் வழங்கினான்.

iv. மிலான் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஆஸ்திரியப் படைகளை 1848 இல் விரட்டியடித்தான்.

v. 1848 இல் பிலான் மக்கள் சுதந்திரமான அரசை ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

vi. இத்தாலியின் ஒற்றுமைக்கு எதிராக போராட்டத்தை நடாத்திவந்த மெற்றனிக் 1848இல் ஆஸ்திரியாவிற்கு தப்பிச் சென்றான்.

vii. பியட்மண்ட் அரசியல் ஆஸ்திரியாவின் ஆட்சிக்கு எதிராக இத்தாலியப் பிரதேசம் அனைத்தும் சார்ல்ஸ் அல்பர்ட் மன்னனின்கீழ் ஒன்றுபட்டன.

viii. இத்தாலியில் 9ம் பாப்பரசர் இந்த இயக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் அவர் ஆஸ்திரியாவுக்குத் தப்பிச் செல்லவேண்டி ஏற்பட்டது.

ix. அதேவேளை ஜோசெப் மசினியும் அவருடைய குழுவினரும் பாப்பரசருக்குச் சொந்தமான பிரதேசங்களில் தமது ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டனர்.

x. மெற்றனிக் மீண்டும் போர் தொடுத்து சார்ள்ஸ் அல்பர்ட் மன்னனைத் தோற்கடித்தான்.

xi. சார்ள்ஸ் அல்பர்ட் மன்னன் தனது மகன் 2ம் விக்டர் இம்மானு வேலிடம் சிம்மாசனத்தை ஒப்படைத்தான்.

xii. அதேவேளை தனது அரசை மீட்டுத்தருமாறு பாப்பரசர் ஐரோப்பிய வல்லரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

xiii. 1849ம் பிரான்ஸ் மசினியின் அரசைக் கைப்பற்றி பாப்பரசரிடம் ஒப்படைத்தார்.

xiv. 1848ம் ஆண்டளவில் இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கம் மீண்டும் செயலற்றுப்போனது.

xv. இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல கரிபால்டி சவோய் பிரதேசத்தில் பிறந்த வீரனாக உருவாகிக் கொண்டிருந்தார்.

xvi. மிகச்சிறந்த கொரில்லாப் போராளியான இவர் தனது மனைவியான எனியாவுடன் தனது படைகளைப் பாதுகாத்துக் கொண்டார்.

xvii. இத்தாலியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்துக்கு 2ம் விக்டர் இம்மானுவேல் தலைமை தாங்கி 1850 இல் பல சீர்திருத்தங்களை முன்வைத்தார்.

xviii. 2ம் விக்டர் இம்மானுவேல் தலைமையிலான இயக்கத்துக்கு கவுண்ட் கவூர் அத்திவாரம் இட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xix. கவுன்ட் கவூர் ஓர் புதிய அரசைக் கட்டியெழுப்பும் பொருட்டு மீள்பிறப்பு என்ற நூலை வெளியிட்டார்.

xx. 1852 இல் விக்டர் இம்மானுவேல் மன்னனின் முதலமைச்சராகப் பதவி ஏற்றான்.

xxi. இம்மானுவேல் கைத்தொழில்களை விருத்திசெய்து வீதிகளை நிர்மாணித்து நிதித்துறைச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு இராணுவ பலத்தையும் அதிகரித்தான்.

xxii. இத்தாலியின் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய வெளிநாட்டு வல்லரசைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சித்தான் இம்மானுவேல்.

xxiii. 1854 இல் கவுன்ட் கவூர் கிரிமியன் போரில் ஆஸ்திரியாவை முறியடித்து பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கவனத்தை ஈர்த்தான்.

xxiv. 1858 இல் பிரான்சின் சக்கரவர்த்தி 3ம் நெப்போலியனுக்கும் கவுன்ட் கவூரிற்கும் இடையில் புளொம்பியஸ் என்ற இடத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

xxv. 1859 இல் ஆஸ்திரியா பிரிட்மன்ட் அரசுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தது.

xxvi. 3ம் நெப்போலியனின் உதவியுடன் கவுன்ட் கவூர் ஆஸ்திரியாவை முறியடித்தான்.

xxvii. புளொம்பியஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் இத்தாலியின் நீசுறு மற்றும் சவோய் பிரதேசத்தை பிரான்சிடம் ஒப்படைப்பதற்கு கவூர் உடன்பட்டான்.

xxviii. 1859 - 1860 காலப்பகுதியில் கரிபால்டி இராணுவத்தின் பலத்தை அதிகரித்தான்.

xxix. கரிபால்டி, சிசிலி, நேபிள்ஸ போன்ற பிரதேசங்களை விக்டர் இம்மானுவேல் மன்னனின் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தான்.

xxx. உரோமாபுரியைத்தவிர பாப்பரசரின் அரசையும் வெற்றி கொண்டான்.

xxxi. கரிபால்டி நாட்டின் பிரதமமந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் போராட்டங்கள் இடம்பெற்றபோதும் ஆனால் ஒரு தேசாதிபதியாகவும் இத்தாலியின் ஒற்றுமையை மட்டும் விரும்பியமையால் அதிகாரங்களை மன்னன் விக்டர் இம்மானுவேலிடம் ஒப்படைத்தான்.

xxxii. 1861 இல் வெனிஸ் மற்றும் உரோமாபுரி தவிர இத்தாலியின் ஏனைய அனைத்து பிரதேசங்களும் சாடினிய அரச வம்சத்தின் மன்னன் விக்டர் இமானுவேலின் கீழ் ஒற்றுமைப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xxxiii. 1866 இல் ஜேர்மனியின் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுக்கு எதிராக நடத்திய போரின்பின் ஆஸ்திரியா வெனிஸியாவை இத்தாலியிடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது.

xxxiv. 1870 அளவில் உரோமாபுரியும் இத்தாலி அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது.

xxxv. 1929 இல் பதவியேற்ற 11 ஆவது பயஸ் பாப்பாண்டவர் இத்தாலி ஆட்சியாளனான முசோலினியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

xxxvi. உடன்படிக்கையின் பிரகாரம் சுமார் 1½ சதுரகிலோமீற்றர் பரப்பைக் கொண்ட வத்திக்கான் தோன்றியது. அதுவே உலகின் மிகச்சிறிய அரசாக இன்றும் நிலைத்துவருகிறது.

## ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தல்

29. ஜேர்மனி 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எவ்வாறு காணப்பட்டது?

i. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனி என்ற பெயரில் ஓர் அரசு உருவாகியிருக்கவில்லை.

ii. ஜேர்மனி மொழியைப் பேசிய பல்வேறு சிறு அரசுகளைக் கொண்ட 369 அரசுப் பிரிவுகள் இருந்துவந்தன.

iii. 9ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுய அடையாளம், சுதந்திரம், ஐக்கியம், தேசிய வாதம் என்பன குறித்த பல கருத்துக்கள் ஐரோப்பா எங்கும் பரவிக்கொண்டிருந்தன.

iv. மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளில் பரவி முக்கியம் பெற்றன.

v. 19ம் நூற்றாண்டின் இறுதியிலே இத்தாலியும் ஜேர்மனியும் ஒற்றுமைப்படுத்தப்பட்டன.

30. ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தல் தொடர்பான நெப்போலியனின் நடவடிக்கைகளைத் தருக.

i. நெப்போலியனின் படையெடுப்பு ஜேர்மனியில் தேசிய ஒற்றுமை உணர்வைத் தூண்டியது.
உதாரணம் : 1806 ஜேர்மன் பிரதேசம் மீதான ஆக்கிரமிப்பு

ii. நெப்போலியன் 1806இல் புனித உரோமப் பேரரசை ஒளித்துக் கட்டினான்.

iii. நெப்போலியன் பவேரியா, சக்சனி, ஹெசே போன்ற பிரசேதங் களையும் மற்றும் பன்னிரண்டு சிறிய அரசுகளையும் இணைத்து ரைன் சமஷ்டி அரசை உருவாக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. ரைன் சமஷ்டி அரசுக்குச் சொந்தமான பிரதேசங்களில் பல முக்கிய சீர்திருத்தங்களை முன்வைத்தான்.
v. நெப்போலியனின் சட்டத்தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டு நியாய மான வரிமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டது.
vi. ஐரோப்பிய நாடுகள் இணைந்து நெப்போலியனை தோற்கடித்தன.

31. வியன்னா உடன்படிக்கைக்கும் ஜேர்மனிக்கும் உள்ள தொடர்பைத் தருக.

i. வியன்னா உடன்படிக்கையின் பிரகாரம் ஜேர்மனி 39 அரசுகளாக்கப் பட்டு ஜேர்மனியக் கூட்டாட்சி என்ற பெயரில் புதிய அமைப்பு உருவாக்கபட்டது.
ii. வியன்னா ஜேர்மனியின் ஐக்கியத்தை விரும்பியவர்களுக்கு அல்லது அரசியல் யாப்பு ஆட்சிமுறையை விரும்பியவர்களுக்கோ திருப்தி அளிக்கவில்லை.
iii. ஜேர்மனியில் எழுந்த தாராளவாத எழுச்சிகள் 1819இல் கார்லஸ் பாட் கட்டளைகள் மூலம் அடக்கப்பட்டன.

32. ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தல் நடவடிக்கை இடம்பெற்றபோது ஏற்பட்ட பலம், பலவீனமான நிகழ்வுகளைத் தருக.

பலவீனம்

i. ஆஸ்திரியாவை ஆட்சிசெய்த மெட்டர்நிச் ஜேர்மனிய ஒற்றுமைப் படுத்தும் இயக்கத்தை பலவீனப்படுத்துவதற்கு முயன்றார்.
ii. 1819ல் ஜேர்மன் கூட்டாட்சிக்கூடாக நிறைவேற்றிவைத்த மெட்டர் நிச்சின் அடக்குமுறைச் சட்டங்கள் ஜேர்மனியை ஒற்றுமைப் படுத்தும் இயக்கத்தை பலவீனமடையச் செய்தது.
iii. அதே வேளையில் பிரசியாவில் முக்கியமான உள்ளக மாற்றங்கள் ஏற்பட்டன.

பலம்

i. அதன்பின் படிப்படியாக நவீன கருத்துக்களைக் கொண்ட ஒரு அரசாக மாற்றமடைந்தது.
ii. அந்நாட்டுத்தலைவர்கள் நில மானிய முறையை ஒழித்தனர்.
iii. மத்திய வர்க்கத்தின் அதிகளவில் நிர்வாக நடவடிக்கைகளில் பங்காற்றத் தொடங்கினர்.
iv. யூதர்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்டது.
v. அந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சொல்வரின் (Zollverin) என்ற தீர்வை முறை அதன் முன்னேற்றத்தின்மீது செல்வாக்கு செலுத்து கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. அதனால் பிரசியா வெளிவர்த்தகத்தில் வெற்றிகரமாக ஈடுபட முடிந்தது.

vii. சொல்வரின் வரிமுறை ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கு அவசியமான பொருளாதார சக்தியை வழங்கியது.

viii. 1848ல் ஐரோப்பா எங்கிலும் தோன்றிய புரட்சிகர போக்குகள் ஜேர்மனி பிரதேசங்களிலும் தமது செல்வாக்கைக் கொண்டிருந்தன.

33. தாராளவாத பாராளுமன்ற ஆட்சிமுறை உருவான விதத்தை விளக்குக.

1878ல் ஐரோப்பா எங்கிலும் தோன்றிய புரட்சிகர போக்குகள் ஜேர்மனி பிரதேசங்களில் தமது செல்வாக்கைச் செலுத்தி தாராளவாத பாராளுமன்ற ஆட்சிமுறையை உருவாக்கும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டது. இப்புரட்சிகர நடவடிக்கைக்கு மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த கல்விமான்கள் இவற்றுக்கு தலைமைத்துவத்தை வழங்கியமையால் இதனை வரலாற்று ஆசிரியர்கள் கல்விமான்களின் புரட்சி எனக் குறிப்பிடுகின்றனர். தாராள சிந்தனை கொண்ட கல்விமான்களின் முயற்சி காரணமாக பிரசியாவின் 4ம் பிரட்ரிக் வில்லியம் மன்னன் தாராளவாத பாராளுமன்ற ஆட்சிமுறை ஒன்றை ஸ்தாபித்தான்.

34. பிராங்பேர்ட் பாராளுமன்ற அமைப்பை விளக்குக.

i. ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் பொருட்டு தாராளவாதிகள் பிராங்பேர்ட் பாராளுமன்றம் என்ற பெயரில் ஒரு சபையை நிறுவிக் கொண்டனர்.

ii. அச்சபையில் அனைத்து ஜேர்மனி அரசுகளிலிருந்தும் 500 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

35. பிராங்பேர்ட் பாராளுமன்றம் என்ற பெயரில் உருவான சபை எவ்வாறு விரிவடைந்தது.

i. ஆஸ்திரியாவின் தலைமையில் ஜேர்மனி பிரதேசங்களை ஒற்றுமைப் படுத்தி ஒரு அகன்ற ஜேர்மனியைக் கட்டியெழுப்புவதற்கு எதிர் பார்த்தனர்.

ii. பிரசியாவின் தலைமையில் ஜேர்மன் பிரதேசங்களை இணைத்து ஒரு சிறிய ஜேர்மனியை கட்டியெழுப்புவதே இதன் இரண்டாவது நோக்கமாகும்.

36. ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்திற்கு தலைமைதாங்கிய பிஸ்மார்க்கைப் பற்றி விளக்குக.

பிரசியா வம்சத்தைச் சேர்ந்த பிஸ்மார்க் தீவிரமான தேசியவாதியாகவும் தாராளவாதத்தின் எதிரியாகவும் இருந்தார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசியாவின் தலைமையில் ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தவேண்டும் என நம்பினார்.

37. பிரட்ரிக் வில்லியம் இறந்தபின் சிம்மாசனத்தைக் கைப்பற்றியவன் யார்? அவன் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.

1861 ல் பிரட்ரிக் வில்லியம் இறந்தபின் முதலாம் வில்லியம் மன்னன் (1861 - 1888) சிம்மாசனத்திற்கு வந்தான்.

1. ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியின் மிக முக்கியமான எதிரியாக ஆஸ்திரியா உள்ளது என்ற விடயத்தை முதலாம் வில்லியம் நன்கு புரிந்துகொண்டான்.
2. பாராளுமன்றத்திற்கும் மன்னனுக்கும் இடையில் கருத்து வேறு பாடுகள் தோன்றின.
3. முதலாம் வில்லியம் பிஸ்மார்க்கை அழைத்து சான்ஸ்சலர் பதவியை கொடுத்தான்.
4. தாராளவாதிகள் மீது தொடுக்கப்பட்ட ஒரு கடும் தாக்குதலாக இருந்துவந்தது.

38. பிஸ்மார்க் கூறிய வாசகம் யாது?

"முக்கியமான பிரச்சினைகளை இரத்தத்தின் மூலமும் இரும்பின் மூலமும் மட்டும் தீர்த்துக்கொள்ளமுடியும்" என பகிரங்கமாக கூறினார்.

39. பிஸ்மார்க் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.

1. தாராளவாத பாராளுமன்றத்தை கலைத்தான்.
2. தாராளவாதிகளை அடக்கி பிரசிய இராணுவத்தை முதலில் பலப்படுத்தினான்.
3. இரஷ்யாவுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டான்.
4. டென்மார்க் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு கைப்பற்றினான்.
5. டென்மார்க்கில் ஜேர்மனியர்களே அதிகம் வாழ்கிறார்கள். எதிர் காலத்தில் ஆஸ்திரியாவுடன் போர் ஏற்படலாம் எனக்கருதி மதிநுட்பத்தைப் பயன்படுத்தி டென்மார்க்கை பிரசியாவுக்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையில் பிரிவை ஏற்படுத்தினான்.
6. பிஸ்மார்க் ஆஸ்திரியாவை தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக 1865ல் பிரான்சுடன் ஒரு இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பிரசியா ஆஸ்திரியா போரில் பிரான்ஸ் நடுநிலைமை யாளனாக்கி னார்.
7. இத்தாலியன் கவூருடன் இரகசிய ஒப்பந்தத்தை செய்து இத்தாலி யின் ஆதரவை தன்பக்கம் இழுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இங்கிலாந்தும் நடுநிலை வகிக்கும் என நம்பினார்.
9. 1866 ஆஸ்திரியா போரில் தோற்கடிக்கப்பட்டது. இத்தோல்வியை அடுத்து ஆஸ்திரியா பேரரசு ஆஸ்திரியா ஹங்கேரி என இரண்டாக பிரிந்தது.

40. ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தும் இறுதி நடவடிக்கைகளை தருக.
1. பவேரியா, வூட்டர்பேர்க், பேர்டன் ஆகிய தென்பிரதேச அரசுகளை ஜேர்மனிய கூட்டாட்சியுடன் இணைத்தமை.
2. ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டதனை தொடர்ந்து செல்ஸ்விக், கொல்ஸ்டைன், ஹனோவர், நசொ பிராங்பேர்ட், ஹெசே ஆகிய பிரதேசங்கள் பிரசியாவின் தலைமைத்துவத்தின்கீழ் வந்தமையும் புதிய கூட்டாட்சி உருவாகியமையும்.
3. 1870 - 1871 இல் பிரான்ஸ் பிரசியாவினால் தோற்கடிக்கப்பட்டமை வரலாற்றின் ஒரு மைல் கல்லாகும்.
4. 1871இல் ஏற்பட்ட பிராங்பேர்ட் ஒப்பந்தத்தினால் பல பிரதிகூலங் களை பெற்றது.
5. 1871ல் பிரான்ஸ உடனான பிராங்பேர்ட் உடன்படிக்கை பிஸ்மாக்கின் கனவை நனவாக்கியது.
6. தென் ஜேர்மன் வடஜேர்மன் அரசுகளுடன் இணைக்கப்பட்டு 1871 ஜனவரி 18ல் ஜேர்மனி சாம்ராச்சியம் முதலாவது கைசர் வில்லியத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது.
7. ஜேர்மன் உலக வல்லரசொன்றாக எழுச்சியடைந்து ஜேர்மனி முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் முக்கிய பங்கு வகித்தது.

## இரஷ்யப் புரட்சி

41. இரஷ்யப் புரட்சிக்கு முன் இரஷ்யாவின் சமூக அமைப்பு காணப்பட்ட விதத்தை தருக.
1. மத்திய காலத்தில் இரஷ்யாவின் சமூகம் பெருமளவுக்கு மானிய முறை அம்சங்கள் வேரூன்றி ஒரு சமூக அமைப்பாக காணப்பட்டது.
2. பிரபுகளினதும் பிரதானிகளினதும் அதிகாரம் மேலோங்கி காணப் பட்டன.
3. 19ம் நூற்றாண்டில் உலக நிலப்பரப்பில் $\frac{1}{6}$ பகுதி இரஷ்ய சாம்ராஜ்யமாக விரிந்திருந்தது.
4. சார் மன்னர்களின் எதேச்சதிகாரத்தினால் 97%மான வறிய மக்கள் கடும் துன்பங்களை அனுபவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மகா பீட்டர் மன்னனின் ஆட்சிக்காலத்திலும் (1682 - 1775) கத்தரின் அரசியின் (1762 - 1790) ஆட்சியிலும் முற்போக்கு இயல்பை கொண்ட மாற்றங்கள் ஏற்பட்டன.
6. கூலி விவசாயிகள் பிரபுக்களின் தனிப்பட்ட சொத்தாக இருந்து வந்தனர்.
7. பிரபுக்களும் மதகுருமாரும் பெரும்பாலான நாட்டின் வளங்களை தம்வசம் வைத்திருந்தனர். ஆனால் மொத்த சனத்தொகையில் 1 வீதம் மட்டும் இவர்கள்.
8. நாட்டின் மொத்த வருமானத்தில் $\frac{1}{3}$ பங்கு இரஷ்ய தேவாலயத்திற்கு உரித்தானது.
9. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கைத்தொழில்துறை ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.

42. இரஷ்யப் புரட்சிக்கு முன் ஆட்சிசெய்த மன்னர்களைத் தருக.

| | |
|---|---|
| மகா பீட்டர் | 1682 - 1725 |
| கத்தரின் | 1762 - 1790 |
| 1ம் அலெக்சாண்டர் | 1801 - 1825 |
| 1ம் நிக்கலஸ் | 1825 - 1855 |
| 2ம் அலெக்சாண்டர் | 1855 - 1881 |
| 3ம் அலெக்சாண்டர் | 1881 - 1894 |
| 2ம் நிக்கலஸ் | 1894 - 1917 |

43. இரஷ்யாவின் வடபகுதி நில அடிமைகளை விடுத்து அடிமை முறையை ஒழிக்க ஆதரவு வழங்கியவர் யார்?
1ம் அலெக்சாண்டர்

44. தாராளவாத கருத்துக்களையும் புரட்சிகளையும் அடக்கியவர் யார்?
1ம் நிக்கலஸ்

45. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி "செம்ஸ்ரோவ்ஸ்" சபையை நிறுவினார். இவரை 1881ல் நிகிலிஸ்ற் தீவிரவாதிகள் கொன்றார்கள். அவர் யார்?
2ம் அலெக்சாண்டர்

46. "ஒரு சார்", "ஒரு திருச்சபை", "ஒரு இரஷ்யா" எனக் கூறியவர் யார்?
3ம் அலெக்சா[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. முதலாம் அலெக்ஸ்சான்டரின் ஆலோசகரான மைக்கல் ஸ்பேன்ஸ்கி இரஷ்ய சமூகத்தை எவ்வாறு பிரித்தார்?
பிரபுக்கள் வர்க்கம், மத்திய வர்க்கம், தொழிலாளர் வர்க்கம்

48. இரஷ்யப் புரட்சிக்கு காரணமான சிந்தனையாளர்களைத் தருக.
லெனின், ட்ரொஸ்கி, பிளக்கனோவ்

49. லெனின் இரஷ்யப் புரட்சிக்கு பங்களிப்புச் செய்த விதங்களைத் தருக.
1. சமூக ஜனநாயக இயக்கத்தை ஆரம்பித்தார்.
2. சிறையிலிருந்து மீண்டும் சைபீரியாவிலிருந்து தப்பியோடிய லெனின் "தீப்பொறி" என்ற பத்திரிகையை வெளியிட்டு ஐரோப்பா எங்கும் விநியோகித்தார்.
3. "செய்யவேண்டியது என்ன" என்ற நூலை எழுதி வெளியிட்டார்.
4. தொழிலாளர்களின் தலைமையில் ஒரு சமூக சக்தியை உருவாக்க வேண்டும் என லெனின் கூறினான்.
5. லெனின் கருத்தை ஏற்றவர்கள் பொல்ஷ்விக் என்ற பிரிவையும் ஏற்காதவர் மென்ஷவிக் என்ற பிரிவையும் நிறுவினார்.

50. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இரஷ்யப்புரட்சி தொடர்பாக இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளைத் தருக.
1. 1904இல் சார் மன்னனின் ஆட்சிக்கு எதிராக மக்கள் வலுவான விதத்தில் அணிதிரண்டனர்.
2. சார் மன்னன் நாட்டுக்குள்ளிருந்து மட்டுமன்றி பால்டிக், துருக்கி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து வந்த எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியிருந்தது.
3. 1905 நாட்டில் பாரிய வேலைநிறுத்தம் இடம்பெற்றது.
4. 1905 ஜனவரி 22ம் திகதி ஊர்வலமாக சென்றவர்களை கொசக் குதிரைப் படை சுட்டதில் 370 பேர் இறந்தனர். 1240 பேர் காயமடைந்தனர்.
5. 1912இல் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைக் கொண்டுவரும் பொருட்டு பொல்ஷ்விக் கட்சி ஸ்தாபித்தார்.
6. 1910 மொஸ்கோவில் வேலை நிறுத்தம் இடம்பெற்றது.
7. 1913 வேலைநிறுத்தம் மேலும் தீவிரமடைந்து 12 லட்சம் பேர் ஈடுபட்டனர்.
8. 1914இல் 1ம் உலகப்போரை எதிர்கொண்டது.
9. 1916இல் இரஷ்யாவின் சமூகநிலை மிக மோசமாக சீர்குலைந்தது.
10. 1917இல் பொருட்களின் விலை 200 வீதத்தால் அதிகரித்தது.
11. 1917 பொல்ஷ்விக் கட்சியின் தலைவர் நாடுகடத்தப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 1917 மார்ச் 09ம் திகதி ஆண்கள் பெண்கள் தொழிலாளர்கள், சிப்பாய்கள், பீட்டர்ஸ் பேர்க் வீதிகளில் ஊர்வலமாகச்சென்று தொழிலாளர் உணவு வேண்டும் (பாண்), விவசாயிகள் நிலம் வேண்டும் (காணி), சிப்பாய்கள் சமாதானம் வேண்டும் (அமைதி) என குரலெழுப்பினார்.

13. 1917 மார்ச் 15ம் திகதி மன்னன் சிம்மாசனத்தை துறந்தான்.

14. அரச குடும்பத்தை சேர்ந்த அனைவரும் ஒரு ரயில் வண்டியில் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

15. 1917 அக்டோபர் 24 இல் அமுலுக்கு வரும்விதத்தில் லெனின் குழுவினர் புரட்சிகர அரசாங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டனர். அதனால் இப்புரட்சியை அக்டோபர் புரட்சி எனவும் அழைப்பார்.

16. இப்புரட்சியின்பின் சோஷலிச சோவியத் ஒன்றியம் என்ற பெயருடன் உருவாகியது.

Note : 1991ம் ஆண்டு புரட்சியோடு இரஷ்யா 15 தனி நாடாக பிரிந்துள்ளது.

51. இரஷ்யப் புரட்சியின் பின் லெனின் கூறிய வாசகம் யாது?

"உலகளாவிய பாட்டாளிகள் கட்சியின் முதற்படியில் நிற்கிறோம்" என்றார்.

52. இரஷ்யப்புரட்சிக்கு வழிவகுத்த காரணிகளைத் தருக.

1. சார் மன்னனின் சர்வாதிகார ஆட்சி
2. யுத்தங்கள் புரட்சிக்கு வழிவகுத்தன.
   உதாரணம் : 1904 - 1905 யப்பானுடன் ஏற்பட்ட யுத்தம்
3. முதலாம் உலகப்போரும் அதன் தோல்வியும்
4. இரஷ்யா மக்களின் அவலநிலை
5. மேற்கத்தைய சிந்தனைகள் பரவியமை.
6. கைத்தொழில் பொருளாதார வளர்ச்சியும் மனித உரிமைப் போராட்டமும்.
7. சோஷலிசம் வளர்ச்சியடைந்தமையும் கட்சிகள் தோன்றியமையும்.
8. நாட்டில் வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றமை.

**மூலாதாரங்களால் கட்டப்பட்ட கோபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வெளியீடுகள் கிடைக்கும் புத்தகசாலைகள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
ஆல் சிலோன் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
மக்மிலன் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
மண்டேலா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
கவிதா ஸ்ரோர்ஸ் - வவுனியா
கே.பி.கே புக் சென்ரர் - வவுனியா
ஸ்ரீ சுப்பிரமணிய புக் சென்ரர் - யாழ்ப்பாணம்
பொதிகை புத்தகசாலை - சாவகச்சேரி
துர்க்கையம்மன் புத்தகசாலை - சாவகச்சேரி
கோணேஸ்வரா புத்தகசாலை - சாவகச்சேரி
அறிவமுது புத்தகசாலை - கிளிநொச்சி
புதிய அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
மொடோன் புத்தகசாலை - நெல்லியடி
நாவலர் புத்தகசாலை - மந்திகை
கமலா அன் பிறதேர்ஸ் - பருத்தித்துறை
செல்லாச்சி புத்தகசாலை - பருத்தித்துறை
ரசாக்கியா புத்தகசாலை - திருகோணமலை
ஹப்பி புக் சென்ரர் - திருகோணமலை
பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு - 11
கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62
47
57
83
47
74
33
40
61
504

54
50
77
64
55
58
68
41
37
504

66
13
330
66
490
18
1008

T. Kugapriya
Gr-10e/O/L
History
Kishnakumari


32
61
40
83
46
65
57
48
74
506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100
100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org